கல்கி

KALKI 12.9.2004 ரூ.6.00



அழகன், அழகி, துரத்தும் கனவு!


Vairam Vaibhogam
என்ன தவம் செய்தேனோ!
பிரின்ஸ் டைமண்ட்ஸில் மின்னிட
என்ன தவம் செய்தேனோ !
பிரின்ஸ் வழங்குகிறது பாரம்பரிய வைர நகை கலெக்ஷன்ஸ்! உயர்ந்த ரசனையுடன் உருவாக்கப்பட்ட நெக்லெஸ்கள், காதணிகள், வளையல்கள் மற்றும் பல. ஒரு பேரின்பத்துக்கு தயாராகுங்கள் !
ப்ரத்யேக டைமண்ட் பிரிவு
நம்பகத்திற்கான சான்றிதழ்
•திரும்ப பெறும் உத்திரவாதம்
தோஷம் நீக்கிய வைரங்கள்
PRINCE JEWELLERY
rubecon
ONLY AT CHENNAI: PANAGAL PARK, Tel.: 2436 3137 • G-15A, SPENCER PLAZA, PHASE-I, Tel.: 2849 5817
• Showrooms open on Sundays • Join our jewellery savings scheme • www.princejewellery.com • Valet parking available
• EMI schemes available for purchase on CITIBANK, HSBC and ICICI Bank credit cards. Conditions apply.
NAKSHATRA DIAMOND JEWELLERY
asmi
PLATINUM
Arisia

கல்கி


12.9.2004



எதிர் குரலுக்கு நன்றி!

✉ அக்கிரகாரமாகட்டும், இக்கிரகாரமாகட்டும்! விஷயம் 'காரமானது'தானே...? பிரும்மாஸ்திர ஊடக சினிமாவின் இரட்டை அர்த்தப் பாட்டு, வசனத்தால் சமுதாயம் சீரழிந்து போகிறது என்பதைத் தெளிவாகச் சொல்லி, டாப் ஸ்டார் கமல்ஹாசனின் கருத்துகளை... கையை, காலை, வாலைப் பிடிக்காமல் மோதித் தகர்த்தெறிந்திருக்கும் ஆசிரியர் பக்கம்... டாப்பிலும், டாப் சார்!

கும்பகோணம், சாமிநாத மூர்த்தி.





✉ காளமேகப் புலவர் என்ன பாடினார் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? இவர் பாடுறது 24 மணி நேரமும் எங்கள் வீட்டு ஹாலில்! 'சினிமாவை டெட்டாலில் அலச வேண்டும் என்று கேட்கவில்லை' என்றீர்கள். டெட்டாலிலும் அலச வேண்டும். பெட்ரோல் வாஷ்ும் செய்ய வேண்டும். கமலின் பேச்சுக்கு எதிர்குரல் கொடுத்ததற்கு நன்றி.

சென்னை - 92, குவளை எழில்.

✉ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்ட மன்றத்துக்குச் செல்லத் துணிவு இல்லாவிட்டால், தேர்தலில் அந்த இடத்தைத் தமது கட்சிக்காரர்களிடம் விட்டுக் கொடுப்பது தான் பண்பு. "நான் எப்படி நடந்து கொண்டாலும் மக்கள் என்னைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்" என்று நிரூபிக்கவா தேர்தல் முறை? இவர்களுக்காகச் சப்பைக்கட்டு கட்டத் தயாராகக் காத்திருக்கும் பத்திரிகைகள் (நடுநிலை?) இருக்கும் வரை இந்த நாட்டை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது. தராசு ஒரு பக்கமாகச் சரிகிறது!

பெங்களூர், எஸ்.ஒய். இராமகிருஷ்ணன்.

✉ 'சகா' எழுதிய 'வரம் தருபவர்கள்' கதையில் முருகன் சார்... மனோ... மற்றும் சித்ரா மூவர் உரையாடல், நடவடிக்கை, மனோபாவம் இவை நம்மை ஒருவித சிந்தனையோட்டத்தில் செலுத்தி வரும் போதே... கடைசி பத்து வரிகளில் ஓர் அதிரடித் திருப்பம் தருகிறார் பாருங்கள்... அடடா! அது ரியலி சூப்பர்!

தூத்துக்குடி. பெ. கலாசாமி.

✉ காவல் துறைக்கே 'குல்லா' போட்ட ஜெயலக்ஷ்மி பற்றிய கார்ட்டூன், தூள்!

வேலூர் - 6, வே.ந. கதிர்வேல்.

✉ ஏ.எம். ராஜா - ஜிக்கி கட்டுரை, பூக்கள் நிறைந்த நந்தவனத்துள் 'வாராய் நீ வாராய்'... என எங்களை அழைத்துச் சென்று மகிழ்வித்தது!

திண்டுக்கல், தயா கவிச்சிற்பி.

✉ நடிக - நடிகையரிடம் சீரியல் தலைப்பு சம்பந்தமாகக் கேள்வி கேட்டு, அசத்தல் பதில்களை வாங்



வட்டமேஜை

இத் தந்திருந்த விதம் அபாரம்!

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ 'பேய் வீடு' - போஸ்ட்கார்டு கதை சூப்பர் ஷாக்!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ போஸ்ட் கார்டு சிறுகதைகள், தனித்துவம் பெற்று விளங்குகின்றன. இரண்டு அல்லது மூன்று வெளியிடலாமே!

கோயம்புத்தூர், சீனி. கோவிந்தராசன்.

✉ மிஸ்டர் எக்ஸுக்குத் துணைபோன ஓவியர் மிஸ்டர் ஜெ.க்குப் பாராட்டு!

வியாசர்பாடி, சிம்மவாஹினி.



✉ 'கம்பனில் எம்.பி.ஏ.' என்ற தலைப்பில் டாக்டர் சுதா சேஷய்யன் பேசியதைப் படித்தேன். சுதா என்றுமே மிகவும் அற்புதமாகப் பேசக்கூடியவர்! அதற்கு மேல் சொன்னால், தேன் இனிக்கும் என்று சொல்வது போல் இருக்கும். குரோம்பேட்டை வைணவக் கல்லூரியில் நான் அவருடன் படித்தேன் என்று சொல்வதில், மிகவும் பெருமிதம் கொள்கிறேன். எங்கள் கல்லூரியில் படித்தபோதே அவருடைய பேச்சாற்றலைக் கண்டு வியந்திருக்கிறேன்! எவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்! எக்ஸலண்ட்!

சென்னை - 18, வசுமதி ரவீந்திரன்.

✉ சுதந்திரத்தைக் கொண்டாடும்போதே சிறுவர்கள் பலியான செய்தியைச் சுட்டிக்காட்டி, தீவிரவாதிகளை எதிர்க்கும் சக்தி அரசுக்கு வர வேண்டும் என்று உணர்த்திவிட்டது தலையங்கம். 'சக்திவாய்ந்த போலீஸ்காரனை நம்புவதை விட, சண்டைக்காரனிடம் சரணடைந்து விடுவது மேல் என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிடக் கூடும்' என்ற கடைசி வரி எச்சரிக்கை, சரியான சாட்டையடி!

சென்னை - 91, கவிஞர் அய்யாறு வாசுதேவன்.

✉ ஒரு மனுஷனுக்கு(ள்) இரண்டு மனசு இருக்கும் என்பதை, 'கூரைக்கு மேல் ஒரு வானம்' எவ்வளவு எளிதாக, அழுத்தமாக, யதார்த்தமாக உணர்த்துகிறது!

சென்னை - 49, மயிலை. கோபி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேஜைக்கு

4,5,6 விஷயம்!

வெள்ளை யானை பயணம்!

மலை நாட்டில் உள்ள ஒரே திருமுறைத்தலம் திரு அஞ்சைக்களம். சுந்தரர், ஆடி சுவாதி நன்னாளன்று, இங்கிருந்து கயிலைக்கு வெள்ளை யானையான ஐராவதத்தில் சென்றதாக ஐதீகம். சேரமான் பெருமான் ஆண்ட ஊர், கொடுங்கோளூர். பக்கத்தில் ஒன்றரை கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. சேரமான் பெருமான், சுந்தரரின் நண்பர். இவர் சுந்தரருடன் கயிலைக்குக் குதிரையில் சென்றதாக ஐதீகம். ஒவ்வொரு வருடமும் ஆடி சுவாதிக்கு முதல்நாள்,

கேளுங்க!



குறைகளைக் காது கொடுத்துக் கேளுங்கள். கேட்பதே குணப்படுத்துவது போல்தான். கேட்க ஆள் இல்லாமல் போவதால், இன்னும் இதயங்கள் அழுது கொண்டிருக்கின்றன. கேட்கும் பொறுமை மட்டும் உங்களுக்கு இருந்தால் உங்கள் பெருமை உயர்ந்து விடும்.

ஆதாரம் : கதம்பம்
தகவல் : லக்ஷ்மி சிவகுமார்

எண்ணம் அறிய ஆவல்!

அண்மையில் குடந்தையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிர் இழந்த குழந்தைகளின் பெற்றோர்களில் சிலர், மறுபடி குழந்தைகள் பெற்றுக் கொள்ள விரும்புவதாகவும், அதற்காக அவர்கள் முன்பே செய்துகொண்ட கர்ப்பத் தடைக்கு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்ள விரும்புவதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன. இது போன்ற காரியங்களில் ஈடுபடாமல், அனாதைக் குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கலாம். பல நல்ல காரியங்களைச் செய்துவரும் தஞ்சை மாவட்ட ஆட்சியாளர், மற்றும் சமூக நலத் துறை அதிகாரிகள் இதற்கு ஆவன செய்ய வேண்டும். இதைப் பற்றி கல்கி வாசகர்களின் எண்ணம் என்ன?

- ஜி. வசந்தி,
மும்பை



மா மருந்து!

மௌனமும், அமைதியும் நோய்க்கு மருந்து. நம்முடைய உயிரணுக்களுக்கு நம்மால் அமைதியைக் கொண்டு வர முடிந்தால் நாம் குணம் பெறுவோம்.

- ஸ்ரீ அன்னை,
தகவல் : வயலூர் மு. இராமசாமி



சுந்தரர், சேரமான் சிலைகளை கொடுங்கோளூர் பகவதி கோயிலுக்குக் கொண்டு செல்கிறார்கள். அங்குள்ள மண்டபத்தில் அபிஷேகம் செய்து அலங்கரித்து, யானை, குதிரை வாகனங்களில் வைத்து அஞ்சைக்களத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. தமிழ்நாட்டு முறைப்படி ஆகமபூஜைகள், இந்தச் சமயத்தில் மட்டும், கோவை சேக்கிழார் மன்றத்தினரால் சிறப்பாகச் செய்யப்படுகிறது.

– பி. ராஜகுமாரி, சிதம்பரம்



மண்டை காயுது!

சமீபத்தில் 'ஜெயா டீவி' 'ஜாக்பாட்' நிகழ்ச்சியில், 'ஹாஸ்பிடாலிடி என்ற ஆங்கில வார்த்தைக்குத் தமிழில் பொருள் என்ன?' என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டது. 'விருந்தோம்பல்' என்று சரியான பதில்தான் சொன்னார்கள். ஆனால், அந்த பதில் தவறு என்றும், 'உபசரணை' என்பதுதான் சரியான பதில் என்றும் சொல்லி விட்டார்கள். 'விருந்தோம்பல்' என்பதற்கும், 'உபசரணை' என்பதற்கும் என்ன வித்தியாசம்? யாராவது விளக்கம் தருவார்களா?

- என். பாலகிருஷ்ணன்,
மதுரை



வாரியார் வாக்கு!

செல்வம் மங்களமான காரியத்தால் உண்டாகிறது. உண்டான செல்வம் சாமர்த்தியத்தால் வளர்ச்சியடைகின்றது. வளர்ந்த செல்வம் விரைந்த செய்கையால் வேரூன்றுகிறது. வேரூன்றிய செல்வம் அடக்கத்தால் நிலை பெறுகின்றது.

- ஆர். பிரகாசம்,
மருதாடு

முதல் கார்

புதுக்கோட்டை மன்னர்தான் தமிழகத்தில் முதல் முதலாகக் கார் வாங்கினார். Packard car என அழைக்கப்பட்ட அந்தக் கார் 1901-ல் வாங்கப்பட்டது. அதற்கான பெட்ரோலை ஆஸ்திரேலியாவிலிருந்து வரவழைக்க சிறப்பு அனுமதி வழங்கப்பட்டது.

- பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை

மகளிர் மட்டும்!

புதிதாகத் திறந்த ரயில்வே டிக்கட் கவுண்டரில் 'மகளிர்க்குத் தனி வரிசை கிடையாது' - போர்டு மாட்டப்பட்டிருந்தது. நடுத்தர வயதான, படித்த பெண்மணி தனியாக வரிசையில் நின்றார். ஆண்களுடன் வரிசையில் நின்று கொண்டிருந்த பெண்களையும், "இந்தப் பக்கம் வந்து விடுங்கள்" என்றார். அவர்கள் அந்த போர்டைக் காண்பித்தவுடன், "அவர்கள் அப்படித்தான் ஏதாவது எழுதி வைப்பார்கள்" என்றார் பதிலுக்கு. கவுண்டரில் இருந்த ஊழியருக்கோ கடுங் கோபம். "வரிசையில் வாம்மா" - என இரைந்தார். "இல்லையப்பா, ஒரே தலைசுற்றல்" எனச் சொல்லி, அவரை எரிச்சலடையச் செய்து, டிக்கெட் வாங்கியவுடன் தன்னுடன் வந்திருந்தவரிடம் "வாயில்லாமல் பிழைக்க முடியாது" என ஏதோ சாதித்து விட்டவர் போல, பெருமைப் பட்டுக் கொண்டார். பெண்ணுரிமை, போராட்டமெல்லாம் சரிதான். ஆனால் இப்படி உரிமை மீறும் பெண்களை என்ன சொல்ல?

- கீதா கோபாலன்,
சென்னை



ஒரு பூனை திருட்டுப் போனதற்காகச் சட்டத்தின் உதவியை நாடினால் ஒரு பசுவை விற்கும்படி நேரிடும்.

- சீனப் பழமொழி
- பா. அச்சுதன், வயலூரர்



பெரியோர்களே... தாய்மார்களே!

பாஸு

"அடுத்த புரோகிராம் என்னய்யா?" அமைச்சர் அறிவழகன் தம் பி.ஏ.விடம் கேட்டார்.

"சார்! பாரதி தமிழ்ச்சங்கம் ஏழை, எளிய மக்களுக்கு ஏதோ சாதனங்கள் தர்றாங்க. நீங்க அதை உங்க கையால விநியோகம் செஞ்சுட்டு..." பி.ஏ இழுத்தார்.

"இல்லையே! அடுத்து ஒரு அடிக்கல் நாட்டு விழாதானே? அதுக்காக நான் விக்கிரவாண்டிக்குதானே போகணும்?" இடைவெட்டினார் அமைச்சர்.

"வந்து சார்... தமிழ்ச் சங்கத்துக்காரங்க 'ஐயாவோட பெயரை கேட்காமலேயே அழைப்பிதழில் பெரிசா போட்டுட்டோம். அதுக்காகவாவது அவர் வந்து எங்க மானத்தைக் காப்பாத்தணும்'னு நச்சரிச்சுட்டே இருந்தாங்களா? அதனால நானே இடையிலே இதை சேர்த்துட்டேன். ஒரு அரை மணி நேரத்துல இதை முடிச்சதும் நேரே விக்கிரவாண்டிதான்!" என்றார் பி.ஏ

பாரதி தமிழ்ச் சங்கத்தின் செயலாளர், "பேரன்பு பெரியோர்களே... அமைச்சர், சாதனங்களை வழங்கிவிட்டு தமது உரையைத் தொடங்குவார்!" என மைக்கில் அறிவித்தார்.

அமைச்சர் அறிவழகனின் அரசியல் மூளை வேலை செய்தது. 'சாதனங்களை முதலிலேயே கொடுத்துவிட்டால், பிறகு என் பேச்சைக் கேட்க யாருமே இருக்க மாட்டார்கள். எனவே முதலில் 'மைக்'கைப் பிடித்து அரசியல் எதிரிகளை கடுமையாகச் சாடி உரை நிகழ்த்திவிட்டு கடைசியாக சாதனங்களைத் தரலாம்' மூளையின் கட்டளைப் படியே பேச்சைத் துவக்கினார் அறிவழகன். "சார்!..." என பதறிய படி இடைமறித்த தமிழ்ச் சங்க செயலாளரை நெருப்புப் பார்வை பார்த்ததால், அவர் செய்வதறியாது திகைத்தார்.


தீப்பொறி பறக்க அரைமணி நேரம் பேசிய அமைச்சர், "என்ன சாதனத்தைய்யா நான் தரணும்? உடனே கொடு! அதை மட, மடன்னு தந்துட்டு நான் கிளம்பணும்" என்றார்.

"சார்! இந்த ஹியரிங் எய்டுகளைத்தான் நீங்க தரணும் இங்குள்ள ஜனங்களுக்கு! இதை முதலிலேயே கொடுத்திருந்தால் அவங்க அதை காதுல மாட்டிட்டு உங்க உரையைக் கேட்டிருப்பாங்க!" என்றார் செயலாளர். ○

ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பயந்து

"கவர்னர் மாறினால் ஆட்சியும் கலைக்கப்படும் என்ற பயத்தின் காரணமாகத்தான் அவரை மாற்றக் கூடாது" என்று ஜனாதிபதியிடம் மனு கொடுத்திருக்கிறார்களா?"

"ஜனநாயகத்தின் முக்கிய அங்கங்களில் ஆளுனர் பதவியும் ஒன்று. அப்படிப்பட்ட ஆளுனரை மத்திய அரசு, தன்னுடைய எடுபிடியாகச் செயல்பட வேண்டும் என்று நினைப்பது சிந்தனைக் கோளாறு. ஆளுனர் எப்படி நியமிக்கப்படுகிறாரோ, அதே போன்று தான் உச்சநீதிமன்ற நீதிபதி, தணிக்கைக் குழு தலைவர் மற்றும் மத்திய சர்வீஸ் கமிஷன் தலைவர் ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களை பதவி நீக்கம் செய்ய விதிமுறைகள் இருக்கின்றன. ஆளுனர் தான் தலைமை நீதிபதிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். ஆளுனரைச் சுலபமாக பதவி நீக்கம் செய்து விடுகிறார்கள். ஆனால் ஆளுனரால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்ட தலைமை நீதிபதியைப் பதவியிலிருந்து நீக்க முடியாது. விதிமுறைகள் உண்டு. இது விசித்திரமான நிலைமை. ஆளுநர் நியமனம், பதவி நீக்கம், இட மாற்றம் பற்றி தெளிவான விதிமுறைகள், வழிகாட்டு நெறிகள் தேவை. ஆளுனர், குடியரசுத் தலைவரின் விருப்பப்படி பதவியில் நீடிக்கலாம் என்றால், பல்வேறு விளக்கங்கள் தேவைப் படுகின்றன. குடியரசுத் தலைவரின் விருப்பம் என்பதற்குச் சரியான விளக்கம் என்ன? குடியரசுத் தலைவரின் அதிகாரம் என்பது இந்த விவகாரத்தில் முழுமையானதா? அல்லது வரம்புகளுக்கு உட்பட்டதா? வரம்பு உண்டு என்றால், அது என்ன? ஆளுனர் ஊதியம் மற்றும் இதர படிகள் குறித்து விதிகள் இருக்கின்றன.



• மைத்ரேயன்

இந்தக் கேள்விகளுக்கு விடை காணத்தான் புரட்சித் தலைவி அவர்கள் உச்சநீதி மன்றத்தின் கதவைத் தட்டியிருக்கிறார்கள். குடியரசுத் தலைவரின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். ஆளுனர்களைப் பற்றிய எந்த முடிவுகளும், அவர் அரசியல் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுகிறாரா என்பதை அளவுகோலாக வைத்துத்தான் எடுக்க வேண்டுமே தவிர, கட்சி, தனிநபர், மற்றும் வேறு பல கொள்கைகளுக்கு உட்பட்டவரா என்பதைப் பொறுத்தல்ல.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தின் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்ற பிறகு, தி.மு.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் எப்படியாவது அம்மா ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று நெருக்கடியையும், நிர்பந்தங்களையும் உருவாக்கி வருகின்றன. "சட்டசபையில் ஜனநாயகம் செத்து விட்டது, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது, நிதி நிர்வாகம் ஸ்தம்பித்து விட்டது" என்றெல்லாம் கூக்குரல் எழுப்புகிறார்கள். ஆனால் இவை எதுவும் மக்களிடையே எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. எனவே ஆளுனர் மாற்றம் என்ற ஆயுதத்தைக் கையில் எடுத்திருக்கிறார் கருணாநிதி. கடந்த இரண்டு மாதங்களாக தமிழகத்தில் வெளிவருகிற தினசரி, வார இதழ்கள் அனைத்தும் ஆளுனர் மாற்றம், தி.மு.க., மத்திய அரசில் நிர்பந்தம்' என்றெல்லாம் செய்திகள் வெளியிடுகின்றன. அடுத்த புது ஆளுனராக முன்னாள் உளவுத் துறை தலைவர் ஒருவரை நியமிக்க இருப்பதாகவும், அவர் எதிரணித் தலைவரைச் சந்தித்ததாகவும் கூட செய்திகள் வெளியிடப்பட்டன. இப்படி தொடர்ந்து ஆளுனர் பதவி மீது அவமரியாதை உண்டாக்கும் வகையில் எதிர்கட்சிகளும், பத்திரிகைகளும் செயல்பட்டு வருகின்றன. அந்தப் பதவியையே கேலிக் கூத்தாக மாற்றி விட்டன. எனவேதான் இந்த விஷயத்தில் ஒரு சரியான தீர்வு காண, அம்மா களம் இறங்கி விட்டார். இவை தாம் காரணமே தவிர, ஆளுனரை மாற்றினால் ஆட்சியைக்

ஆளுனருக்கு வக்காலத்தா?

- மைத்ரேயன் மட்டையடி!



கலைத்து விடுவார்கள் என்று பயந்து நாங்கள் இந்த விவகாரத்தைக் கையில் எடுக்க வில்லை. ஆட்சிக் கலைப்புக்கு என்றுமே நாங்கள் பயந்ததில்லை. பொம்மை வழக்கிற்குப் பிறகு ஆட்சிக் கலைப்பு என்பது சுலபமான ஒன்று அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். கருணாநிதி தலைமையில் மூன்று முறை ஆட்சிக்கு வந்த தி.மு.க., இரண்டு முறை கலைக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வந்த தேர்தல்களில் அவர் தோற்றுப் போனதால், மக்கள் கலைப்புக்கு ஒப்புதல் கொடுத்தது போல் ஆயிற்று. ஆனால் ஐந்து முறை ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அ.இ-அ.தி.மு.க. ஒரே முறை தான் கலைக்கப்பட்டது. அப்போதும் தொடர்ந்து வந்த தேர்தலில் வெற்றி பெற்றது. அந்தக் கலைப்பைக் கூட மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மாபெரும் மக்கள் இயக்கமான அ.இ-அ.தி.மு.க இது போன்ற பூச்சாண்டிகளுக்கு என்றுமே பயப்படாது.''

''ஜனாதிபதியிடம் மனு கொடுக்கச் சென்ற போது அந்த குழுவில் சபாநாயகரும் இருந்தது பெரிய சர்ச்சையை உண்டாக்கியிருக்கிறதே?''

''சபாநாயகர், அமைச்சர்கள் பொன்னையன், பன்னீர் செல்வம் மற்றும் நான் ஆகியோர், சட்டமன்றத்தில் ஜனாதிபதி உரையாற்ற வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளத்தான் சென்றோம். நாங்கள் எங்கள் பணியை முடித்துக் கொண்டு ஒதுங்கி விட்டோம். அதன் பிறகு எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், குழுவாக ஆளுனர் விவகாரம் தொடர்பான மனுவை ஜனாதிபதியிடம் கொடுத்தார்கள். எனவே சபாநாயகருக்கும், நாடாளுமன்றக் குழுவினரின் செயல்பாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.''

''வருடத்தில் பதினைந்து நாட்கள் கூட நடைபெறாத சட்டமன்றத்துக்கு வர, ஜனாதிபதி பரிசீலனை செய்ய வேண்டும்'' என்று கருணாநிதி சொல்லியிருக்கிறாரே!''

''சட்டமன்றத்திற்கே வராத கருணாநிதிக்கு இத்தகைய கேள்வி எழுப்பும் உரிமை கொஞ்சம் கூடக் கிடையாது. குறைந்த பட்சம், ஜனாதிபதி உரையாற்றும் போது அவைக்கு வருவாரா? அல்லது வழக்கம் போல புறக்கணிப்பாரா? பதில் சொல்வாரா கருணாநிதி?''

''இவ்வளவு பலமாக எதிர்ப்புக்குரல் கொடுத்தும் ஆளுனரை மாற்றி விட்டால் என்ன செய்வீர்கள்?''

''அத்தைக்கு மீசை முளைத்தால் என்ற அடிப்படையில் கேட்கப்படும் கேள்வி. அப்படி நடந்து விட்டால் நீதித் துறையின் கதவுகளை இன்னமும் பலமாகத் தட்டுவோம். மக்கள் மன்றத்தில் மத்திய அரசின் ஜனநாயக விரோதப் போக்கை விளக்கி விழிப்புணர்வு இயக்கம் நடத்துவோம்.''

டெய்ல் பீஸ்: என்னதான் அ.தி.மு.க. வட்டாரம் சூடியாய்க் கத்தினாலும், ஆளுனர் மாற்றம் நிச்சயம் உண்டு என்று தில்லித் தகவல்கள் சொல்கின்றன. இது சம்பந்தமான கோப்பு பிரதமரின் கையில் இருக்கிறதாம். ஆளும் கூட்டணியின் விருப்பத்தை மீறி ஜனாதிபதி ஏதும் செய்து விட முடியாது என்று சொல்கிறார்கள்!

- ப்ரியன்



கிருஷ்ணவேணி


ஒரு சமயம் மெலட்டூர் ஜி.பாலு பாகவதர், கலாக்ஷேத்திராவில் உஷா பரிணயம், ருக்மிணி கல்யாணம், துருவ சரித்திரம், ருக்மாங்கதா முதலிய நாடகங்களைக் கற்றுக் கொடுத்தார். அப்போது சிறுமிகளான கிருஷ்ணவேணியையும், சாந்தாவையும் (தற்போது சாந்தா தனஞ்ஜயன்) அவரிடம் பயிற்சி பெற அனுப்பினார் ருக்மிணி தேவி. இருவரும் உஷா பரிணயத்தில் உஷா - சித்ரலேகா செய்யும் பாகங்களைக் கற்றுக் கொண்டார்கள். 1957ஆம் ஆண்டு கலை விழாவில் உஷா பரிணயம் செய்வதாகத் தீர்மானமாகி விட்டது. கடைசி வரையில் யார் உஷா, யார் சித்ரலேகா என்று ருக்மிணிதேவி தீர்மானிக்கவே இல்லை. பத்து நாட்களுக்கு முன்பு கிருஷ்ணவேணி உஷா என்றும், சாந்தா சித்ரலேகா என்றும் தீர்மானித்தார். 'அர்த்த பாவத்துடன் அவர்களால் ஆட முடியுமா? அரங்கேற்றம் கூட ஆகாத குழந்தைகளாயிற்றே' என்று பலர் சந்தேகப்பட்டார்கள். ருக்மிணி தேவி நம்பிக்கையோடு இருந்தார். 'உஷா பரிணயம்' மிகச் சிறப்பாக நடைபெற்றது. இருவருமே உற்சாகமாக நடனம் ஆடி மகிழ்வித்தார்கள்.

தமிழாசிரியரான தந்தை அனந்த நாராயண ஐயருடன் சிறுமியாக கலாக்ஷேத்ராவுக்கு வந்து சேர்ந்தார் கிருஷ்ணவேணி. 'கலை மாமணி', 'நிருத்ய சூடாமணி', 'அருங்கலைச் செல்வி' என்ற பட்டங்களெல்லாம் பெறும் அளவுக்கு உயர்ந்தார். கிருஷ்ணவேணியின் கணவர் லகுமணனை, 'கலாக்ஷேத்ரா மாப்பிள்ளை' என்றே அழைப்பார் ருக்மிணி தேவி. அவ்வளவு ஆதரவு! பல தேசங்களில் நடனம் ஆடியிருக்கிறார். நட்டுவாங்கம் செய்வதில் வல்லவர். நாட்டியத்தின் ஒவ்வொரு பிரிவிலும் தனி முத்திரை பதித்தவர்.

'சபரிமோக்ஷம்' அரங்கேறியபோது, கிருஷ்ணவேணி மாய மானாக சீதையை மயக்கியதும், பிறகு ராமபிரானைக் காட்டில் அலையவிட்டு பாய்ச்சல் காட்டியதும், அவர் வில்லை எடுத்ததும் அலமந்து ஓடியதும் அத்தனை நளினம். அழகு பொருந்திய பொன்மான், மாயமான் என்பது நன்றாகத் தெரியும்படி முகபாவங்களினாலும், சதங்கை ஒலியாலும் தெரியக் காட்டி, கள்ளத்தனம், பயம் முதலிய உணர்ச்சிகளும் தெரியும்படி நடனம் செய்தது, அவர் திறமையைக் காட்டியது.

கிருஷ்ணவேணி மறைந்தாலும் கலைமகளின் சந்நிதியில் என்றும் நடனமாடிக் கொண்டிருப்பார்.

- ஆனந்தி



வேண்டாம் வனநாயகம்!

சகிப்புத் தன்மை என்பது மக்களாட்சியின் அஸ்திவாரம். அதனால்தான் நாடாளுமன்றத்தில் எதிர்கட்சியினர் அமர வழி வகை செய்கிறது அரசியல் சாசனம். இல்லாவிட்டால், மாற்றுக் கருத்துகளுக்கே இடமின்றி ஒருதலைப்பட்சமான பார்வையில் முடிவுகள் எடுக்கப்பட்டு, ஒரு கொடுங்கோலாட்சியினும் மோசமாக ஜனநாயகம் செயல்படுத்தப்படும் அபாயம் இருக் கிறது.

ஆனால், இன்று நம் நாட்டில் சகிப்புத் தன்மை தினம் தினம் செருப்படி வாங்கிக் கொண்டிருக்கிறது.

மத அடிப்படைவாதிகள், சகிப்புத்தன்மைக்குச் சமாதிகட்டி, உலகத்தையே வன்முறையால் அச்சுறுத்தி, அழித்து வருவதைப் பார்க்கிறோம். மத அடிப்படைவாதத்தின் கூறுகளை அரசியலுக்குக் கொண்டு வந்திருக்கும் அரசியல்வாதிகள், கூடவே அதன் சகிப்பின்மையையும் தாராளமாக இறக்குமதி செய்து, ஜனநாயகத்தை அர்த்தமற்ற, அபத்த நாடகமாக்கி வருகிறார்கள்.

நாடாளுமன்றத்தைக் குழாயடிச் சண்டை ஸ்தலமாக அரசியல்வாதிகள் மாற்றி வருவது ஒருபுறமிருக்கட்டும்; மணிசங்கர் அய்யர் விவகாரத்தை எடுத்துக் கொள்வோம்... சாவர்க்கர் பற்றிய வாசகங்களை அந்தமான் சிறையிலிருந்து அகற்ற அவர் உத்தரவிட்டது அனாவசிய அதிகப்பிரசங்கம்தான்.



கல்கி



2004 செப்டெம்பர் 12
தாரண ஆவணி 27
மலர் : 63
இதழ் : 7

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




சாவர்க்கர் சுதந்திரப் போராட்ட வீரர்; அந்தமானில் சிறை வைக்கப்பட்டார்; சாட்டையடி வாங்கினார் என்பது வரலாற்று உண்மை. அவரது புரட்சிப் பாதை நமக்கு ஏற்புடையதாக இல்லாமல் போகலாம். கடந்த காலத்தில் அவர் மீது சில குற்றச்சாட்டுகளும் இருந்திருக்கலாம். ஆனால், பா.ஜ.கவால் அவர் ஆராதிக்கப் படுபவர். அந்தக் காரணத்துக்காகவே அவரை எப்படியேனும் அவமானப்படுத்த வேண் டும் என்று செயல்படுவது சகிப்புத்தன்மையற்ற வன்மச் செயல்.

சரி, மணிசங்கர் அய்யர்தான் சகிப்புத்தன்மையின்றிச் சிறுபிள்ளைத்தனமாக ஏதோ செய்கிறார் என்று விடாமல், சிவசேனா அமைப்பு, தனது ஆத்திரத்தை அதைவிட அசிங்கமாக வெளிப்படுத்துகிறது. மணிசங்கர் அய்யர் பொம்மை செய்து வைத்து, அதன் தலைவர்களும் தொண்டர்களும் அதைச் செருப்பால் அடிக்கிறார்கள்! ஏதோ ஒரு கணத்தின் உணர்ச்சி மிகுதியால் இவ்வாறு செய்தால்கூட மன்னித்து விடலாம்; ஆனால் நாடு முழுவதும் திட்டமிட்ட செருப்படிப் போராட்டம் என்பது, சகிப்புத் தன்மைக்கு வழங்கப்படும் திட்டமிட்ட செருப்படியே!

சிபு ஸோரன் பேரிலான வழக்கு உயிர்ப்பிக்கப்பட்டதைச் சகியாமல், உமாபாரதி பேரிலான வழக்கு உயிர்ப்பிக்கப்படுவது; அதைச் சகிக்க இயலாமல் அவர் பெரும் நாடகம் போடுவது; அவர் சிறை வைக்கப்பட்டதும் மீண்டும் வழக்கு வாபஸ் பெறப் படுவது; அதற்கான நீதிமன்ற உத்தரவு வரும்வரை பொறுக்கச் சகியாமல், அத்வானி சத்தியாகிரஹம் செய்வது... என்று சகிப்பின்மையின் சங்கிலித் தொடர் நீண்டு கொண்டே போகிறது.

இத்தனை ரகளையால் நாட்டுக்கோ, மக்களின் சிந்தனைப் பெருக்கத்துக்கோ ஏதேனும் உபயோகம் இருக்குமா என்றால், பூஜ்யம்! அதைவிடப் பெரிய அபாயம் என்னவெனில், இந்தச் சகிப்பின்மை தலைவர்களிடமிருந்து தொண்டர்களுக்குப் பரவி, சமுதாயத்தையே ஊடுருவி நாசமாக்கிக் கொண்டிருக்கிறது என்பது தான்.



ஒரு முஸ்லிம் மதக் கோட்பாடை எதிர்த்து எழுதிய 'ஹமாரா மஹாநகர்' இதழின் ஆசிரியர் சஜித் ரஷீத், கத்தியால் குத்தப்பட்டுக் காயமடைந்தார். நிகில் வாக்லே (மஹாநகர் ஆசிரியர்) மற்றும் இரு பத்திரிகையாளர்கள், ஓர் அரசியல்வாதியை விமர்சித்ததற்காகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த 'நல்ல' காரியத்தைச் சிவ சைனிக்குகள் செய்ததாகத் தெரிய வருகிறது. தலைவர்கள் எட்டடி பாய்ந்தால், தொண்டர்கள் பதினாறடி பாய்கிறார்கள்! உணர்ச்சிகள் தூண்டப்பட்ட நிலையில், மக்களும் இந்தத் தவறான வழிகாட்டலையே பின்பற்றுவார்கள்.

பத்திரிகை விமர்சனங்களைத் தாங்க முடியாமல் தாக்கி நொறுக்குவது; மான நஷ்ட வழக்கு தொடர்வது தமிழ்நாட்டிலும் சர்வ சகஜமாகிவிட்டது. இங்கேயும் (வேறு பல மாநிலங்களிலும்தான்) அரசியல் தலைவர்களின் சகிப்பின்மையே ராஜபாட்டை அமைக்கிறது. தி.மு.க - அ.தி.மு.கவினர் பரஸ்பரம் எந்த விமர்சனத்தையாவது நடுநிலையாக அணுகி ஏற்றிருக்கிறார்களா...? தனிநபர் விரோதங்களைத் திரும்பத் திரும்ப நினைவூட்டும் வகையில் அரசியல் செய்துவரும் இக் கட்சிகளின் சகிப்பின்மை, மக்களிடையேயும் ஊடுருவுகிறது. 'விமர்சனத்தைச் சகித்துச் சிந்திப்பவன் சப்பாணி; சகியாமல் எதிர்த்து, சொல்லாலோ கல்லாலோ தாக்குபவன் வீரன்' என்கிற தவறான அரசியல் சித்தாந்தமே சமூக நியதியாகிவிடுகிறது!

கடைசியில் நம் சமுதாயம், மாற்றுக் கருத்துகளுக்கான சகிப்புத்தன்மையை இழந்துவிட்டு, விமர்சனங்களுக்கான சகிப்புத்தன்மையைத் தொலைத்துவிட்டு, தார்மிகத் தவறுகளையும், அநீதிகளையும், சீர்கேடுகளையும் தட்டிக் கேட்காமல் சூடு சுரணையின்றிச் சகித்துக் கொள்ளும் இழி நிலைக்குத் தள்ளப்படும்.

"உன் கருத்தை நான் ஏற்கவில்லை; ஆனால் உன் கருத்தை வெளியிட உனக்குள்ள உரிமையை மதிக்கிறேன்" என்பதுதான் ஜனநாயகம். இன்று இந்தியாவில் நாம் காண்பதோ 'might is right' என்கிற வனநாயகம்! ○

உறவுகள்!

போஸ்ட் கார்ட் கதை

"அட... ராசா, எங்களை விட்டுப் போயிட்டியே, எங்களயெல்லாம் அனாதையாக்கிட்டியே...! ம்... ம்... ம்" கூடி அழுது கொண்டிருந்தது உறவுகளும், வீதி பந்தங்களும்!

அப்பொழுதுதான் சைரன் அடித்துக் கொண்டு, வீதியில் வந்து நின்றது, தண்ணீர் லாரி...!

அழுத விழிகளும், கூடி நின்ற அனுதாபங்களும் முண்டியடித்து தண்ணீர் லாரியின் பின் குடங்களுடன் ஓட... பிணம் அனாதையாக!

அகவலன்




கட்டிலா? தொட்டிலா?



நடிகை ரஞ்சிதாவை அடிக்கடி விமான நிலையத்திலேயே பார்க்க நேர்ந்ததால், ஏதோ ஏர் இந்தியாவில் தான் வேலைக்குச் சேர்ந்து விட்டாரோ என்று விசாரித்தால்... மிஸஸ் ராகேஷ், பிஸியாக ஜெய்பூருக்கும், சென்னைக்குமாகப் பறந்து கொண்டிருப்பது தெரியவந்தது.

'ரோஜா' தொடர் ஜெயா டீவியில் முந்நூறு எபிஸோடுகளைக் கடந்து பரபரப்பாக ஒளிபரப்பாகிக்கிட்டிருக்கே! நான் வேல செஞ்சதுலேயே ரொம்ப ப்ரொஃபஷனல் டீம்னா அது ஏவிஎம் தான். அதனாலே பிரச்னையே இல்லை. காலையிலே ஜெய்பூர்லே ஃபிளைட் பிடிச்சா, லஞ்சுக்கு சென்னை வந்துடுவேன். ஸ்கிரிப்ட் எல்லாம் ரெடியா இருக்கும். ஒரு வாரம் தொடர்ந்து நடிச்சுக் கொடுத்துட்டு, வீக் எண்டுல வீட்டுக்காரரைக் கவனிச்சுக்கப் போயிடுவேன்" என்றார்.

இளம் தொழிலதிபர் மகேஷின் மனைவி ரோஜா. மனைவியின் நடத்தையில் சந்தேகப்படும் மகேஷ், ஸ்நேகாவைக் காதலித்து, திருமணம் வரை சென்று விடுகிறான். திருமணத்துக்கு முன் ரோஜா மீதிருந்த சந்தேகம் தீர்ந்து, மறுபடி ரோஜாவிடமே திரும்புகிறான். மகேஷால் ஏமாற்றப்பட்ட ஸ்நேகா சும்மா விடுவாளா? சதி, பதி, விதி என கதை. கட்டிலை விட்டுத் தருவதா, தொட்டிலை விட்டுத் தருவதா என்று ரோஜா போராடுகிறாள்.



• 'ரோஜா' தொடரில் ரிஷி, ரஞ்சிதா

இந்தக் கதையைச் சொன்ன ரஞ்சிதா, "நிஜத்தில், சீரியல்ல வர்ற ரோஜா கேரக்டருக்கு படு ஆபோஸிட் நான். சந்தேகப்பட்டு பிரிஞ்சு போன புருஷன் மனம் திருந்தி வந்தா, நிச்சயம் ஏத்துக்க மாட்டேன். ஆனால் இப்பவும் 'ரோஜா, ஸ்நேகா' மாதிரியான பெண்கள் இருக்காங்க. விறுவிறுப்பா, எமோஷனல் பலப்பரீட்சையோட, கதை இருக்கிறதனாலே, இரவு எட்டரை மணிக்குப் பெண்கள், டீவி முன்னால ஆஜர் ஆயிடுறாங்க" என்று கண்ணீர் கர்ச்சீப்புக்களுக்கு ஆதரவாக வோட்டுப் போட்டார் ரஞ்சிதா.

- ஆதர்ஷ்

ஷாக்!



ஒரே ஒரு வார்த்தை, அதை உச்சரித்ததும் யார் யாருக்கு ஷாக் அடிக்கும்?

அம்மா: அ.இ.அ.தி.மு.க. அடிமட்டத் தொண்டனிலிருந்து மேல்மட்ட அமைச்சர்கள் வரை!

எஸ்மா: அரசு ஊழியர்கள் முதற்கொண்டு சாதாரண ஊழியர்கள் வரை!

ஜெயலக்ஷ்மி : ஸ்காட்லாண்ட் யார்டு போலீஸையும் விஞ்சும், தமிழ்நாட்டு காவல் துறைக்கு!

தனுஷ் : ஓடி ஓடி, கோடி கோடியாய்ப் பணத்தைக் கொடுத்துவிட்டு, கஷ்டமும், நஷ்டமும் பட்டுக் கொண்டிருக்கிற பட அதிபர்களுக்கு!

சுபாஷண்ரெட்டி : கறுப்புக் கோட்டு அணிந்து போராடும் வழக்கறிஞர்களுக்கு!

உயில் : இந்திய முதல் கோடீஸ்வரர் பிர்லா குடும்பத்தினர்க்கு!

மண்குவளை : பிளாஸ்டிக் கப் தயாரிப்பாளர்களுக்கு!

முத்திரைத்தாள் : சமீப காலங்களில் சொத்து வாங்கிய இந்திய சிட்டிசன்களுக்கு!

கூரை : கொட்டகை கல்வியாளர்களுக்கு!

கலைப்பு : ஆட்சிப் பதவியில் அடி வயிற்றில் நெருப்போடு இருப்பவர்களுக்கு! ஏன், சொல்லிச் சொல்லி ஏமாற்றமடைபவர்களுக்கும்தான்!

லல்லு : இந்திய ரயில்வேயின் தண்டவாளம் முதல் தலைமையகம் வரை!

கஸ்டம்ஸ் : அயல்நாட்டுப் பயணம் மேற்கொள்ளும் அமைச்சர்களுக்கு!

குற்றப் பின்னணி : ஆட்சியில் பதவிக்கனியைப் பறித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், பறிக்கக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கும்!

தண்ணீர் : ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும்!

- ரத்னபாரதி

பித்ரு தோஷ நிவர்த்தி ஸ்தலமான ராமேஸ்வரத்தில் மஹாளயபக்ஷ அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

மூதாதையருக்கு திதி செய்ய மறந்தவர்களுக்கும் திதி-தர்ப்பணம் செய்யத் தவறியவர்களுக்கும் பித்ரு கடன் நிறைவேற்ற ஏற்ற காலம் மஹாளயபக்ஷ அமாவாஸையே! மஹாளயபக்ஷ அமாவாஸையில் அன்னதானம் செய்வதால் பித்ருக்களுக்குப் பூரண திருப்தி ஏற்பட்டு அவர்கள் தம் சந்ததிகளுக்கு பூரண ஆயுள், நல்ல ஆரோக்கியம், தர்ம சிந்தனையும் ஆரோக்கியமும் உள்ள சந்ததிகள், செல்வ வளம், நிம்மதி, குறைகளில்லாத வாழ்க்கை ஆகியவற்றை அளிக்கிறார்கள். பல பிறவிகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் வினைகளும் இப்பிறவியில் ஏற்பட்ட வினைகளும் விலகி ஆனந்தமும் நல்வாழ்வும் கிடைக்கின்றன. ஆகவே, இராமேஸ்வரம் போன்ற புனித க்ஷேத்திரங்களில் அன்னதானம் செய்து மகத்தான பலனைப் பெறலாம்.

அன்புடையீர், நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ஸ்ரீ இராமனும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும், முனிவர்கள் பலரும் இங்கு வந்து நீராடியதால் இராமேஸ்வரம் க்ஷேத்ரத்திற்கு மென்மேலும் பெருமை உண்டு. இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வது சிறப்பு.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக வடை, பாயசத்துடன் அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் 6 மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் 1 வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் இதழ் 5 ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு, அனைவருக்கும் ஏற்ற 38 வகையான பூஜா ஸ்தோத்திரங்கள் அடங்கிய 'கிரி' வெளியீடான 'ஸ்தோத்திர மாலை' புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.
★ **ரூ.1000, ரூ.5000** அனுப்பும் அன்பர்களுக்கு இராமேஸ்வரத்தில் பூஜிக்கப்பட்ட வெள்ளி டாலர், ஸ்வாமி படம் மஹாளயபக்ஷ அமாவாஸைக்குப் பின்னர் பிரஸாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

மஹாளயபக்ஷத்தில் பித்ரு லோகத்தில் உள்ள முன்னோர்கள், யமதர்ம ராஜனின் அனுமதி பெற்று பூலோகத்திற்கு வந்து தாமே விரும்பித் தம் சந்ததியினர் கொடுப்பதை முழுத் திருப்தியுடன் ஏற்றுக் கொள்வார்கள் என்று சாஸ்த்திரங்கள் கூறுவதால் வஸ்த்ர தானமும் செய்வது சிறப்பு. வஸ்த்ர தானம் செய்ய விரும்பும் அன்பர்கள் ஒரு வேஷ்டி, துண்டு அல்லது ஒரு புடவைக்கான தொகை ரூ. 108 அனுப்பினால் அவர்கள் சார்பாக வஸ்த்ர தானம் செய்து பிரஸாதம் அனுப்பி வைக்கப்படும். மனநிம்மதி அன்னதானத்திலும் வஸ்த்ர தானத்திலும் கிடைக்கிறது.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் GOPURA DHARISANAM ANNA DHANA CHARITABLE TRUST, CHENNAI-41 என்ற பெயரில் CHEQUE / D.D. / M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனிதமான அன்னதான ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :



கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை
GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, RAGAM APTS., I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA
☎ : (044) 24900303, 24900603, 24416122 Mobile : 94441 16300

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது. ★ ஸர்வேஜனா : ஸுகினோபவந்து

பள்ளி, கல்லூரிகளில் படித்த நாட்களில், 'எந்த அயல் நாட்டுக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்ள விரும்புகிறீர்கள்?' என்ற கேள்வி எழுந்தபோதெல்லாம், 'எகிப்து', 'சீனா', அப்புறம் 'அமெரிக்கா' என்று நான் மட்டுமல்ல, என் சிநேகிதிகளில் பலரும் கூடக் கண்கள் குடையாய் விரிய, ஒரே பதிலைத் தொடர்ந்து கூறியிருக்கிறோம்! நவீன விஞ்ஞானத்திலும், நாகரிகத்திலும், வசதியிலும் வளர்ந்து விட்ட அமெரிக்காவைக் காட்டிலும், ஐயாயிரம் ஆண்டுச் சரித்திரத்தைத் தன்னுள் அடக்கிய எகிப்தும் சீனாவும் மாணவிகளாக இருந்த எங்களை ஈர்த்திருந்தது நிஜம். அதுவும், எகிப்து - மேகக் கூட்டத்தை முட்டியவாறு கடந்த கால நிகழ்வுகளுக்கு சாட்சியாய் நிற்கும் பிரமிடுகள், கம்பீரமான சிங்கமுக ஸ்பிங்ஸ், உலகிலேயே நீளமான நதி என்ற பெருமையைத் தட்டிக் கொண்ட நைல், அதில் பவனி வந்த உலகப் பேரழகி கிளியோபாட்ரா, முகங்களை சல்லாத் துணி மூட, இடை எங்கே என்று தேடும் படியான உடல்களைக் கொண்ட பெண்கள் ஆடும் 'பெல்லி டான்ஸ்', அரபு நாடுகளுக்கே உரித்தான சாம்பிராணிப்புகை, அத்தர் மணம், கண்ணுக்கெட்டிய வரை பரந்து விரிந்திருக்கும் பாலைவனங்கள், அவற்றில் வரிசையாய்ச் செல்லும் பாலைவனக் கப்பல்கள், புகழ்பெற்ற ரத்தினக் கம்பளங்கள், பபைரஸ் ஓவியங்கள்... என்று நாங்கள் படித்து, கேட்டுத் தெரிந்து கொண்ட ஏராளமான விவரங்கள், எகிப்து நாடு குறித்து அந்த இளம் பிராயத்தில் உண்டு பண்ணியிருந்த அழகான கனவு, எங்களில் எத்தனை பேருக்கு பலித்திருக்கிறது என்று தெரியாது; ஆனால் எனக்கு? இரண்டு முறை.

ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களின் அழைப்பை ஏற்று 1991ம் ஆண்டு சென்றபோது, கூட்டங்களை முடித்துக் கொண்டு, தனி ஆளாய், ஐந்து நாட்களுக்கு எகிப்துக்குச் சென்று வந்தது முதல் முறை. சென்ற மாதம் எஸ்.ஓ.டி.ஸி. என்ற டிராவல் கம்பெனி மூலம், தோழி பிரியா நாராயணுடன் எகிப்துக்கும், கொசுறாகத் துருக்கி நாட்டுக்கும் சென்று வந்தது இரண்டாம் முறை.

எஸ்.ஓ.டி.ஸி. நிறுவனத்தார் ஒரு நல்ல பயணத்திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஒருதரம் அவர்கள் மூலம் ஏதாவது வெளி நாட்டுக்குச் சென்று வந்த பிறகு, குறிப்பிட்ட பணம் செலுத்தி 'டிராவல் க்ளப்'பில் அங்கத்தினர் ஆகிவிட்டால், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு, வருஷத்துக்கு ஒரு முறை அவர்கள் கைகாட்டும் எட்டு நாடுகளில் ஏதேனும் ஒன்றிற்கு,





இலவசமாய் (வரிகள், விசா கட்டணம், இத்தியாதிகளை நாம்தான் செலுத்த வேண்டும்) சென்று வரலாம்! அதாவது, நாம் ஆஸ்திரேலியாவுக்குப் போகத் தீர்மானித்துக் கிளம்பினால், விமானத்தில் அழைத்துச் சென்று ஒரு நாள் அங்கு அவர்கள் செலவில் தங்கச் செய்து, அதற்கும் மறுநாள் மீண்டும் இங்கு அழைத்து வந்து விடுவார்கள்! இதில் விமானச் செலவும், அங்கு ஓட்டலில் தங்கும் செலவும் நமக்கு முழுசாய் மிச்சமாகும்! ஆனால், அத்தனை தொலைவு செல்பவர்கள், போன மச்சான் திரும்பி வந்தான் என்று உடனே திரும்ப விரும்பாததால், உபரிப்பணம் செலுத்தி, அவர்கள் ஏற்பாடு செய்யும் சுற்றுலாப் பயணத்தை - add on itinerary - செய்வது வழக்கமாயிருக்கிறது.

பிரியாவும் நானும் இத்திட்டத்தின் மூலம் முதல் வருஷம் ஸ்விட்ஜர்லாந்துக்கும், இரண்டாம் வருஷம் கென்யா, தென்னாப்பிரிக்கா, ஜிம்பாப்வே நாடுகளுக்கும் சென்று விட்டு, இந்த வருஷம் எகிப்து, துருக்கி பயணத்தைத் தேர்ந்தெடுத்தோம். முதல் தடவை எகிப்துக்குச் சென்றபோது தனியாய் இருந்த காரணத்தால், கெய்ரோ, அலெக்ஸாண்ட்ரியா நகரங்களுக்கு மட்டுமே என்னால் பயணிக்க முடிந்தது. அதாவது, எகிப்தின் தலைப்பகுதியை மட்டுமே கண்டுகளிக்க முடிந்தது. இந்தப் பயணத்தில் நைல் நதியில் நான்கு நாட்கள் உலா வருவதன் மூலம் தென்கோடியில் உள்ள அஸ்வான் நகரில் துவங்கி, நைல் நதிப் பள்ளத்தாக்கை ஒட்டியுள்ள அனைத்து முக்கியப் புராதனச் சின்னங்களையும் பார்க்க முடியும் என்பது, இந்தப் பயணத்தைத் தேர்வு செய்யத் தூண்டியது.

சென்னையிலிருந்து பம்பாய்க்குச் சென்று, சர்வதேச விமானக் கூடத்தில் எகிப்து





சிவசங்கரி



விமானத்தில் பயணச்சீட்டுப் பெற முனைந்தபோது, அதிர்ஷ்ட தேவதை எங்களைப் பார்த்து இலேசாகப் புன்னகை செய்தாள். அங்கிருந்த ஆபீஸருக்கு என்ன தோன்றியதோ, எங்களைப் பார்த்ததும் "முதல் வகுப்புக்கு மாற்றிக் கொள்ள விருப்பமா? ஒருவருக்கு வெறும் 2500 ரூபாய்தான்!" என, கேட்டதை நம்ப மாட்டாமல் நாங்கள் விழித்தோம். பின்னே? எகானமி வகுப்பை விட நாற்பது ஆயிரம் கூடுதலாகக் கொடுத்து, முதல் வகுப்பில் பயணிப்பதை அவர் 2500க்குத் தருகிறேன் என்றால், திகைக்காமல் என்ன செய்ய! அந்த ஆபீஸர் மனசை மாற்றிக் கொள்ளும் முன், போக வர முதல் வகுப்புக்கு உபரிப்பணம் கொடுத்து டிக்கெட்டிலும் பதிவு செய்து கொண்டு, ஏழு மணி நேரம் படு வசதியாகப் பயணித்ததில், போகும்போதும் சரி, வரும்போதும் சரி, பயண அலுப்பு எங்களைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை!

மும்பையிலிருந்து ஷார்ஜா வழியாகக் கெய்ரோ போகும் நேரத்தில், எகிப்தின் ஐயாயிர வருஷ வரலாற்றைக் குட்டியாகத் தெரிந்து கொண்டு விடலாமா?

பொதுவாக ஆய்வாளர்கள் எகிப்தின் வரலாற்றை அரசபரம்பரையின் ஆட்சிக்கு முன் (கி.மு.5000), ஆரம்பக்கால அரச பரம்பரை (கி.மு. 2920 - 2575), பழைய அரச பரம்பரை (கி.மு. 2575 - 2134), மத்திய அரச பரம்பரை (கி.மு. 2050 - 1786), புதிய அரச பரம்பரை (கி.மு.1550 - 1070), கிரேக்கர்கள் காலம் (Ptolemaic Era - கி.மு. 332 - 30), ரோமானியர் காலம் (கி.மு. 30 - கி.பி. 640), அரேபியர்கள் காலம் (கி.பி. 640 - 1517), ஓட்டோமான் காலம் (Ottomon- கி.பி. 1517 - 1798) என்று கட்டம் கட்டிக் கொண்டே வந்து, 1952-லிருந்து எகிப்தின் நவீனக் காலம் துவங்கியது என்று குறிப்பிடுகிறார்கள். கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த மெனேதோ (Menetho) என்ற எகிப்து மதகுரு எழுதி, நமக்குக் கிடைத்துள்ள குறிப்புகளின்படி, அந்நாட்டை ஆதி நாளிலிருந்து சுமார் முப்பது அரச பரம்பரைகள் ஆண்டு வந்த விவரங்கள் தெரிய வருகின்றன. மூன்றாம் அரச பரம்பரையைச் சார்ந்த ஜோஸர், (Zoser), கிறிஸ்து பிறப்பதற்கு 2700 ஆண்டுகளுக்கு முன், கட்டட நிபுணர் இம்ஹோடெப் (Imhoteb) இன் உதவியுடன் சக்காரா என்ற இடத்தில் கட்டிய முதல் 'படிக்கட்டு பிரமிட்'டும், பின்னர் பழைய அரச பரம்பரையைச் சார்ந்த கியாப்ஸ், அவரது மகன், பேரன், கீஸா (Giza) என்ற இடத்தில் கட்டிய பிரமிடுகளும், ஸ்பிங்ஸ் (Sphinx), மற்றும் பல ஆலயங்களும் நான்காயிர வருஷ சரித்திரத்தின் சான்றுகளாக இன்னமும் நிலைத்திருப்பது, பிரமிக்க வைக்கும் உண்மைகள். கிரேக்கர்களின் படையெடுப்பு நிகழும்வரை அந்த மண்ணில் கோலோச்சிய மன்னர்கள், சூரிய, சந்திரர்கள், நைல் நதி, இயற்கை மற்றும் மிருகத்தலை கொண்ட மனிதர்களைக் கடவுளாகக் கருதி வழிபட்டதில், பின்னர் நாட்டைக் கைப்பற்றிய கிரேக்கர்களும், ரோமானியர்களும், ஆதி எகிப்தியர் நம்பிக்கைகளை 'பேகன் வழிபாடு' (Pagan Cult) என்று அழைத்தார்கள். இந்த பேகன் வழிபாடு, வழிபடப்பட்ட கடவுள்கள் பற்றின விவரங்கள் கேட்க சுவாரஸ்யமாய் இருந்தாலும், எக்கச்சக்கமாய்த் தலையைச் சுற்றவைப்பதாகவும் இருப்பதில், இப்போது அவற்றை எழுதி உங்களைக் குழப்பாமல், அந்தந்தக் கோவில்கள், நினைவுச் சின்னங்களுக்குச் செல்லும் போது சில விஷயங்களை மட்டும் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கிறேன்.

கெய்ரோவில் எங்கள் விமானம் இறங்கியபோது நேரம் மாலை ஐந்து மணி. இந்தியாவுக்கும் எகிப்துக்கும் நேரத்தில் இரண்டரை மணி வித்தியாசம். அதாவது அங்கு ஐந்து என்றால், இந்தியாவில் மணி எழரை.

இமிக்ரேஷனை முடித்துக் கொண்டு



சுமறல் எடுத்து அவஸ்தை உண்டானதே ஒழிய, பெயரை முழுசாய் உச்சரிக்க முடியவில்லை! அரபு மொழியில் 'ஹ' என்ற எழுத்தை அடித் தொண்டையிலிருந்து அழுத்தி உச்சரிக்க வேண்டும். அந்த அவஸ்தை புரிந்த மாதிரி அவரே, "விளையாட்டுக்குச் சொன்னேன்! என்னை நீங்கள் 'பாப்' (Bob) என்றே கூப்பிடலாம்" என்று கூறி கண்களைச் சிமிட்டி சிரித்ததும், நாங்களும் அம்மாடி என்ற பெருமூச்சு விட்டோம்.

வெளியே வந்ததும், டூர் கைடு எங்கள் பெயர்களைக் கொண்ட பலகையுடன் காத்திருந்தார். இந்தியாவிலிருந்து இந்தப் பயணத்திற்காக ஒரே விமானத்தில் வந்தபோதும், அறிமுகம் இல்லாததால் தனித்தனியாய் வந்தவர்கள், டூர் கைடு அருகே ஒன்று சேர்ந்தோம். பட்டுக் கோட்டையில் மருத்துவமனை நடத்தும் டாக்டர் நிலோஃபர் (நீலு), அவரது வக்கில் கணவர் காதர்; பல வருஷங்களாய் சினிமாக் கம்பெனிகளுக்குக் காஸ்ட்யூம் வழங்கிய பெருமை கொண்ட 'நாதமுனி கம்பெனி'யைச் சார்ந்த ராஜேந்திர பிரசாத், அவரது நண்பர் மனோகர்; அஸ்ஸாமில் பேராசிரியராகப் பணிபுரியும் அகமத், அவர் மனைவி எலிஸா, ஒன்பது வயசுப் பிள்ளை நிஜாமுதீன்; அப்புறம், பிரியா, நான் - ஆக, மொத்தம் ஒன்பது பேர் தான்!

"என்னையும் சேர்த்து நாம் பத்துப் பேரும் அடுத்துவரும் ஏழு நாட்களையும் ஒன்றாகச் செலவிடப் போகிறோம் என்பதால், இந்த க்ரூப்பை நான் 'குடும்பம்' என்று அழைக்கப் போகிறேன்" என்று சொன்ன கைடு, "என் பெயர் இஹாப் எம்.அல். அஹ்ருடி. என்னை நீங்கள் முழுப் பெயர் சொல்லித்தான் அழைக்கவேண்டும்" என்று கறாராய்க் கூற, இரண்டு முறை அப்பெயரைச் சொல்லிப் பார்த்தும், தொண்டையில்

'பாப்' எங்களுக்கு கைடாகக் கிட்டியது ஒரு வரப்பிரசாதம். ஏன் சொல்கிறேன் என்றால், ஸ்விட்ஜர்லாந்துக்குப் போனபோது வந்த கைடு, கையேடுகளைப் பிரித்து வைத்துக் கொண்டு படித்தார், நாமாக ஏதாவது கேட்டாலும் பேந்தப் பேந்த விழித்தார்; கென்யாவிலோ, கைடுக்கு வேலையே இல்லை... விமானக் கூடத்தில் வண்டியில் ஏற்றி, நேராக ஐந்து மணி நேரம் காட்டுப் பாதையில் பயணிக்கவைத்து, 'மஸைய் மாரா' என்ற காட்டுப் பகுதி ஹோட்டலில் தங்க வைத்துவிட்டு, 'இனி உங்கள் பாடு, மிருகங்கள் பாடு' என்று கையைத் தட்டிக் கொண்டு போய்விட்டார்! ஆனால் இவர்களுக்கு நேர்மாறாக, எகிப்து பற்றிய அனைத்துத் தகவல்களையும் விரல் நுனியில் வைத்திருந்ததோடு, கேட்காமலேயே புள்ளி விவரங்கள், கதைகளை அள்ளி விட்டு, யாரும் ஒரு கணம் கூட சோம்பி உட்கார இடம் தராமல், எகிப்தின் ஐயாயிரம் ஆண்டு வரலாற்றை எங்களுக்குப் படம் காட்டியதைப் போல பாப் விவரித்த நேர்த்தி, வெகு அபாரம்!

இனி, டைம் காப்ஸ்யூலில் ஏறிக் கொண்டு பாப்-ன் வர்ணனைகளுடன் ஐயாயிரம் வருஷத்திய எகிப்தை ஒரு சுற்றுச் சுற்றி வரலாமா?

(தொடரும்)

அழகன்,



* சுமதி ராம்



பந்தாவுக்கும் பரபரப்புக்கும் பெயர் பெற்ற கோடம்பாக்கத்தில் சுவடே தெரியாமல் தயாராகி விட்டது 'விஷ்வதுளசி.' 'அழகன்' மம்முட்டியும், 'அழகி' நந்திதாதாஸூம் ஜோடி சேர்ந்திருக்கும் படம், மெல்லிசை மன்னரும், மேஸ்ட்ரோவும் இணைந்து பணிபுரிந்திருக்கும் இசைக் காவியம் என்றெல்லாம் எக்கச்சக்க எதிர்பார்ப்பைக் கிளப்பியிருக்கும் இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார் 'கோடம்பாக்கம் எந்தப் பக்கம் இருக்கிறது என்பதே எனக்குத் தெரியாது' என்று சொல்லும் சுமதிராம். பௌர்ணமி முழுநிலா போல பளிச்சென்று இருக்கும் இந்தத் திருமதியின் வேர்கள், கோவை மாவட்டம் தாராபுரத்திலிருந்து தொடங்குகின்றன.

"அப்பா வட்டாட்சியர். கலாசாரத்தின் பிரதிநிதியாக வாழும் அம்மா, குடும்பத் தலைவி. பிரச்னைகள் எதுவுமில்லாத பாசமான குடும்பம். சிறு வயது முதலே நான் ஒரு ட்ரீமர். இலக்கியம் பிடித்துப் போனது. முதுகலை முடித்துமே திருமணம். கணவர் ராம் அமெரிக்காவில் கம்ப்யூட்டர் நிறுவன தொழிலதிபர். இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு இடம் மாறினாலும் எனக்குள்ளிருந்த 'ட்ரீமர் சுமதி' அப்படியே இருந்தாள். அவ்வப்போது கவிதைகளையும் எழுதிக் கொண்டே இருந்தேன்.

"உங்கள் கவிதையில் இசைக் குறிப்புகளும் ஒளிந்திருக்கின்றன" என்று பலரும் விமர்சிக்க, ஏன் இரைச்சல் இல்லாத ஓர் இசை ஆல்பம் வெளியிடக் கூடாது என்ற எண்ணம்.

எனது எண்ணத்தை உடனே செயல்படுத்த நினைத்த கணவர், என்னை அழைத்துக் கொண்டு குடும்ப நண்பராக இருந்த எம்.எஸ்.வியை சந்திக்க சென்னை வந்துவிட்டார். எனது கவிதைகளைப் பார்த்த எம்.எஸ்.வி அதிலிருந்து சிலவற்றைத் தேர்ந்தெடுக்க, பத்துப் பாடல்களும் பிரமாதமாக இருந்தன.

"பாடல்களைக் கேட்கக்





அழகி, துரத்தும் கனவு!

கேட்க, கதாபாத்திரங்கள் உயிர் பெற்று வந்து, என்னைச் சுற்றி நடமாட ஆரம்பித்தார்கள். வலுவில் மறக்க நினைத்தாலும், எதிரே நின்று கும்மியடித்தார்கள். அவர்களிலிருந்துதான் எனக்கு விஷ்வம், துளசி இருவரும் கிடைத்தார்கள். இவர்கள்தான் என்னைத் துரத்தித் துரத்தி ஸ்கிரிப்ட் எழுதவும் வைத்தார்கள்" என்கிறார் சுமதிராம்.

"1942ல் கதை தொடங்குகிறது. ஜமீன் குடும்பப் பின்னணியைச் சேர்ந்த துளசியும், விஷ்வமும் சந்திக்கிறார்கள். ஒருவரை ஒருவர் மனசுக்குள் வைத்துப் பூட்டிவிட்டு அதை வெளியே சொல்லாமலேயே சாவியைத் தொலைத்து விட்டுப் பிரிந்து விடுகிறார்கள். பின்னர் இருபது வருடங்கள் கழித்து 1962ல் சந்திக்கிறார்கள். ஆனால் இருவருமே தொலைத்த சாவியைத்





தேட விரும்பவில்லை. இவர்களது மன உணர்வுகள்தான் கதை. எனக்கு திரைமொழியோ, சினிமாவோ தெரியாது. அதனால்தான் நல்ல சினிமா எடுத்திருக்கிறேன்" என்கிறார் சுமதிராம்.

- ஜெய்

அட்டை, படங்கள்:
'விஷ்வதுளசி'



எந்தத் திசையில் ப்ரௌஸ் பண்ணலாம்?

பிள்ளையார் வாகனமும், நம்ம கம்ப்யூட்டர் வாகனமும் ஒண்ணுதான். மௌஸ். அதான் மௌஸுக்கு மரியாதை பண்ண, முதல்ல பிள்ளையார் சதுர்த்தி பற்றி பிரமாதமா சொல்லியிருக்கிற தளம் deepestfeelings.comஐ மேய்வோம். இங்க பிள்ளையார் சதுர்த்தியின் வரலாறு, கொழுக்கட்டை செய்வதெப்படி, பிள்ளையார் வால் பேப்பர், வாழ்த்து அட்டை என விதவிதமா கடை பரப்பியிருக்காங்க. டான்ஸ் ஆடுற பிள்ளையாரு சூப்பருங்கோ!

(செப்.18 இந்த வெப் சைட்டுக்குப் போனா கொழுக்கட்டை கிடைக்குமா?)

வீடு எப்படிக் கட்டணும்? எந்தெந்த திசையில எது எது இருக்கணும், எந்தப் பொருளை எங்க வைக்கலாம், என்னென்ன பரிகாரம் பண்ணலாம், எதெல்லாம் வீட்டுக்கு ஆகாது - இப்படி பல விஷயங்களைக் கொண்டது வாஸ்து. அதைப் பற்றி அக்கு அண்ட் ஆணி வேறாக அலசியிருப்பது www.vasthusastra.com இந்த மாதிரி 'நம்பிக்கைகளை' பரப்புவதற்கும், விஞ்ஞானம் உதவுறதை என்னன்னு சொல்ல!? நமக்கு ஒரு சந்தேகம். எந்தத் திசையில உட்கார்ந்து பார்த்தாலும், இந்த வெட்-சைட்டைப் பார்க்க முடியுது. வாஸ்துப்படி எந்தத் திசையில உட்கார்ந்து பார்த்தா நல்லது?



"நான் இன்னிக்கு ஐந்து சாக்லெட் சாப்பிட்டேன், ஹாரி பாட்டர் பார்த்தேன்", "நான் இன்னிக்கு ரொம்ப பிஸி. ஆனா அந்தப் பொண்ணை பார்க்கணும்னு பைத்தியமா அலைஞ்சேன். ஹைய்யோ! கிளிண்டன் மாதிரி நான் மாட்டிக்க விரும்பல", "நான் என் எதிரி கெரியை அடிக்கிற மாதிரி கனவு கண்டேன்" - இப்படியெல்லாம்தான் டெய்லி டைரி எழுதுவாராம் ஜார்ஜ் புஷ், என கற்பனையாக தன் பக்கங்களை அமைத்துள்ள தளம் thespoof.com (நீங்க கூட இதுல போய் புஷ் டைரியில எழுதலாம்.)

ஜாலி sms

நீ உன் கம்ப்யூட்டர் முன் உட்கார்ந்து வேலை செய்யும்போது, அது உன்னைப் பற்றி என்ன நினைக்கும்?

intel inside!

மெண்டல் outside!

- ப்ரௌஸர்


போடுங்கய்யா வோட்டு:

பீடா அமைப்பு பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! மனிதாபிமான முறையில் மிருகங்களை நடத்தும் 'பீபிள் ஃபார் தி எதிகல் ட்ரீட்மெண்ட் ஆஃப் அனிமல்ஸ்' என்ற அமைப்பு, ஆண்டுதோறும், ஆன்லைனில் ஒரு வாக்கெடுப்பு நடத்துகிறது.

"சைவத்தை கடைப்பிடிக்கும் தற்போதைய மிகப் பிரபலமான நபர் யார்?" என்று கேள்வி கேட்டு, 'PETAIndia.com'மில் பதில் தட்டச் சொல்கிறது.

பீடாவின் வாக்களிப்பு தேர்வாளர்கள் (2004) பட்டியலில் இருக்கும் சில பிரபலங்கள் இதோ...

அப்துல் கலாம், அமிதாப்பச்சன், அனில் அம்பானி, அனில்



• "சிறையின் வலி பறவைக்கும்தான்!" - மாதவன்




• முட்டைக்கோஸுக்கு மாறிவிட்ட அதிதி - ஜான் ஆப்ரகாம்

கும்ப்ளே, ப்ரயன் ஆதம்ஸ், தேவ் ஆனந்த், வருண் காந்தி, ஹர்ஷா போக்லே, மகேஷ்பட், மிலிண்ட் சோமன், நடிகர் மாதவன், பமேலா ஆண்டர்சன், மந்திரா பேடி, மஹிமா சௌத்ரி, ஜூஹி சாவ்லா, ஹேமமாலினி, ஈஷா டியோல், செல்ஸியா கிளிண்டன், யானா குப்தா, அமலா நாகார்ஜுனா எக்ஸெட்ரா... எக்ஸெட்ரா...


"தின்பதற்காகவே வளர்க்கப்பட்டுப் கொல்லப்படும் பல லட்சம் மிருகங்களின் துயர் துடைக்கும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். சைவப் பிரியர்கள், அசைவ விரும்பிகளை விட மிடுக்காகவும், இளமையாகவும், ஆரோக்கியமாகவும்

- **"சைவம் ஈஸ் தி சீக்ரெட் ஆஃப் மை எனர்ஜி" - அனில்கும்ளே**



இருக்கிறார்கள் என்பது உலகறிந்த ரகசியம். எனவே தான் உலகின் விஐபிகள் அனைவரும், மாமிச சுபாப்பை விட்டு விட்டு பட்டாணிக்கு மாறுகிறார்கள்" என்கிறார் பீட்டாவின் இந்தியத் தலைமை இயக்குநர் அனுராதா சஹனி.

- **"மீன்கள் ரசிக்க மட்டுமே" - யானாகுப்தா**



வெறிப்பசு நோய், சார்ஸ், பறவைக் காய்ச்சல் போன்ற பயங்களாலும், மக்கள் மரம், செடி, கொடிகளுக்கு மாறிக் கொண்டிருக்கிறார்கள்... என்பதும் உண்மைதான்.

\- லல்லி

'சைவ'த் தட்டு பார்த்து!

அஞ்சலி மட்டுமே அதிர்ச்சியளித்தார்!



• அஞ்சலி



• மல்லேஸ்வரி

ஒலிம்பிக்ஸில் நமது நம்பிக்கை நட்சத்திரங்கள் ஏன் பதக்கங்களைத் தட்டி வரவில்லை? திறமைக் குறைவா? துரதிர்ஷ்டமா? அல்லது வேறு ஏதாவது காரணமா? இனியாவது பதக்கப்பட்டியலில் நம்நாடு கௌரவமான இடத்தைப் பெற வேண்டுமென்றால் உடனடியாக எதில் கவனம் செலுத்த வேண்டும்?

நமது கேள்விகளுக்கு விளக்கமளித்தார், பி.டி.ஐ. செய்தி நிறுவனத்தின் (விளையாட்டுப்பிரிவு) மூத்த நிருபராக விளங்கும் ஆர்.ஈஸ்வர்.


“நான் விளையாட்டு கட்டுரைகளை 1977லிருந்தே எழுதி வருகிறேன். இந்த ஒலிம்பிக்ஸ் தொடங்குவதற்கு முன்பே சன் டி.விக்கு அளித்த பேட்டியில், ரத்தோர் பதக்கம் பெற பிரகாசமான வாய்ப்புண்டு எனக் கூறியிருந்தேன். ஏனென்றால், 2003 ஏப்ரல் மாதத்திலிருந்து நடைபெற்ற நான்கு உலக துப்பாக்கி சுடும் போட்டிகளிலும் அவர் தொடர்ந்து முன்னேறி வந்தார். இதே அளவில் முன்னேறினால், நிச்சயம் பதக்கத்தோடுத்தான் திரும்புவார் என நம்பினேன். அந்த நம்பிக்கை பொய்க்கவில்லை.

ஆனால் அஞ்சலி விஷயத்தில் என் நம்பிக்கை பொய்த்தது. நிச்சயம் பதக்கம் பெறுவார் என்று எண்ணினேன். அது நடக்கவில்லை. சென்ற ஒலிம்பிக்ஸில் ஒயில்டு கார்டாக நுழைந்தவர் அற்புதமாக முன்னேறினார். அக்டோபர் 30, 2001ல் உலகளவில் 'நம்பர் ஒன்'னாக இருந்தார். ஆனால் ஒலிம்பிக்ஸில் போட்டி மிகக் கடுமையாக இருந்து. தவிர ''தனது துப்பாக்கியின் அலைன்மெண்ட் சரியில்லாமல் போனது'' என்றும் அவர் ஒரு காரணத்தைக் கூறியிருக்கிறார். அஞ்சலி பதக்கம் பெறாதது, என்னைப் பொறுத்தவரை அதிசயமே.

சுமா சிருஷ் கூட மிகச் சிறந்த துப்பாக்கி சுடும் வீராங்கனைதான். தன் வாழ்நாளில் முதல்முறையாக உலக அளவில் நடைபெறும் போட்டியில், இறுதிச் சுற்றை அவர் அடைந்தது இந்த ஒலிம்பிக்ஸில்தான். அவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது.

• அஞ்சு ஜார்ஜ்






• ரத்தோர்

மன்ஷேர் சிங் நிறைய அனுபவம் கொண்டவர். 1984ல் கல்லூரி மாணவனாக இருந்ததிலிருந்தே துப்பாக்கிசுடும் போட்டியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியவர். 1992, 1996 ஒலிம்பிக்ஸ்களில் பங்கு பெற்றவர். ஏதன்ஸ் போட்டியின்போது நிலவிய எதிர்க்காற்று, இவரது தோல்விக்கு ஒரு காரணம். தவிர வெளி நாட்டுக் களங்களில் இவர் மேலும் நிறைய பயிற்சி பெறவேண்டும்.

மற்றவர்கள் எப்படியோ, நமது



• பீனா மோகன்



• பாபி


ஹாக்கி குழு பதக்கம் பெறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எனவே ஆறாம் இடத்தை அது பெற்றதில் எனக்கு அதிர்ச்சி இல்லை. பயிற்சியாளர்களை அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கக் கூடாது. தவிர, தென்னக விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் குழுவில் இடம் பெறாததற்கு காரணம், நிச்சயம் அவர்களது திறமையின்மை அல்ல, வேறு காரணங்கள்தாம். முக்கியமாக மிட்ஃபீல்ட் பகுதியில் இடம் பெற்ற ஐந்து வீரர்களுமே அந்தப் பிரிவில் போதிய அனுபவம் இல்லாதவர்கள். சொல்லப்போனால் ஒலிம்பிக்ஸில்தான் அவர்கள் முதல் முறையாக மிட்ஃபீல்டிங் செய்தனர்.

அஞ்சு ஜார்ஜ் பதக்கம் பெறுவார் என நான் எண்ணவில்லை. நீளம் தாண்டுதலில் போட்டி மிகவும் கடுமையாக இருந்தது. தவிர தொடக்கத்தில் ஓடி வரும்போது அதிகவேகம் தேவை என்பது போன்ற சில தொழில் நுட்பப் பற்றாக்குறையும் அவரிடம் இருக்கிறது.

எடை தூக்கும் பிரிவில் குஞ்சராணி பதக்கம் பெறுவார் என எதிர்பார்த்தேன். மயிரிழையில் அந்த வாய்ப்பு பறிபோனது. (நான்காம் இடம் பெற்றார்.)

டென்னிஸைப் பொறுத்தவரை, பயஸும் பூபதியும் டேவிஸ் கோப்பை பந்தயத்துக்காக அதிகம் ஆடினாலும், கிராண்ட் ஸ்லாம் பந்தயங்களில் இணைந்து தொடர்ந்து ஈடுபட்டதில்லை. இருபத்தியேழு மாதங்களுக்குப் பிறகு இணைந்து ஆடியிருக்கிறார்கள். தொடர்ச்சியாக அவர்கள் ஜோடியாக ஆடியிருந்தால் பிரகாசித்திருப்பார்கள்.

• ஆர்.ஈஸ்வர்.



சரி, போனது போகட்டும். கடந்ததை நினைத்து வருந்துவதை விட, இனி என்ன செய்யலாம் என்பதை திட்டமிடுவது மிகவும் முக்கியம்.

கிரிக்கெட் உட்பட எல்லா விளையாட்டு வாரியங்களும் தனியமைப்புகள் என்றும், அவற்றின் செயல்பாடுகளில் அரசின் தலையீடு இல்லை என்றும் கூறுகிறார்கள். எல்லா விளையாட்டு வாரியங்களும் 'சொஸைட்டி விதிகளின்' கீழ் தான் இயங்குகின்றன. அவற்றிற்கு 'அக்கவுண்டபிலிடி' தேவை. நம்நாட்டில் திறமைசாலிகளுக்குக் குறைவே இல்லை. அத்தகைய இளந்தளிர்களைக் கண்டறிந்து பாதுகாத்து, வேண்டிய பயிற்சிகளைக் கொடுத்து, மின்ன வைக்க வேண்டியது இந்த வாரியங்களின் பொறுப்பு. முக்கியமாக பதினேழிலிருந்து இருபத்தி மூன்று வயது வரையுள்ள இளைஞர்களின் பக்கம், இந்த அமைப்புகள் முழுமையான கவனம் செலுத்த வேண்டும். இந்தக் கடமையில் தவறும் வாரியங் களுக்கு அரசு நிதி அளிக்கக் கூடாது. இந்த பயம் இருந்தால் தான், விளையாட்டுக் கூட்டமைப்புகள் சுறுசுறுப்பாகப் பணியாற்றும்."

- ஜி.எஸ்.எஸ்.

ஜலதோஷத்துக்கு மட்டுமல்ல!

பழைய வெள்ளை வேட்டி
துண்டுத் துண்டாய்
அப்பாவின் காற்சட்டைக்குள்

வண்ணங்களில் வாங்கி
துவைத்து அடுக்கி
ஒவ்வொன்றாய்
எடுத்துக் கொள்ளும் அண்ணா.



ஏழாவது படிக்கையில்
சட்டைக் காலருக்குள்
அழுக்குப் படியாமலிருக்க வைத்து
வகுப்பில் எலி செய்து விளையாடியும்
தொலைந்து போனபோது
அடித்துப் போட்ட அம்மா.

மேல்நிலை வகுப்பில்
'எனக்கு நினைவாய் ஏதாவது'
என்றவளுக்கு
பர்மா பஜாரில்
வாங்கிக் கொடுக்க,
இதுவல்ல தேவையென
நிராகரித்தவள்
ஸ்ரீவில்லிப்புத்தூரில்
குழந்தைகளோடு.

வியர்வை துடைத்ததுடன்
நாலு புறமும் முடிச்சிட்டு
வெயிலுக்குத் தொப்பியாக்கிய
தருணங்கள்!

பயணம் புறப்படும்
அவசரத்தில்
மறந்தே போன கைக்குட்டையை
ஜவ்வாது வாசத்தோடு ஒற்றிக்
கொள்ள
ஒன்றிரண்டு தயாராய்
எடுத்துத் தருவது
நிச்சயமாகி யிருக்கும் தங்கைதான்.

முத்தமிழ் விரும்பி

ஜாலி ஜாஃபர்!

"எனக்கு அப்போது ஒன்பது வயதிருக்கும். ஒருநாள் பள்ளி முடிந்து வீட்டுக்குத் திரும்பினேன். எங்கள் வீட்டில் போலீஸ் குவிந்திருந்தது. என்னுடைய தாயார் கிளாரிஸா பதற்றமாக இருந்தார். "அப்பா மீது மத சம்பந்தமாக குற்ற வழக்கு போடப்பட்டிருக்கிறது" என்றார். 'ஃபத்வா' என்றால் என்ன என்று எனக்குப் புரியவில்லை. ஆனால் அப்பாவின் உயிருக்கு ஆபத்து என்று மட்டும் புரிந்தது. அதற்குப் பிறகு நிறைய மிரட்டல்கள்.. டெலிஃபோனிலும், கடிதங்களிலும் வந்தன. நான் படிக்கும் பள்ளிக்கூடத்திலும் சில பெற்றோர்கள் வந்து தகராறு செய்தனர். "ஜாஃபர் இங்கே இருந்தால், கூடப் படிக்கும் எங்கப் பசங்க பாதுகாப்புக்கு உத்திரவாதமிருக்காது. ஜாஃபரை வெளியே அனுப்புங்க" என்று சொன்னார்கள். ஆனால் தலைமை ஆசிரியர் ஒரேயடியாக மறுத்துவிட்டார். "ஜாஃபர் சிறந்த மாணவன். உங்கள் குழந்தைகள் பாதுகாப்பு பற்றி ரொம்ப அச்சப்படுவதாக இருந்தால், வேறு பள்ளியில் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டார்.

"நீங்க அப்பா பிள்ளையா?"

"நான் பல விஷயங்களில் அப்பா மாதிரிதான். வெளிப்படையான போக்கு, தன்னம்பிக்கை, உழைப்பு, நகைச்சுவை உணர்வு போன்றவற்றில் அப்பாவை உரித்து வைத்திருக்கிறேன். ஆனால் அவர் மாதிரி எழுத வராது. என்னுடைய கற்பனை எல்லாம் இசை என்னும் இன்ப வெள்ளத்தில்தான்"

அப்பா எழுதியதிலேயே ரொம்பப் பிடிச்சது எது?

"'ஸீ ஆஃப் ஸ்டோரிஸ்'தான். நான் சிறுவனாக இருந்தபோது,



என்னைத் தூங்க வைக்க, அப்பா நிறையக் கதைகள் சொல்வார். சில சமயம் நானும் சில விஷயங்களை கற்பனையாகச் சேர்த்துச் சொல்வேன். அவர் அவற்றை மிக ரசித்து, கதைகளில் சேர்த்துக் கொள்வார். அவர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தபோது, ஒருமுறை என்னைச் சந்தித்தார். "ஜாஃபர்... இது நம்ம புத்தகம்" என்று ஒரு நாவலைப் பரிசளித்தார். அதுதான் பிரபல ஸீ ஆஃப் ஸ்டோரிஸ்...!

''சரி... உங்கள் தந்தை மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

எனக்கு மதம் பற்றி அதிகம் தெரியாத நிலையில் கருத்துச் சொல்வது சரியல்ல. ஆனால் நம்முடைய மத நம்பிக்கைகளை மற்றவர்கள் மீது திணிப்பதும், அவற்றை ஏற்றுக் கொள்ளாதபோது, தண்டிப்பதும் நியாயமானதல்ல! கடவுள் கருணையுடனும், மன்னிக்கும் மனோபாவத்துடனும் தானே வாழச் சொல்கிறார்?

காதல், கல்யாணம் எதுன்னா உண்டா..?

எனக்கு இருபத்து நான்கு வயதாகிறது. அழகான பெண்களைப் பார்த்தால் ஒருவித ஈர்ப்பு ஏற்படுவது உண்மைதான். ஆனால் எதுவும் சீரியலான உறவாக வில்லை. தன்னம்பிக்கையும், விசாலமான அறிவும் கொண்ட பெண் கிடைத்தால் மட்டுமே நீண்டநாள் உறவுக்கு ஒப்புக் கொள்வேன். எனக்குத் திருமணம் எல்லாம் சரி வராது. ஒற்றை ஆளாக வாழ்வதுதான் பிடிக்கிறது.

இந்தியாவுக்கு வந்ததுண்டா?

இரண்டு முறை வந்திருக்கிறேன். எனக்கு நான்கு வயதாக இருந்தபோது, அத்தையின் கல்யாணத்துக்குப் போயிருந்தோம். இரண்டு வருஷங்களுக்கு முன்பு, 'காமன்வெல்த் இலக்கிய விருது'க்கு அப்பாவின் பெயர் நாமினேட் செய்யப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்காக, அப்பா டெல்லிக்குச் சென்றபோது, நானும்கூட சென்றேன். ஜெய்பூர், ஆக்ரா, சிம்லா என நிறையச் சுற்றிப் பார்த்தோம். எங்களுடைய பூர்வீக வீடு இருக்கும் சோலன் பகுதிக்கும் போனோம். இந்தியாவின் கலாசாரமிக்க அழகு என்னை ரொம்பவே கவர்ந்தது.

உங்க அடுத்த பிளான் என்ன?

லண்டனில் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தித் தரும் நிறுவனத்தை நடத்தி வருகிறேன். எம்.டீ.வி க்காகவும், இசைப்பணிகள் நடந்து வருகின்றன. ஜாலியா இருக்கேன். இருப்பேன்.

பேட்டியைப் படிச்சீங்களா...? இந்த ஜாலி ஜாஃபர் யாருடைய மகன் என ஊகிக்க முடிந்ததா? 'சாத்தான் கவிதைகள்' எழுதி, பெரும் சர்ச்சைக்கு உள்ளான சல்மான் ருஷ்டியின் மகன்!

(பத்மா லக்ஷ்மி பற்றி ஒரு கேள்வி கூட கேட்காத 'சொஸைட்டி' நிருபரை என்னதான் செய்வது?)

- அனு

புது சிக்கல்!

நேற்று வந்த தனுஷ், சிம்புகூட புழுதி பறக்கும் பில்ட்-அப் படங்களில் நடித்து விட்டாலும் இந்த மாயவலைக்குள் இன்னமும் சிக்காமலிருக்கும் சூர்யாவுக்கு புதுச்சிக்கல்!



'நியூ' மூலமாக எஸ்.ஜே. சூர்யா ஓவர்நைட் புகழ் பெற்றுவிட இப்பொழுது கோலிவுட்டில் பயங்கர பெயர்க் குழப்பம்!

''அட, நான் சொல்றது 'ஜோதிகா' சூர்யா பற்றிங்க'' என்று அடையாளம் வைத்து திரையுலகில் பேசிக் கொண்டால் சங்கடம் வருமா என்ன?

- கண்

கண்ணாடிக் கல்வெட்டுகள் 14

ஆனைமலைப் பகுதி
ஓர் அழகுக் கண்காட்சி!

பனித்துளிகள்
குடைபிடிக்க
பவனி வரும் வெயில்!

இலை ஊஞ்சல்
அசைந்தபடி
எழுந்து வரும் காற்று!

அருவிக் கூந்தல்
அவிழ்த்துப் போட்டு
சிக்கெடுக்கும் சிகரங்கள்!

பச்சை சட்டை தைத்துப் போட்டு
படுத்துக் கிடக்கும் புல்நிலம்

மனித வாடை
துளியும் இன்றி
மலர்கள் குவிந்த பூக்காடு!

ஆடுகள் நடந்த
சுவடுகள் காட்டி
அடர்ந்து கிடக்கும் மலைப்பாதை!

ஸ்வரங்கள் இல்லாமல்
சுத்தமாய்ப் பாடும்
சோலைவனப் பறவைகள்!

இத்தனை இத்தனை
இயற்கைக்கு நடுவே
இளமையாய் எளிமையாய்
இருந்து வந்தாள் நங்கை!

தாயில்லாத இந்தத்
தட்டாம்பூச்சிச் சிறகுக்கு
காற்றும் - மரமும் நிலவுமே
அம்மா!

மகளை ஒரு
ராணி போல அல்ல
ராணியை விட மேலாக
வளர்த்தார் மாமூலனார்.

"அப்பா!"
ஆரவாரமில்லாத
அன்னப்பறவையின் குரல்!

மாமூலனார் ஒரு
மயிலை வருடிவிடுவது போல்
மகளின் தலைகோதி
மடியில் சாய்த்தார்!

"அப்பா,
எனக்கு ஒரு கிளி வேண்டும்!"
கிளிமொழியில்
கிறீச்சினாள் நங்கை!

"கிளி தானேயம்மா?
நம் மலை பலாமரத்தில்
நீ பார்க்காத கிளியா?"
மாமூலனார் சிரித்து விட்டார்.

மகளுக்கு முகம் பார்க்க
நிலாவையும் விலைக்கு வாங்கும்
நேசமுள்ள தந்தை அவர்.

மகளுக்காக உயிர்வாழ்ந்து
மூச்சுக்குள் காவலிருக்கும்
பாசமுள்ள தாயும் அவர்!

"இல்லை அப்பா!
ஒரு கிளி இருக்கிறதாமே
பல வண்ணங்களைக் கொட்டியது
போல...
பல நிற நீரில் நனைந்தது போல...

அது தாங்கள் வாணிபம் பண்ணும்
அசலூரில் கிடைக்குமாமே!"

மாமூலனார் புன்னகையை
மறுப்பாகத் தெரிவிக்க

காவல் மரம்-2



சின்ன ஒரு சிணுங்கல்
துண்டு
சிறுமியிடம்
விழுந்ததுமே

''சரியம்மா!
உன் மனம் போல் கிளி
சீக்கிரத்தில் வந்து
சேரும்!''

நங்கை கேட்ட கிளி
நாடெங்கும் விசாரிக்க
அதை போர்ச்சுகலில்
பார்த்ததாய்
மாலுமி ஒருவன்
சொன்னான்!

பைங்கிளி கேட்ட
வண்ணக்கிளி
பற்பல மாதங்களாய்
பாய்மரக் கலத்தில் பயணித்து
போர்ச்சுகலில் இருந்து வந்தது!

''அப்பா!
அதிசயம் தானப்பா நீங்கள்!
கப்பலிலா வந்தது இந்த
வண்ணக்கிளி?''
நங்கையில் இதயம்
நான்கு மடங்கு வேகத்தில்
நர்த்தனமே ஆடியது!

''உனக்காக இது என்னம்மா?
மேல்வானத்தை அம்மியாக்கி
கீழ்வானத்தை மஞ்சளாக்கி
அரைத்துத் தரவும்
ஆசைகள் உண்டு.''
மாமுலனார் அந்தத் தாயில்லா
மகளை இமையில் தாங்கினார்!

தங்கத்தில் புல் செய்து

பா. விஜய்

தட்டுத்தட்டாய் தந்தாலும்
தின்னுமா புள்ளிமான்?

வைரக்குட்டி கிடைத்தால்
பழம் ஒதுக்கிப் போகுமா
கன்னங்கரேல் மைனா?

நங்கை வழக்கம் போல்
அரண்மனை இல்லத்தில் இருந்து
ஆழியாற்றங் கரைக்கே
அதிகாலைக் குளிருக்குள்
நீராடப் போய் வந்தாள்!

அன்றொரு நாள்
தோழிகளும் - வளையல்களும்
இடைவிடாது சிணுங்க

ஆழியாற்றங்கரைக்குள்ளே
குளித்து நின்றாள் நங்கை!

கரையோரம் இருந்த
காவல் மரம்
மாமரம் ஆதலால்...

சித்திரை மாதத்தின்
உஷ்ண விரல் பட்டதும்
பூப்பூத்து காய்த்து
பழம்பழமாய்த் தள்ளியது!

காவல் மரத்தினிலே
காய்த்த ஒரு மாங்கனி
தானாய்க் கனிந்து
தன்னிச்சையாய் விழுந்து
ஆழியாற்றங்கரையோரம்
அசைந்து அசைந்து
வந்தது!

''அடடா! என்ன
கனி?
எத்தனை
கொழுகொழுப்பு?
உன் கன்னம்
போலவே!''

''ஏய் நங்கை!
மாங்கனி
உன்முகமா?
இல்லை உன் முகத்தின்
சாயலா?''



கனியை கையில் எடுத்த
கன்னிநங்கையைப் பார்த்து
களித்தாடி விளையாடினர்
தோழிகள்!

நங்கை அந்த மாங்கனியை
கண்களால் கண்டாள்.
இளமஞ்சள் - இளஞ்சிவப்பு
இரண்டறக் கலந்த நிறத்தில்
மனதை இழுத்தது மாங்கனி!

நீராடி முடித்து விட்டு
அவிழ்ந்த கூந்தல்
முடிந்து விட்டு
காவல் மரம் வணங்கி விட்டு
கையில் இருந்த மாங்கனியை
கடிக்கத்தான் வாய் வைத்தாள்!

ஒரு சின்ன பூஞ்சாரல்
மேகக்கற்றை
இரண்டு ஈட்டி இடிகள்
சட்டென்று பிடித்தன
நன்னனின் காவல்மரக்
காவலர்களின்
கருணையற்ற பிடிக்குள்
மாங்கனியோடு அந்த
மங்கைக் கனி மாட்டியது!

தோழிகள் கத்தினர்
நங்கையும் கூச்சலிட்டாள்
''அய்யோ! அவள்
மாமூலர் அய்யா மகளய்யா
விட்டுவிடுங்கள்!''

காவலர்கள் இருதயங்கள்
கற்பாறைகள்!
அவர்களுக்கு கனிமொழி
புரியாது.

''மாமூலரின்
மகளல்ல
மகேசனின்
மகளாயினும்
மன்னன்
நன்னனின்
காவல் மரத்தில்
இருந்து
ஒரு சருகை எடுத்தாலும்
குற்றவாளிதான்.''

ஆனமலை உயர்ந்த
ஆழியாற்றங்கரை ஓரம்
தானாய் வந்து
தன்கையில் சேர்ந்த மாங்கனியால்
குற்றம் சுமந்து...

கூனிக் குறுகி
அஞ்சி நடுங்கி
நா உள் சுருண்டு
செவி பஞ்சடைத்து
நடை தடம்புரண்டு
நன்னனின் சபை நோக்கி
நடத்திச் செல்லப்பட்டாள்
நங்கை!

(வளரும்)

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை

குடையைச் சுருக்கிவிட்டு, வீட்டுக்குள் நுழைந்தார் சங்கரன். சொம்புத் தண்ணீரோடு தயாராக நின்றாள் கோமதி. அதை வாங்கி, கால், கை, முகம் கழுவி முடித்தார். மேல் துண்டால் முகத்தைத் துடைத்தபடி, சேரில் உட்கார்ந்தார். எதிரே காலிச் செம்புடன், அவர் முகத்தைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் கோமதி. சங்கரன் குனிந்த தலை நிமிராமல், யோசனையில் இருந்தார். பொறுத்துப் பார்த்தாள். பொறுக்க மாட்டாமல் கேட்டாள்.

"போன காரியம் என்னாச்சு?"

"ஆங்!" என்று நிமிர்ந்தார்.

"இல்ல, போன வெசயம் எப்படின்னு கேட்டேன்!"

"ம்!... முடிஞ்ச மாதிரிதான்! ரெண்டு பார்ட்டி கெடச்சிருக்கு!" .

கோமதியின் முகத்தில் கீற்று போல் ஒரு புன்னகை. "ஒண்ணு, நம்ம வயக்காட்டுக்கு பக்கத்து வய, சுந்தரம் தான்! ஒண்ணே காலுக்கு கேக்குறான்!

இன்னொண்ணு புரோக்கர் ஆளு! மலையாளத்தான்! ரெண்டு லட்சம் தர்றேங்கான்!"

"நீங்க யாருக்கு முடிக்காப்புல இருக்கியோ!"

"மலையாளத்தானுக்கு தான்! நமக்கு சோறு போடுற, வயக் காட்ட விக்கிறதே, செல்வியோட கல்யாணச் செலவுக்குத்தான்! கூட கொஞ்சம், பணம் கெடைச்சா, புள்ளைக்கு நீக்கு, போக்கா, சீர் செய்யாமில்ல... அதான்!" என்றார்.

"சரிதான்!" என்று தலையாட்டினாள் கோமதி...

பின் ஏதோ நினைவு வந்தவளாக,

"சரி, சாப்பிட வாங்க!" என்றாள்.

"புள்ள எங்க? சாப்புட்டாளா?"

"சாப்புட்டுட்டு தூங்கிட்டிருக்கா!"

சங்கரன் எழுந்து கூடத்தில் போய் உட்கார்ந்தார். இலையில் சோற்றைப் போட்டு, குழம்பை ஊற்றியபடியே கேட்டாள்.

"என்னிக்கு கெரயம் முடிக்காப்புல பேசியிருக்கியோ!"

நிமிர்ந்து பார்த்தார்.

"இல்ல... சீக்கிரம் முடிஞ்சா... கல்யாண வேலைய ஆரம்பிக்கலான்னுதான்..."

"நாளைக்கு முன்பணம் தரேன்னிருக்கான்... பாப்போம்! மோர ஊத்து!" என்று கையை சோற்றுக்கு மேல் குழித்து ஏந்தினார்.

கோமதி மோரை ஊற்றினாள். பாதி சோற்றில் ஒழுகியது. கையில் இருந்த மீதியை வாயில் வைத்து உறிஞ்சினார். சாதத்தைப் பிசைந்து சாப்பிட்டுவிட்டு, காக்காய்க்கு வைக்கும் அளவு, மோர் சாதம் மிச்சம் வைத்துவிட்டு, கையை மடக்கியபடியே எழுந்து போனார்.

சங்கரன், மிச்சம் வைத்த சாதத்தை சாப்பிட்டுவிட்டு, அதே இலையில் மேலும் சாதம் போட்டு, குழம்பூற்றி சாப்பிட ஆரம்பித்தாள் கோமதி.

அவள் சாப்பிட்டுவிட்டு கைகழுவி வரவும், அவர் குடையை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

"தூரமா!" என்றாள் வாயைத் துடைத்தபடி..

"ஒரு எட்டு வயக்காடு வரைக்கும் போயிட்டு வந்திடுறேன்!" என்றபடி வெளியேறினார்.

சம்சாரி மனசு



பி.மாரிமுத்து

தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தார்.

குற்றாலம் போகும் மெயின் ரோட்டை ஒட்டி இருந்தது அவர் வயக்காடு. அவர் வயல் வரப்பில் இருந்து பார்த்தால், தூரத்தில் நூல் கண்டு போல் அருவி தெரியும். செருப்பை உதிர்த்து விட்டு, வெறுங்காலுடன் வரப்பில் ஏறினார். காய்ந்த புற்களின் சொர சொரப்பு, காலுக்கு இதமாக இருந்தது.

கதிர் முழங்கால் உயரத்துக்கு வளர்ந்து நின்றது. ஒரு கதிரை உருவி, கசக்கி முகர்ந்து பார்த்தார். பால்வாசனை கம்மென்றிருந்தது. கசக்கிய கதிரை வயலுக்குள் வீசினார். வரப்பில் உட்கார்ந்தார். வளர்ந்த கதிரை கைகளால் தடவினார். அவரையும் அறியாமல் கண் கலங்கியது.

'இது பூர்வீகச் சொத்து. தாத்தன், பாட்டன் கால சொத்து. பல தலைமுறையாய், விவசாயம் பார்த்த பூமி. ஒத்திக்கு கூட வேறு கைக்கு போனது இல்லை. மொத மொதலாக கை விட்டு போகப்

போவுது. எல்லாம் என்னோட கையாலா காத்தனத்தால். வளர்ந்த பொட்டப் புள்ளைக்கு, நகை, நட்டு சேக்காதவன், கதையெல்லாம் இப்படித்தான். வயல், தோப்பு, வீடுன்னு வித்துதான், குமருகளை கரையேத்தணும்,' மனசுக்குள் நினைத்து கொண்டார்.

இருட்டும் மட்டும் உட்கார்ந்திருந்தார். பின் மெதுவாக எழுந்தார். மனசில்லாமல் மறுபடியும் உட்கார்ந்து கொண்டார். 'நாளைக்கு முன்பணம் வாங்கிவிட்டாலே... இது... அடுத்தவன் சொத்து. இன்னிக்கு ஒரு ராத்திரிதான்! விடிஞ்சா... இது வேறு ஒருத்தனோட பூமி!...' மனசு அடித்துக் கொண்டது. கண்களில் நீர் வழிய, நடுச் சாமம் வரை வரப்பில் படுத்து கிடந்தார். கோமதி நினைவு வர, எழுந்து நடக்க ஆரம்பித்தார்.

ஒரு வாரம் காலம் ஓடிப்போனது. கோமதி வாசலையே வைத்த கண் வாங்காமல், பார்த்துக் கொண்டிருந்தாள். "இன்னிக்கு கெரயம் முடியுது!.. பணத்தோட வருவாவோ!'' புலம்பியபடி உலாத்திக் கொண்டிருந்தாள்.

சங்கரனின் செருப்புச் சத்தம்! இருபத்தைந்து வருட தாம்பத்ய அனுபவம், நாலு வீடு தள்ளி வரும் போதே, அவளுக்குத் தெரிந்து விட்டது.

மஞ்சள் பையை கக்கத்தில் இடுக்கியபடி வந்தார். அதை வாங்கிக் கொண்டு, சொம்புத் தண்ணீரை நீட்டினாள். மஞ்சள் பையை, இருக்கன்குடி மாரியம்மன் படத்தின் முன் வைத்து கும்பிட்டாள். பைக்குள் கைவிட்டு எடுத்தாள். முள்ளங்கி பத்தை போல் ரூபாய் நோட்டுகள்.

''எம்புட்டுய்யா, ரெண்டு லச்சமா?'' கண்கள் விரியக் கேட்டாள்.

"இல்ல! ஒண்ணேகாலுதான்!"

"என்ன உளறுதியோ!"

"கெரயம் மலையாளத்தானுக்கு இல்ல... சுந்தரத்துக்குதான் முடிச்சிருக்கேன்!"

"ஏன்? அவன் வேண்டானுட்டானா?"

"இல்ல... அவன் ரெடியாத்தான் இருந்தான்! நான் தான் சுந்தரத்துக்கு முடிச்சேன்!"

கோமதிக்கு சுர்ரென்று கோபம் முட்டிக் கொண்டு வந்தது.

"உங்களுக்கு கோமடி, கிட்டி புடிச்சிருக்கா?"

சங்கரன் கம்மென்றிருந்தார்.

"ஏன்ய்யா!... யாராவது முக்கா லச்சம் குறைஞ்சு வித்துட்டு வருவாவளா!... உண்மையிலேயே உங்களுக்கு புத்தி கெட்டுப் போச்சு!'' படபடத்தாள்.

''வெவரம் புரியாமப் பேசாத! நம்ம வயலு ரோட்டடியில இருக்குல்லா!.. ஓட்டல் கட்டத்தான் கேட்டிருக்கான். அது இன்னிக்குதான் தெரிஞ்சுது!"

''அவன் என்னத்தையும் செஞ்சிட்டுப் போறான்!... வயலே கைவிட்டுப் போயாச்சு, அது எக்கேடு கெட்டுப் போனா உமக்கென்ன!"

முறைத்துப் பார்த்தார் சங்கரன்.

பின் மெதுவாக,


''நம்ம பொண்ணுதான் செல்வி, கல்யாணம் முடிஞ்சு, நம்மளவிட்டுப் போயிட்டாளா, அவ எக்கேடும் கெட்டுப் போவட்டும்ன்னு விட்டுருவோமா.. அத மாதிரிதான் இதுவும்!"

புரியாமல் பார்த்தாள் கோமதி.

''காலம், காலமா சோறுபோட்ட பூமித்தாய் அது!... அவ அடிவயித்துல கல்லையும், சாந்தையும் போட்டு ரொப்பி, அவள மலடாக்க என் மனசு ஒப்பலை! அதான் நஷ்டமானாலும் பரவால்லன்னு சுந்தரத்துக்கே குடுத்துட்டேன்... அவன் நம்மளொத்த சம்சாரி!... கண்டிப்பா விவசாயந்தான் பண்ணுவான். அந்த வயக்காடு நம்மளவிட்டுப் போனாலும், நல்லாருக்கும், அதுக்கு தான்!'' என்று கலங்கிய கண்களை மேல் துண்டால் துடைத்துக் கொண்டார்.

அவரை ஆச்சர்யத்தோடும், பெருமிதத்தோடும் பார்த்துக் கொண்டிருந்தாள் கோமதி. ○





உ

ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத
ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்
ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.

✆ : 04364 273900

**லட்சார்ச்சனை ஆவணி கடை ஞாயிறு மற்றும்
ருத்ராபிஷேகப் பெருவிழா 11.9.2004 - 12.09.2004
சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள்**

அன்புடையீர்,

நிகழும் தாரண வருஷம் ஆவணி மாதம் 26ஆம் தேதி (11.09.2004) சனிக்கிழமை பூச நட்சத்திரமும், துவாதசி திதியும் கூடிய நன்னாள் துவங்கி **ஸ்ரீ ஸற்குணேச்வரர் உடனுறை ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ அம்பிகைக்கு** லட்சார்ச்சனையும், மறுநாள் காலை கடை ஞாயிறு தீர்த்தப் பெருவிழாவும், மாலை ருத்ராபிஷேகத்துடன் கூடிய சிறப்புப் பிரதோஷ வழிபாடும் குருவருள், இறையருள் துணை கொண்டு நடைபெற இருக்கின்றன.

யமதீர்த்தமென்று வழங்கப்படும் திருக்குளத்தில் முறையாக ஸங்கல்பம் செய்து கொண்டு நீராடுவதும், முன்னோர்களையும் (பித்ருக்களையும்), தேவதைகளையும் குறித்து வழிபாடு செய்வதும் பெரும் பயனளிக்கும். தனி நபர் வாழ்விலும், குடும்பங்களிலும் உள்ள பல தோஷங்களை நீக்கும்.

இரு தினங்களும் நடைபெறும் லட்சார்ச்சனையிலும், ஆவணி கடைஞாயிறு (12.09.2004) காலை தீர்த்தவாரியிலும், அன்று மாலை நடைபெறும் பிரதோஷ சிறப்பு வழிபாட்டிலும் இறையன்பர்கள் அனைவரும் வழக்கம் போல் ஆர்வத்துடன் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம்.

என்றும் இறைபணியில்

Dr. V. **கிருஷ்ணமூர்த்தி**
பரம்பரை அறங்காவலர்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435 / 2423297 மற்றும் **கிராமவாசிகள்**

"ஆவணி கடை ஞாயிறு தீர்த்தவாரிக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கும்பகோணம், காசிராமன் தெரு, வேதவிநாயகர் கோயிலிலிருந்து வேன்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஞாயிறு (12.09.2004) விடியற்காலை மணி 4.30 - 5.00க்குள் புறப்படுகின்றன. ஒருவருக்குச் சென்று வர கட்டணம் ரூ. 30/- புனித நீராட விரும்புவர்கள் கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றில் முன்னதாகவே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எண்	நிகழ்ச்சி	கட்டணம்	பெறப்படும் பயன்
1.	ஸ்ரீ கணபதி ஹோமம் 11.9.2004 காலை 8.00 மணி முதல் 9.00 வரை	ரூ. 50/-	தடைகள் நீங்கும், எடுத்த காரியத்தில் வெற்றி.
2.	லட்சார்ச்சனை 11.9.2004 முதல் கட்டம் ஆரம்பம் காலை 10.00 மணி, பூர்த்தி 12.30. அன்று பிற்பகல் 4.00 மணிக்கு இரண்டாம் கட்டம் ஆரம்பம். இரவு 8.00 மணிக்கு பூர்த்தி. 12.9.2004 காலை 8.30 மணிக்கு மூன்றாவது கட்டம் ஆரம்பம். பூர்த்தி பகல் 12.30 மணிக்கு	ரூ. 100/-	வாழ்வில் இடர் நீங்கி நலம் பெருக.
3.	ஸ்ரீ ருத்ரஜபம், அபிஷேகம் ஸங்கல்பம் 12.9.2004 அன்று 3மணிக்கு ஆரம்பம். மாலை 6 மணிக்கு பூர்த்தி. மாலை 6.30 மகா தீபாராதனை.	ரூ. 1000/-	இன்னல் நீங்க, செல்வம் பெருக
4.	சிறப்பு அபிஷேகம்	ரூ. 50/-	சுபிட்சம், மங்கலம் பெருக

குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றிற்கான தொகையை "ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா" என்ற பெயருக்கு மணியார்டர் மூலமோ அல்லது வரைவுக்காசோலை (D.D) மூலமோ கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பக் கோருகிறோம்.

G. குஞ்சிதபாதம், FCA., G. நடேசன் & கோ. டபீர் மேல்த்தெரு, கும்பகோணம்–612 001
போன்: 0435 2420047

G. கண்ணன், D/127-A, ராஜமன்னார் சாலை, கே.கே.நகர், சென்னை –78. போன்: 044-24836495

V.L. நாராயண சாஸ்திரிகள், 25/1 சுப்பாரெட்டித் தெரு, எஸ்.என்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. போன்: 044-24897125

R. வைத்தியநாதன், மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிளாட் நெ. 4, கதவு எண் 12, 29வது தெரு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன்: 044 - 22333361





நடந்து வருகிறார் வைகோ!

"வைகோ அங்கிள், டாடா!" கடந்து செல்லும் ஸ்கூல் வேன் ஜன்னலோரக் குழந்தைகள் கையசைக்கின்றனர். நின்று உற்சாகமாகக் கையசைத்து மகிழ்கிறார் வைகோ. கட்டட வேலை செய்து கொண்டிருக்கும் சித்தாள்கள் பாண்டு சட்டியை இறக்கிவிட்டு, வைகோவைச் சூழ்ந்து கொள்கிறார்கள். "என்ன வேலை? எந்த ஊர்?" என்றெல்லாம் இரண்டு வார்த்தை கனிவாகப் பேசிவிட்டு நகருகிறார்... பூரித்துப் போன பெண்கள், அவர் போன திசைக்கு திருஷ்டி சுற்றி கழிக்கிறார்கள். எதிரே பயணிக்கும் பிரமுகர்கள், காரை விட்டிறங்கி, கையைக் குலுக்கி வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள். அந்தந்த பகுதி மக்கள் கும்பலாக நின்று மனு தருகிறார்கள். வைகோவின் நடைப் பயணம் மீண்டும் சுறுசுறுப்படைகிறது.

வெகு தொலைவு நடந்தே வருவது வைகோவுக்குப் புதிதசல்ல! பத்து ஆண்டுகளுக்கு முன்பாக ஐம்பத்தியோரு நாள் - ஆயிரத்து ஐந்நூற்றி அறுபத்தைந்து கி.மீ. தூரம் எழுச்சி நடைப் பயணம் செய்தவர்தான். ஓர் அரசியல் கட்சியின் பிரசார நோக்கம் கொண்ட பாத யாத்திரையாகப் பரிணமித்தது அது. ஆனால், தற்போது வைகோ மேற்கொண்டிருக்கும் மறுமலர்ச்சிப் பயணம், அப்படிப்பட்டது அல்ல. பொதுவாக இவை இரண்டுக்கும் இடையே (ஆறு வித்தியாசங்கள் அல்ல!) நிறையவே வித்தியாசங்கள்.

சீருடையணிந்த தொண்டர் ஒருவர் கட்சியின் கொடியேந்தி முன்னால் நடந்து செல்கிறார். சற்று இடைவெளி விட்டு வைகோ நடந்து வருகிறார். அவருக்குப் பின்னால் மூன்று... மூன்று பேர் வரிசைகளாக, சீருடையணிந்த தொண்டர் அணியினர் அவரைத் தொடர்ந்து நடந்து செல்கிறார்கள். எப்பொழுதும் சுமார் ஆயிரத்து முந்நூறு தொண்டர்கள் அந்த நடைப் பயணத்தில் பங்கு கொண்டு வருகின்றனர். இங்கு இந்தத் தொண்டர் அணி குறித்தும் சொல்லியாக வேண்டும்.

மாநிலம் முழுவதுமாக சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள், தொண்டர் அணிக்கென தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, மது அருந்துதல், புகைபிடித்தல், பான் பராக், குட்கா போன்ற பழக்கங்களே இல்லாத, அல்லது அறவே விட்டொழித்த இளைஞர்கள் மட்டுமே தொண்டர் அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாநிலம் முழுவதுமுள்ள தொண்டர் அணியினரில், சுழல் முறையில் ஆயிரத்து முந்நூறு தொண்டர்கள் மாறி மாறி வைகோவுடன் அணிவகுத்து வருகின்றனர். பகுதி பகுதியாக பங்கேற்றல், ஊருக்குத் திரும்பிச் செல்லுதல் என, மாறி மாறி இயங்கிக் கொண்டிருக்கின்றனர். இறுதியாக இந்த நாற்பத்தியிரண்டு நாள் நடை. ஆயிரத்து நானூற்று முப்பத்தியிரண்டு கி.மீ. தூரம் என்பது, கடைசி வரையில் வைகோ ஒருவருக்கு மட்டுமே பொருந்தி வரும்.





காலை பத்து மணிக்குத் துவங்குகின்ற நடைப் பயணம், மதிய உணவுக்காக நிர்ணயித்திருக்கும் இடம் வரைக்குமாக நில்லாமல் செல்கிறது. சாலையின் வலது ஓரமாய் சங்கிலித் தொடர் போல ஒரு கி.மீ. நீளத்துக்கு தொடர்ந்து வருகின்ற இந்த நடைப் பயணத்தினால், சாலைப் போக்குவரத்து, எந்தவொரு இடத்திலும் பெரிய அளவில் ஸ்தம்பித்து விடுவதில்லை. எங்கேனும் நெருக்கடி ஏற்படும் இடங்களில், சீருடையணிந்த தொண்டர் அணியினரே திடீர் போக்குவரத்துக் காவலர்களாக மாறி நின்று, சில நிமிடங்களில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தித் தந்து விடுகின்றனர்.

நடைப் பயணத்தின் முன்பாக மறுமலர்ச்சி இசைக் குழு, இயக்கப் பாடல்களைப் பாடிக் கொண்டே செல்கிறது. உச்சி வெயில் நடைப் பயணங்களின்போது, வெள்ளைத் துண்டெடுத்து முண்டாசுக் கட்டிக் கொள்கிறார் வை.கோ. அனைவருக்கும் தாக சாந்திக்காக, குடி நீர் லாரி ஒன்று அவர்களுடன் இணைந்தே வருகிறது.

மருந்து மாத்திரைகள் என ஆம்புலன்ஸ் வண்டி ஒன்றும் மருத்துவக் குழுவோடு பயணிக்கிறது.

மூன்று வேளை உணவை அந்தந்த மாவட்டக் கழகம், அந்தந்தப் பகுதிகளில் ஏற்பாடு செய்து தந்து வருகிறது. உணவு தரப்படும் இடங்களில், தட்டேந்தி பூஃபே முறையில் உணவு வழங்கப்படு கிறது. வைகோ முதல் கடைசித் தொண்டன் வரையிலுமாக, அனைவருக் கும் ஒரே விதமான உணவே தரப்படு கிறது.

"வேலூர் மத்திய சிறை உணவைக் காட்டிலும், இதுவே எனக்குச் சிறந்த உணவாக இருக்கின்றது!" என ஓரிடத்தில் குறிப்பிட்டார் வைகோ. மதிய உணவுக் குப் பின்னர் ஓய்வு. மாலை ஐந்தரை மணிக்குத் துவங்குகிறது மீண்டும் நடைப் பயணம். அன்றைய தினத்தின் கடைசி இடத்தை இரவு ஒன்பது, ஒன்பதரைக் குள் தொட்டு விடுகிறார்கள். அங்கு இரவு பத்து மணியளவில் பொதுக்கூட்டம். இரவு ஓய்வு. மறு நாள் காலை, மீண்டும் நடைப்பயணம் என தொடர்கிறது. வைகோவின் மறுமலர்ச்சிப் பயணம்.

"வழியெங்கும் பலதரப்பட்ட மக்களை நேரடியாகச் சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்துள்ளது. சமூகத்தின் அனைத்து தரப்பினரின் முகங்களும், எனக்குள் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தி யுள்ளது. நான் யாரிடமும் எவ்வித அரசியலும் பேசவதில்லை. தேசிய நதி நீர் இணைப்பு, குறிப்பாக முதலில் தென்னக நதி நீர் இணைப்பு, சாதி மத நல்லிணக்கம், ஆண் - பெண் சகோதரத் துவம், பெண்களை மதித்தல், கலாசாரச் சீரழிவிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ளுதல் போன்றவை குறித்தே பெரும்பான்மையான இடங்களில் பேசி வருகிறேன். அனைவர் உள்ளங்களிலும், நல் வாழ்க்கைக்கான நம்பிக்கையை விதைத்து வருகிறேன்!" எனக் குறிப்பிட் டார் வைகோ.

கட்டுரை, படங்கள்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



"பட்டத்து யானைக்கு ஈகோ ஜாஸ்தி!"
"என்ன விசயம்?"
"பாகன் வேலைய மன்னரே செய் யணும்னு எதிர்பாக்குது!"

- அம்பை தேவா



"அவரு சட்டுனு முடிவெடுக்க தெரியாத குழப்பவாதிங்க."
"எதனால சொல்றீங்க?"
"ரிங் ஆனா ரிசீவரை எடுத்துட்டு, எந்த காதுல வெச்சு பேசறதுன்னு ரொம்ப நேரம் யோசிப்பார்."

- தாமரை மா. மகேஷ்ப்ரியன்



ஜே.கிருஷ்ணமூர்த்தி என்ற மாமனிதர்

- க.சி. அகமுடை நம்பி

பிரச்னைகள் தண்ணீர் மாதிரி, வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவை. அதன் வண்ணங்கள் மாற, எண்ணங்கள் தாம் மாறவேண்டும். உண்மையை உணர்வதும், உணர்ந்தலும், வாழ்வை உற்று நோக்குதலும்தான் வாழ்வைப் பற்றிய உண்மை அறிவு, என்ற ஜே.கே.யைப் பற்றிய வள்ளுவன் வழிச் சிந்தனைகளின் தொகுப்பு. கை உதறி காற்றிலிருந்து குங்குமம் வரவழைத்து, ஆயிரங்களில் பரிகாரம் செய்து வைக்கிற போலிக் காவிகளின் பின்னால், கியூவில் நிற்க மறுப்பவர்கள் தேடுகிற நூல்.

- குமரன் பதிப்பகம், 3, முத்து கிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை - 600 017. விலை ரூ. 100/-

மனதில் உனது ஆதிக்கம் - சித்ரன்

விட்ட குறை தொட்ட குறை எல்லோர் வாழ்விலும் உண்டு. சம்பவங்களைத் தொட்டுத் தொட்டுக் கதை வளர்த்து, விட்ட குறையை மட்டும் நம் கற்பனைக்கு விட்டு விடும் சிறுகதைகள். கல்கியில் அறிமுகமாகி, மீண்டும் கதைக் கண்ணாடியில் தம்மைப் பார்த்துக் கொள்ள, மற்ற இதழ்களிலும் வெளியான சிறுகதைகளின் அதிர்வும் ஆரவாரமுமில்லாத நடைப்பயணம்.

- கிழக்கு பதிப்பகம், 16, கற்பகாம்பாள் நகர், மயிலாப்பூர், சென்னை - 600 004. விலை ரூ. 50/-

உலகக் கோப்பை வரலாறு - ஹாக்கி

- பல்லவி குமார்

பந்தைத் துரத்திக் கொண்டு மட்டையோடு ஓடுவது அல்ல விளையாட்டு. மட்டையுடன் மனம், உடல், முழு கவனம், லாகவம், இந்திய மானம் - அனைத்தையும் பிடித்துக் கொண்டு ஆடுவது. தேசிய விளையாட்டில் தங்கம் வென்று தலை நிமிர்ந்த நாம், தரம் தாழவும், மாறவும், தடுமாறவும் காரணங்களையும், மீண்டும் தலை நிமிரும் வழிகளையும், வரலாற்றையும் பாரபட்சமின்றி விவரிக்கும் பதிப்பு.

- மணியம் பதிப்பகம், 39, ரத்தின முதலித் தெரு, குறிஞ்சிப்பாடி, கடலூர் - 607 302. விலை ரூ. 29/-

நல்லொழுக்கம் ஏன்?

- சுவாமி பஜனானந்தர்

'**மா**யை என்பது வெறும் சாக்கு. நம்மையே ஏமாற்றிக் கொள்வது. பாவம் என்பது வெறும் அறியாமை. ஒழுக்கம் என்பது இரண்டுக்கும் மருந்து மட்டுமல்ல, நம் திறமையையும், ஆனந்தத்தையும், வாழ்வின் திருப்தியையும் பூரணமாக உயர்ந்த வல்லது' என்ற விவேகானந்தரின் கருத்துக்கு விளக்கம். ஆத்ம சக்திக்கும் வாழ்வின் பூரணத்துவத்துக்கும் உதவும் நூல்.

- ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 600 004. விலை ரூ. 15/-

- விஷ்வக்

ஆசிரியர் அறையிலிருந்து அப்படியொரு இன்ப அதிர்ச்சியான கட்டளை வரும் என்று எதிர்பார்க்கவேயில்லை. "எஸ்.எஸ்.மியூசிக்கின் புது வி.ஜே.பலோமா மீது மாநகர இளைஞர்களெல்லாம் பைத்தியமாக இருக்கிறார்களாம். ஆதலால் அவரைச் சந்தித்து மேட்டர் தேற்றலாம்!" (ஒரு நிருபரை நண்பர்களும் சுற்றத்தாரும் வியந்து பார்ப்பது இதுமாதிரியான தருணங்களில் தானே!)

டி.டி.எஸ்., செல்போன் ரிங்டோன் இவற்றையெல்லாம் விட, அற்புதமான ஒலியமைப்பு பலோமாவுக்கு. "ஹாய் கைஸ், யு ஆர் வாட்சிங் மீ ஆன்.... ப்ளா.... ப்ளா...." என எஸ்.எஸ்.ஸ்டுடியோவில் பீட்டரிங் விட்டுக் கொண்டிருந்தார் பட்டு மேனி பலோமா.

''அப்பா தெலுங்கு. அம்மா ஆங்கிலோ இந்தியன். இவங்க கூட்டணிக்குக் கிடைத்த வெற்றி தான் நான்.'' சீனியர் வி.ஜே.அக்காக்கள் கொடுத்த அட்வைஸ்படி, ஒவ்வொரு பல்லிலும் சிரிக்கிறார் பலோமா.

''நான் பாட்டுக்கு லயோலாவில் விஸ்காம் படிச்சிட்டிருந்தேன். ஆனா இப்போ? ஆறாவதுல என் கூட படிச்ச பொண்ணு, இத்தனை நாளில்லாம தேத்து வந்து அக்கறையா நலம் விசாரிக்கறா. நான் கூட சௌத் இண்டியன் சாங்ஸ் நிறைய கேட்க ஆரம்பிச்சிருக்கேன். 'நேற்று இல்லாத மாற்றம் என்னது'ன்னு பாடிட்டேயிருக்கேன். 'இசை'ன்னா ரொம்பப் பிடிக்கும். எஸ்.எஸ்.மியூசிக்லே சேர்ந்தது என்னோட பூர்வ புண்ணியம்.'' அலைக் கூந்தலை அடிக்கடி கையால் வாரிக் கொள்கிறார்.

"ஹே, எனக்கு சூர்யான்னா உயிர் தெரியுமா? பேட்டிகள்ல பார்த்திருக்கேன்.

பந்தா இல்லாம ஸ்மார்ட்டா பேசறது கொள்ளை அழகு. ஸ்...ஸ்...'' நல்லவேளை பெண்ணே! ஜோதிகாவுக்குத் தமிழ் தெரியவில்லை என்று அவரது ஆசைக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பினோம்.

''நம்மூர் பசங்க



சென்னை வெண்ணெய்

ரொம்ப நல்லவனுங்க. வெளிப்படையா இருக்கானுங்க. திறந்த மனது. காதலில் கூட, பிடிக்கலையா, இட்ஸ் ஓகே. நல்ல நண்பர்களா இருப்போம்னு ஜென்டில்மேனா மாறி, பொண்ணுங்க தூக்கத்தை இன்னமும் கெடுக்கறானுங்க. மத்த ஊர்ல இப்படிக் கிடையாது. ஏமாத்திடுவானுங்க'' என்றெல்லாம் 'மரியாதை' தந்த போது, நம் கால்கள் தரையிலேயே இல்லை. பலோமா பல்லாண்டு வாழ்க!

கூடவே பெண்கள் சீக்ரெட்டையும் உடைத்தார். "நாங்க ஒரு மனதாகவே இருக்க மாட்டோம். அப்படியா இப்படியா, என குழப்பிக்கிட்டே இருப்போம். சுத்த மோசம் நாங்க." அடடா!

''பேட்டி முடிந்தது. நன்றி'' என்று கைகுலுக்கினோம். ''அட, என்ன நீங்க? வழக்கமா கேட்கற மாதிரி நீங்க சினிமாவில் நடிப்பீங்களா, காதல் அனுபவம் உண்டா, அரசியலில் ஆர்வமுண்டா, இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்கவேயில்லையே?'' என்று முந்தைய பதிலை அடுத்த நொடியே ப்ருவ் பண்ணியவரிடம், ''வழக்கமா நாங்க வழக்கமான கேள்விகளைக் கேட்கறதில்லை'' என்றோம். பெருமிதத்தோடு வழியனுப்பினார்.

- ச.ந. கண்ணன்

படங்கள்: **முகில்**



* ராமசந்திர மூர்த்தி



சமாளிப்பாரா

ஆந்திர முதலமைச்சர் ராஜசேகர ரெட்டி, நக்ஸலைட்டுகளுடன் பேச்சு வார்த்தையைத் துவக்கி இருக்கிறார். போலீஸ் - நக்ஸலைட்டுகளுக்கிடையில் மோதலை நிறுத்த, 'போர் நிறுத்தம்' அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள குழுவில் இடம் பெறுவார் என்று அறிவிக்கப்பட்டவர்களுள் ஒருவர் 'ஆந்திர ஜோதி' தெலுங்கு நாளிதழின் ஆசிரியர் ராமசந்திர மூர்த்தி. ஆனால், கண்காணிப்புக் குழுவில் இடம்பெறுவது தமது கருத்துச் சுதந்திரத்துக்கு இடையூறாக இருக்கும் என்று கூறி, அதில் இடம்பெற அவர் மறுத்து விட்டார்.

முப்பதாண்டுக் கால பத்திரிகை உலக அனுபவம் கொண்ட மூத்த பத்திரிகையாளர், ராமசந்திரமூர்த்தியுடன் நக்ஸலைட்டுகள் பிரச்னை குறித்துப் பேசிய போது...

நக்ஸலைட் பிரச்னையை முந்நாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு அணுகிய முறைக்கும், தற்போதைய முதல்வர் ராஜசேகர ரெட்டி அணுகும் முறைக்கும் என்ன வித்தியாசம்?

நாயுடு, நக்ஸலைட் பிரச்னையை ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்னையாகத்தான் பார்த்தார். போலீஸ், நக்ஸலைட் மோதல்களும் மிகுதியாக இருந்தன. என்கவுண்டர் என்ற பெயரில், நக்ஸலைட்டுகள் மட்டுமின்றி நக்ஸலைட் அனுதாபிகளும், அப்பாவிப் பொது மக்களும் கூட கொல்லப்பட்டனர். போலீஸ் எவரையும் கொன்று விட்டு, நக்ஸலைட் என்று முத்திரை குத்தி விட முடியும் என்ற நிலைமை தான் நிலவியது.

புதிய முதல்வர், தேர்தல் வாக்குறுதியின்படி, இயக்கங்களின் மீதான தடையை விலக்கி, பேச்சு வார்த்தையைத் துவக்கி இருக்கிறார். ராஜசேகர ரெட்டி, நக்ஸலைட்டுகள் பிரச்னையை ஒரு சமுதாயப் பிரச்னையாக அணுகுகிறார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததற்கு, நக்ஸலைட்டுகளின் மறைமுக ஆதரவும் ஒரு காரணமா?


நக்ஸலைட்டுகள் எப்போதுமே, ஆளுங்கட்சியை எதிர்ப்பவர்கள். என்.டி. ராமராவ், ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்பு, "நக்ஸலைட்டுகளை, தேசப்பற்று கொண்ட போராளிகள், மக்கள் நலனுக்காகப் பாடுபடுபவர்கள்" என்று சொன்னார். ஆட்சிக்கு வந்ததும், அவ்வமைப்புகள் மீதான தடையை நீக்கினார். ஆனால் நாளடைவில், அவரையும் நக்ஸலைட்டுகள் எதிர்க்க ஆரம்பித்தனர். ஆக, ஆளுங்கட்சி எதிர்ப்பு என்பதன் மூலமாக எதிர்க்கட்சிகள் பலனடைந்து, ஆட்சிக்கு வந்திருக்கின்றன. இது தெலுங்கு தேசம், காங்கிரஸ் இரண்டுக்குமே பொருந்தும்.

நக்ஸலைட்டு இயக்கங்களில், எத்தகைய பின்னணி உடையவர்கள் இப்போது சேருகிறார்கள்?

"ஒருகால கட்டத்தில் வாரங்கல்லில் உள்ள பிராந்திய பொறியியல் கல்லூரியின் ஏராளமான புத்திசாலி மாணவர்கள்,

நக்ஸலைட்டுகளின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, நக்ஸலைட்டுகளாக மாறினார்கள். ஆனால் நாயுடுவின் ஆட்சியின் போது, ஏற்பட்ட தகவல் தொழில்நுட்பப் புரட்சி காரணமாக, அந்தப் பொறியியல் கல்லூரி மாணவர்களும், படித்த இளைஞர்களும், தங்கள் சுயமுன்னேற்றத்தில் திசை திரும்பி விட்டதால், நக்ஸலைட்டு இயக்கங்களுக்குப் படித்த இளைஞர்களின் வருகை நின்று போனது. எனவே, பள்ளிக்கூட, கல்லூரிப் படிப்பை முடிக்காமல் இடையில் விட்டு விட்ட இளைஞர்களை நக்ஸலைட்டுகள் தம் பக்கம் இழுக்க ஆரம்பித்தனர். ஆக, இப்போது, நக்ஸலைட்டு இயக்கத்தில் புத்திசாலி இளைஞர்கள் அதிகமில்லை.

ரெட்டிகாரு?



★ ராஜசேகர் ரெட்டி

ஏராளமாக ஆயுதங்கள் வாங்க அவர்களுக்கு எப்படிப் பணம் கிடைக்கிறது?

"அவர்களுக்குப் பணம் ஒரு பிரச்னையே இல்லை. வியாபாரிகள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் என எந்தத் தரப்பு பணக்காரர்களுக்கும் ஒரு டெலிபோன் போட்டு, "எங்கள் ஆள் வருவார். இவ்வளவு பணம் கொடுத்தனுப்புங்கள்" என்று சொல்லி விட்டால் போதும். பணம் கிடைத்து விடும். ஆனால், நக்ஸலைட்டுகள், இதை மறுப்பார்கள். "காடுகளில் பழங்குடி மக்களோடு, கிடைத்ததைச் சாப்பிட்டுக் கொண்டு வாழ்கிற எங்களுக்குப் பணம் தேவையில்லை" என்று சொல்லுவார்கள். சில சமயங்களில் நக்ஸலைட்டுகளின் மறைவிடங்களில் போலீஸ் ரெய்டு நடத்திய போது, ஆயுதங்களுடன், பணமும் கைப்பற்றியது உண்டு. ஒரு முக்கியமான தகவலைச் சொல்லட்டுமா? விவசாயிகளின் தற்கொலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, நக்ஸலைட்டுகள் வட்டி இல்லாக் கடன் தந்து உதவிக் கொண்டிருக்கிறார்கள்.

தடைநீக்கப்பட்ட பின், நக்ஸலைட்டுகள் பல்வேறு இடங்களிலும் நடத்தும் கூட்டங்களுக்கு ஏராளமான மக்கள் வருகிறார்களே! இதற்கு என்ன காரணம்?

"சென்னாரெட்டி முதல்வராக இருந்த போது, தடையை நீக்கியதையடுத்து, நக்ஸலைட்டுகள் நடத்திய கூட்டங்களுக்கு எட்டு லட்சம் பேர் போல கூடியது உண்டு. ஆனால், இப்போது ஒரு லட்சம் பேர் வரை கூடுகிறார்கள். மக்களின் ஆதரவு உள்ள பகுதிகளில் கூட்டங்கள் நடத்துகிற போது கூட்டம் வருவதும், தவிர பல வருடங்களாக தலைமறைவாக இருந்தவர்கள், சுதந்திரமாக மேடை ஏறி பேசுவதைப் பார்க்க, மக்கள் ஆர்வம் காட்டுவதும் சகஜம் தானே!

அரசாங்கம், நக்ஸலைட்டுகள் இரு தரப்பிலும் பிரச்னைக்கு சுமுகமாகத் தீர்வு காண வேண்டும் என்கிற நேர்மையான அணுகுமுறை உள்ளதாக நினைக்கிறீர்களா?

ஈழத்தில் விடுதலைப் புலிகள், தமிழ்ஈழம் என்கிற லட்சியத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். வடமேற்கே தனிநாடு கோரி போராட்டம் நடக்கிறது. ஆனால் நக்ஸலைட்டுகள் என்ன சொல்கிறார்கள்? 'எங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை. புரட்சி தான் எங்கள் பாதை' என்கிறார்கள். இதுதான் எங்கள் கோரிக்கை என்று - அவை எப்படிப்பட்டவையாக வேண்டுமானாலும் இருக்கட்டும் - முன்வைத்து, பேச்சு வார்த்தை நடத்தினால்தானே முடியும்? அது இல்லாத சூழ்நிலையில், நக்ஸலைட்டுகள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள, சௌகரியமாக காலத்தைக் கடத்தும் முயற்சியாகவே இதை நினைக்கத் தோன்றுகிறது. இதையும் மீறி, பேச்சு வார்த்தை வெற்றி பெற்று, பிரச்னை தீர்க்கப்பட்டால் சந்தோஷம்தான்!

சந்திப்பு, படம் :
எஸ். சந்திரமௌலி

தண்ணீர் பலிசு!

காஸ்யபன்

அரசரடி திருப்பத்தில் சிக்னல் தயாராக இருந்தது. அடக்கன் 'சர்ர்ர்' என்று திரும்பி வண்டியை அழுத்தினான்.

மாப்பிள்ளை விநாயகரில் இருந்து காமராஜர் பாலம் வரை ஏற்றம். முப்பத்தைந்து லிட்டர் கேன் பதினான்கு வைத்துக் கொண்டு, மூன்று சக்கர சைக்கிளில் போவதற்குள் மூச்சு வாங்கிடும். சுமார் ஐந்நூறு லிட்டர் குடி தண்ணீரோடு போகும்போது, வசந்தம் ஹோட்டல் வரை போகலாம். அதன் பிறகு அழுத்துவது கஷ்டம். குரு தியேட்டர் வந்தால், கீழே இறங்கி இழுத்துக் கொண்டுதான் செல்ல வேண்டும்.

இது இரண்டாவது நடை, இன்னும் ஒரு நடை எடுக்கலாம். இரவு இரண்டு மணியிலிருந்து காத்திருக்க வேண்டும். கேன்களில் நிரப்பி வண்டியில் ஏற்று வதற்குள், சீவன் போய்விடும்.

அடக்கன் பதினைந்து வருடமாக இதைத்தான் செய்து வருகிறான்.

சாந்தி நகர், ரெயிலார் நகர், அசோக் நகர் என்று வீடுகளுக்குக் குடிநீர் சப்ளை செய்யும் பலரில் அடக்கனும் ஒருவன். இந்தக் குடியிருப்புகள் மதுரை நகராட்சிக்கு வெளியே உள்ளன.

டாக்டர், சுப்புராமன் வீட்டு காம்பவுண்டில்தான் இறக்குவான். அங்கிருந்து சைக்கிளில் ஏற்றி வீடு வீடாகக் கொடுப்பான்.

டாக்டர் வீட்டுக்கு மட்டும் தினம் பத்து கேன் தண்ணீர் கொடுப்பான். அவர்கள் வீட்டில் குடிப்பதற்கு மட்டுமல்லாமல், புழங்குவதற்கும் நல்ல தண்ணீர் வேண்டும்.

சாந்தி நகரில் வீடு கட்டும்போது சுப்புராமன் முதலாம் ஆண்டு மாணவன். கிணறு வெட்டியதும் தண்ணீர் 'வழ வழ' என்றிருந்தது. சோப்பு போட வேண்டாம். துணியெல்லாம் நன்றாக வெளுத்துவிடும். சிலர் 'பிராக்கிஷ்' வாட்டர் என்றார்கள். குடித்தால் அடி நாக்கில் ஒரு கசப்பு இருக்கும்.

சுப்புராமன் தண்ணீரை ஒரு பாட்டிலில் பிடித்து சென்னைக்கு அனுப்பினான். ஃபுளோரின் வாட்டர் என்று ரிசல்ட் வந்தது.

தண்ணீரில் ஃபுளோரின் அதிகம் இருந்தால் என்னவாகும்? மருத்துவக் கல்லூரி நூலகம், பேராசிரியர்கள், சக மருத்துவ மாணவர்கள் என்று விசாரித்த போது, எலும்பு பலவீனப்பட்டு விடும் என்று தெரிய வந்தது.

அப்பாவோடு சண்டை போட்டு, குடிக்க மட்டும் வெளியில் இருந்து தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்தான். அப்போது வந்தவன்தான் அடக்கன்.

சுப்புராமன் மற்றவர்களோடு சேர்ந்து, நல்ல குடிநீருக்காகப் பல முயற்சிகளைச் செய்தான். கலெக்டரைப் பார்த்தான். அமைச்சரிடம் மனு கொடுத்தான். பஞ்சாயத்து, சட்டமன்றம், மக்களவை என்று தேர்தல் வந்தபோதெல்லாம் உறுதிமொழி கிடைத்தது. நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை.


டாக்டர் சுப்புராமனும், அடக்கனும் சம வயதினர். சுப்புராமனுக்கு பத்து வயதில் ஒரு மகள். கன்றுக்குட்டி போல துள்ளி விளையாடுவாள். மினரல் வாட்டர்தான் பழக்கம். பாவாடை சட்டையில் செக்கச் சிவந்து தளும்பி நிற்பாள்.

அழகும், படிப்பும் கொண்ட மகளிடம் சுப்புராமனுக்குக் கொள்ளைப் பிரியம்.

அடக்கன் மகள் சடைச்சியும், அதே வயதுதான். டாக்

டர் வீட்டுக்கு வந்து விளையாடுவாள். இப்பொழுதெல்லாம் வருவதில்லை. உடம்பு சரியில்லை என்று கூறினார்கள்.

பெத்தானியாபுரம் தாண்டி பாலத்தில் ஏறின அடக்கன் வண்டியில் ஏறி மிதிக்க ஆரம்பித்தான். அழுக்கு முகத்





அண்மையில் தென்காசி பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்தபோது ஒரு டவுன் பஸ் வர, அதன் கண்டக்டர் 'பம்ளி', பம்ளி' என்று கத்தினார். பஸ்ஸின் அருகில் சென்று பெயர் பலகையில் பார்த்தால் ஊரின் பெயர் : பண்மொழி.

– எஸ்.மோகன்,
சங்கரன்கோவில்

தைத் துடைத்துக் கொண்டான்.

டாக்டர் வீட்டுக்கு இன்னும் இரண்டு கேன் இறக்க வேண்டும். எல்.ஐ.சி.காரர் சத்தம் போடுவார். நேற்றே அவருக்குக் கொடுக்க வேண்டியது - இன்றைக்காவது கொடுக்க வேண்டும். பதினான்கு கேனுக்கும் கிராக்கி இருக்கிறது.

ஆலமரம் தாண்டி ரயில்வே கேட்டில் நிற்கும்போது தான், மனைவி சொன்னது தட்டுப்பட்டது.

"சடைச்சி உருகிக்கிட்டே வருது."

"டாக்டர்ட்ட காட்டேன்."

"காட்டியாச்சு."

"என்ன சொல்லுதாரு?"

"எலும்புல மிஸ்டேக்காம்."

"என்ன செய்யுது."

"நடக்க மாட்டேங்கா, கை, கால் மூட்டு வலிக்குங்கா, ஓடியாட முடியல, சுருண்டு, சுருண்டு படுக்கா."

"அதுக்கு நான் என்ன செய்ய?"

"உங்க டாக்டர்கிட்டே காட்டு."

"ஆத்தாடி! தொட்டா முந்நூறு ரூபாய் காஞ்சிடும்."

"உங்ககிட்டேயுமா கேப்பாரு."

அடக்கனுக்குப் பெருமையா இருந்தது. அவன்கிட்டே டாக்டர், சுப்புராமன் முந்நூறு ரூபா வாங்க மாட்டாரு, குறைச்சு வாங்குவாரு, பணம் வேண்டாம்னுகூட சொல்லுவாரு.

"சரிட்டி! சாயங்காலம் போலாம்."

இரவு ஏழு மணிக்கு மூன்று சக்கர சைக்கிளில் மனைவியையும், மகளையும் ஏற்றிக் கொண்டு டாக்டர் வீட்டுக்கு வந்தான்.

"இந்த பாருமா! உம் மகளுக்கு ஒரு வியாதியும் இல்லை. எலும்பு பலவீனமா இருக்கு. இதுக்கு மருந்து மட்டும் போதாது."

"பொறவு."

"தண்ணிய மாத்துமா."

டாக்டர் சுப்புராமனின் மகள் ஓடி வந்து, சடைச்சியைக் கட்டிக் கொண்டாள்.

"ஏன் சடைச்சி இப்பொல்லாம் வர மாட்டேங்றா?"

"முடியலடி."

"ஏன் முடியல."

"உடம்பு சரியில்லை."

மகள் அப்பாவைப் பார்த்தாள்.

"அவ கிணத்துல தண்ணீர் எடுத்து குடிக்கிறாளா, அதுல ஃப்ளோரின் இருக்கு அது எலும்ப மாவா ஆக்கிடும்" என்று மகளுக்கு விளக்கினார் டாக்டர் சுப்புராமன்.

"ஏம்ப்பா, மினரல் வாட்டர் குடிச்சா வராதில்லையா?"

சுப்புராமன் பதில் சொல்லவில்லை.

"ஏண்டா அடக்கா, ஊரு பூரா நல்ல தண்ணீர் ஊத்திறியே, உம் மக சடைச்சிக்கு ஒரு கேன் கொடுத்தா என்ன?"

"ஏஞ்சாமி, ஒரு கேன் இருபத்து அஞ்சு ரூவா... எனக்கு பவிசா கேக்குது...?"


அடக்கன் மனைவியைப் பார்த்தான்.

"இந்தாட்டி, கிணத்துத் தண்ணிய காய்ச்சிக் கொடு போதும்; இதுக்கு டாக்டர் ரெகமண்டா?"

டாக்டர் சுப்புராமனுக்கு அடக்கன் மேல் தாங்க முடியாத கோபம் வந்தது.

பஞ்சாயத்து தலைவர், எம்.எல்.ஏ., எம்.பி., மேலேயா கோபப் பட முடியும்?

'கடுகு' எழுத்து!



"யாரும் இதுவரை செய்திராத முறையில், கம்ப்யூட்டரில் தமிழ் ஃபாண்ட்களை, அதாவது வடிவங்களை, உருவாக்கியிருக்கிறேன்!" என்கிறார் 'கடுகு' என்கிற, 'அகஸ்தியன்' என்ற எழுத்தாளர் பி.எஸ். ரங்கநாதன்.

"சாதாரண தமிழ் டைப்ரைட்டரில் தட்டச்சு செய்யும் முறையில் அமைத்திருக்கிறேன். கம்ப்யூட்டர் கீ-போர்டில், சற்றுக் கூடுதலாக கீ-க்கள் இருப்பதால், ஒன்றிரண்டு மாற்றங்களைச் செய்திருக்கிறேன். சுமார் அரை மணி நேரப் பயிற்சியில் கணிசமான வேகத்துடன் டைப் செய்யலாம்" என்கிறார் 'கடுகு'.



இந்த மென்பொருள் செயல் பட, இரண்டே இரண்டு ஃபைல்கள்தாம் தேவை. ஒன்று ஃபாண்ட் (வடிவம்); மற்ற எந்தத் தமிழ் ஃபாண்ட்டும் இதில் சரியாக, அல்லது முழுமையாகச் செயல்படாது. இரண்டு, எம்.எஸ்.வேர்டில் உருவாக்கப்பட்ட வானதி டாக் ஃபைல். இந்த ஃபாண்ட்டை இன்ஸ்டால் பண்ணிய பிறகு, வானதி டாக்-ஐத் திறந்தால், உடனே டைப் செய்ய ஆரம்பிக்கலாம். இப்படி டைப் செய்யப்பட்டதை 'சேவ்' பண்ணியபிறகு, வேறு எந்த மென்பொருளுக்கும் எடுத்துச் செல்லலாம். உதாரணமாக, பேஜ் மேக்கர், கோரல் ட்ரா, போட்டோ ஷாப், பெயின்ட் ஷாப், எக்ஸல், பவர் பாயின்ட் முதலியவற்றுக்கு.

"மற்ற தமிழ் மென் பொருளுக்கும், இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. முதலாவது, விலை. நூறே ரூபாய்தான். விளக்கப் புத்தகம், தபால் செலவு உட்பட! குந்தவி, தாரணி, ராஜராஜன் மற்றும் வந்தியத் தேவன் ஆகிய நான்கு ஃபாண்ட்கள் இருக்கின்றன. ('கடுகு' சரியான கல்கி சார் விசிறி!)

"இரண்டாவது, தமிழ் மென்பொருள்களில் தமிழ் டைப்ரைட்டர் முறைப் பாணியில் தட்டச்சு செய்யும்போது, க், கி, கீ போன்ற எழுத்துகளைத் தட்டச்சு செய்ய, க-வை அடித்துவிட்டு, மேல் புள்ளி அல்லது கொக்கிகளைத் தனியாக டைப் செய்ய வேண்டும். திரையில் அவை ஓர் எழுத்தாகத் தெரிந்தாலும், அவை இரண்டு பகுதிகளைக் கொண்டது. (ஹி. ஹியை உற உற என்று அடித்தது நினைவு வருகிறதா?) இது எல்லா உயிர்மெய் எழுத்துகளுக்கும் பொருந்தும். ஆகவே பல சமயம், 'ஜஸ்டிஃபை' போன்ற உத்தரவுகளைக் கொடுக்கும்போது, இவை பிரிந்துவிட வாய்ப்பு இருக்கிறது. ஆனால் வானதி ஃபான்ட் டில், 'க்-வரிசை, கி-வரிசை, கீ-வரிசை எழுத்துகள் பிரியாதபடி ஒரு முழு எழுத்தாக, க், கி, கீ என மாறும் படி புரோக்ராம் செய்யப்பட்டிருக்கிறது. வானதியில் டைப் செய்த பிறகு, சேவ் பண்ணுமுன் ஒரு விசேஷ உத்தரவைக் கொடுத்து விட்டால், எல்லா எழுத்துகளும் முழு எழுத்தாக, இணைபிரியா தம்பதிபோல், ஆகிவிடும்! எந்த அப்ளிகேஷனிலும் இதைக் காபி செய்து 'பேஸ்ட்' செய்யலாம்.

எழுபது வயதில் இது ஒரு சாதனைதான்!

\- சாருகேசி



ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கும் சிறுமியின் ஸ்டில்லை வெளியிட்டு, பொருத்தமான ஃபோட்டோ காமெண்ட்ஸ் எழுதக் கேட்டிருந்தோம். வந்து குவிந்தவற்றில் குட்டி சாமியார், கும்பகோணம் தீ விபத்து, தண்ணீர் லாரி என பழைய நெடி வீசிய வாசகங்களைத் தவிர்த்துவிட்டு, தேர்வு செய்திருக்கிறோம்.

பிரசுரத்துக்குத் தேர்வானவை :

"எம் பேரு ஜெயலட்சுமின்னு சொன்னேன். எதிர்வீட்டு போலீஸ் மாமா ஏன் இப்படி நடுங்குறாரு?"

- மணிமேலை குப்புசாமி, புதுச்சேரி

"குருபெயர்ச்சியாமே. எனக்கு டீச்சர் மாறுவாங்களா?"

- தி. திருநாவுக்கரசு, முசிறி

எத்தனையோ கனவுகள்...
எனக்கும் இந்தியாவுக்கும்!

- கே. நித்தியா, கும்பகோணம்

'மெட்டி ஒலி' முடிஞ்சதும் சோறாம். அதுவரைக்கும் நிலாவை மட்டும் பார்த்துக்கிறேன். ம்... என்ன பண்றது...?"

- பா.து. பிரகாஷ், தஞ்சாவூர்.

ரூ. 200/- முதல் பரிசு பெறும் வாசகம்

"என்னது? ஒண்ணாவதுக்கே ஒற்றைச் சாளர முறையில்தான் அட்மிஷனா!"

- எம்.ஆர். மூர்த்தி, மும்பை

"குடோன்ல இருந்து அரிசி கடத்திகிட்டுப் போறாங்களே... கூட்டாஞ்சோறு ஆக்கவா...?"

- வே. ஆறுமுகம், கள்ளக்குறிச்சி

"எந்தச் சட்டமும் பெரிய மனுஷங்களை ஒண்ணும் பண்ண முடியாதாமே! அப்போ சாதாரண மரச் சட்டம், சின்னவங்களை மட்டும் சிறைப்படுத்தலாமா?"

- வசந்தி வள்ளுவன், மதுரை - 10

"என்னது... தபால் தலை வெளியிட இந்த



திடீர் பரிசுப் போட்டி - 3 முடிவுகள்!

போஸ் பொருத்தமா இருக்கா... எதுக்கும் 'அம்மா'கிட்ட ஒரு வார்த்தை கேட்டுடுங்க!"

- வே. ஆறுமுகம், கள்ளக்குறிச்சி

இந்த ஒலிம்பிக்கில் இவ்ளோதான்!

- ஆர். ரத்தினசாமி, சத்தியமங்கலம்

2024-ம் ஆண்டு படித்த பட்டம் பெற்று வேலை கிடைக்காத தீவிரவாதி!

- கே. குருநாதன், திருச்சிராப்பள்ளி

"வானத்துக் கதிரவனைக் கண்ட வையத்து இளங்கதிர்.

- கல்கிதாசன், பள்ளத்தூர்

ஆடிய துளசிமாலை; அடங்கிய அகந்தை!

ஜோலார்பேட்டை ரயில்வே நிலையத்தில் முக்கிய பயணச் சீட்டுப் பரிசோதகராகப் பணிபுரிகிறார் பால்ராஜ்.

"என் தாத்தா முனுசாமி ராமபக்தராக விளங்கியவர். கிருஷ்ணர் கோவில் ஒன்றை எழுப்பியவர். என் தந்தைக்கும் பக்தி உண்டு. ஆனால் என் நண்பர்கள், சில உறவினர்கள் நாத்திகர்கள். தவிர நான் வளர்ந்த ஜோலார்பேட்டை நாத்திக மண். பெரியார் ஈ.வெ.ரா.வின் ஆரம்பக்கால நாத்திக விதை அழுத்தமாகப் பரவிய பகுதி இது. இவற்றின் காரணமாக, நான் கடவுள் நம்பிக்கை இல்லாமலே வளர்ந்தேன்.

"முப்பத்தியொரு வயதில் திருமணமானது. பெரியோர் நிச்சயம் செய்த திருமணம்தான். நிச்சயிக்கப்பட்ட பிறகு, சுயமரியாதைத் திருமணம்தான் செய்து கொள்வேன் என்றதும் பெண்வீட்டில் தயங்கினார்கள். பிறகு ஒரு வழியாக ஒப்புக் கொண்டார்கள். உச்சநீதி மன்ற நீதிபதி வரதராஜன் தலைமையில் திருமணம் நடந்தது. மனைவி சாந்தா, அம்மன் பக்தை. திருமணத்துக்குப் பிறகு இருவரும் மற்றவர் நம்பிக்கையில் குறுக்கிடாமல், வாழ்க்கை நடத்தி வந்தோம்.

"பன்னிரண்டு வருடங்களாக வயிற்று வலியால் அவதிப்பட்டு கொண்டிருந்தேன். வசித்தது கிராமப் பகுதி என்பதால் 'மந்திரிச்சுக்கோ, ஏவல் எடுத்துக்கோ' என்ற பலவித அறிவுரைகள். கடவுளே இல்லை என்பவன் இதற்கெல்லாமா வசப்படுவேன்?

"அப்போது ஆந்திராவில் ஹோஸ்பேட் அருகிலுள்ள நானியாபுரா என்ற கிராமத்தில், அல்சருக்கு சித்த வைத்தியம் உள்ளது எனக் கேள்விப்பட்டேன். நாகராஜன் என்ற நண்பரோடு அங்கு சென்றேன். அவர் எனது சமவயதுக்காரர் அல்ல. ஆர்.எம்.எஸ்.ஸில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். தீவிர ஆத்திகர். அவருக்கு என் மேல் ஏனோ கண்மூடித்தனமான பாசம்.

"போனகாரியம் முடிந்தபிறகு அங்கிருந்து கிளம்பினோம். "பாலா, இன்னும் எத்தனை காலம் இருப்பேனோ தெரியாது. மந்திராலயம் போக ஆசை. துணைக்குக் கூட வாயேன்" என்று வற்புறுத்தினார். வேண்டாவெறுப்புடன் ஒப்புக் கொண்டேன். மந்திராலயம் சென்றபோது ராத்திரி இரண்டரை மணி. காலை நான்கரை மணிக்கு எழுந்து துங்கபத்ராவில் குளித்தோம். பிறகு சன்னிதிக்குச் சென்றோம். "நான் வெளியில் உட்கார்ந்து கொள்கிறேன். நீங்கள் உள்ளே போய் விட்டு வாருங்கள்" என்றேன். "சும்மா உள்ளே வாயேன். நீ ஒன்றும் கும்பிட வேண்டாம்" என்றார். அவரது அன்புத் தொல்லை தாங்காமல் உள்ளே சென்றேன்.

"அன்று ஏகாதசி. நிர்மால்ய தரிசனம். வெறும் துளசிமாலை ஒன்று மட்டுமே பிருந்தாவனத்தின் மீது அணிவிக்கப்பட்டிருந்தது. "இதைப் பார்க்கவா இவ்வளவு தூரம் வந்தீங்க? நம்ம ஊர் சுடுகாட்லயே நிறைய இருக்குமே" என்று கிண்டலடித்தேன். அப்படிக் கூறியபடியே கம்பித் தடுப்பைத் தாண்டி உள்ளே சென்றேன். உருவமற்ற துளசிமாடம். அதற்கு முன் வெள்ளி பாதரட்சைகள். கேலியான எண்ணத்தோடு அவற்றைத் தூக்கி என் தலையில் வைத்துக் கொண்டேன். சும்மா விதண்டாவாதத்துக்காக "அப்படியே ஊர் போயிடலாமா?" என்றேன். அப்போதுதான் கவனித்தேன் - பிருந்தா



✱ பால்ராஜ்

வனத்தின்மீது சார்த்தப்பட்டிருந்த துளசி மாலை வேகமாக ஆடியது. அப்போது காற்றும் வீசவில்லை. அடுத்த வியப்பு காத்திருந்தது. அடுத்து சுமார் மூன்றரை அடி நீளமும், நான்கே முக்கால் அடி உயரமும் கொண்ட அந்தக் 'கல்' ஆடியது. என் வியப்பை வெளிப்படுத்தியதும், "எங்கேடா ஆடுது? எனக்குத் தெரியல்லியே" என்றார் நண்பர். அப்போது எங்களுக்குப் பின்னால் ஒருவர் நின்றதை கவனித்தேன். இதுவரை அவர் கோயிலில் நுழைந்ததை நான் கவனித்திருக்கவில்லை.

"சற்றே பிரமிப்புடன் கோயிலுக்கு வெளியே வந்தபோது "நல்லா ஆடுதா? நாளைக்கு நீ எப்படியெப்படியோ ஆடப் போறே" என்றபடி அந்த நபர் கோயிலின் பின்புறமாக நடக்கத் தொடங்கினார். சில நொடிகளில் சுதாரித்துக் கொண்ட நான், அவரைத் தேடத் தொடங்கினேன். நான் ஒரு புறமும், நண்பர் ஒருபுறமாக கோயிலை எதிர்த் திசைகளில் வலம் வந்தும் அவரைக் காணமுடியவில்லை.

"அதற்குப் பிறகு என்னுள் ராகவேந்திரரைப் பற்றிய நம்பிக்கை உருவாகி வலுத்தது. தனியாக ஒருமுறை மந்திராலயத்துக்குச் சென்றேன். அன்றிரவு அங்கு கடும் காய்ச்சல், மற்றும் குளிர். இறந்துவிடுவேனோ என்ற அச்சம் உண்டானது. "ராகவேந்திரா, உங்கள் சக்தி புரிந்தது. உங்களை இத்தனை நாள் மறுத்து வெறுத்த என்னை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? நாளைக் காலையில் என் உடல்நலம் சரியாகியிருந்தால், உங்கள் நாமத்தைக் கூறுவதையே என் வாழ்வின் முக்கியக் குறிக்கோளாக ஏற்பேன்" என்று மனதுக்குள் வேண்டினேன். பிறகு என்னையுமறியாமல் கண்ணயர்ந்தேன். காலையில் எழுந்தபோது குளிரும் காய்ச்சலும் எங்கோ போய்விட்டிருந்தது. நதியில் குளித்துவிட்டு ராகவேந்திரர் பிருந்தாவனத்துக்குப் போனேன். "என்னை ஐம்பது முறையாவது இங்கு வரவழைக்க வேண்டும்" என மனமார வேண்டிக் கொண்டேன். இதுவரை நூற்றுக்கும் அதிகமான முறை அங்கு சென்று வர முடிந்தது. 2,500 பிரசங்கங்கள் அவர் குறித்து நடத்த முடிந்திருக்கிறது. எல்லாம் அவன் அருள். "பூஜ்யாய ராகவேந்திராய..." என மெய்சிலிர்க்கிறார்.

-ஜி.எஸ்.எஸ்.

மதகின் மேல் அமர்ந்தான் கதிரவன்.

மீண்டும் அதே கேள்வி துரத்தியது.

நாம் எதற்காகக் காதலித்தோம் தாமரை? காதல் என்பது பிறப்பு, குலம், வட்டி, சொத்து இவற்றின் மேன்மையும், உன்னதமும் மறைந்த பின்புதானே யோசிக்கப்படும் விஷயமாக உள்ளது. இது தெரிந்தும் ஏன் நாம் காதலித்தோம்?

தோளில் கை படர, கதிரேசன் கண் விழித்தான்.

அழகப்பன்.

பதறிப் போய் எழுந்தான்.

"அண்ணே! எதுக்குண்ணே வந்தீக?"

"சரசுவதி, நீ தோப்பு குத்தகைக்குப் போயிருக்கிறதா சொல்லிச்சு. இரண்டு நாள் முன்னாடிதான் குத்தகை பைசா செட்டில் பண்ணிக் கொடுத்தாச்சே. நீ எதுக்கு தோப்புப் பக்கம் போகணும்னு யோசிச்சேன். லேசா படபடப்பாயிடுச்சு. அதான் ஓடி வந்தேன்."

"நான் கம்மாயில் விழுந்து உயிரைப் போக்கிக்குவேன்னு நினைச்சீங்களாண்ணே? என் உசிரு அவ்வளவு சுலபமாப் போயிராதுண்ணே."

"வள்ளி மெடிக்கல்ஸ் வெறும் மருந்துக்கடை மட்டுமில்லை. அது அப்பச்சியின் உழைப்பு; தெய்வானை ஆச்சியின் லட்சியம், கனவு, நேர்மை, பாரம்பரியத்தின் தொடர்ச்சி. நீ மேலும் மேலும் நல்லவனாகவே இருப்பது அதன் தொடர்ச்சினாலும், நாகப்பனின் பொறாமை ஒட்டு மொத்தமா வள்ளி மெடிக்கல்லை அழிச்சிடுமோன்னு பயமா இருக்கு. அதனால..."

"என்ன செய்யணும்னு சொல்லுங்கண்ணே."

"அவன் கண்ணுல படாம வெளியூர் எதுக்காச்சும் போயிடு தம்பி."

"அண்ணே...." கதிரேசன் வாயடைத்து நின்றான்.

"உன் நல்லதுக்குத்தான் சொல்லுறேய்யா."

"நெஞ்சுல உடனே ஒரு கேள்வி வருதுண்ணே. கேட்கலாமா?"

"நீ என்ன கேப்பன்னு தெரியும் தம்பி."

"நாகப்பனை வீட்டை விட்டு வெளியே போன்னு சொல்ல உங்களால முடியுமாண்ணே?"

"என்னைத் தப்பா புரிஞ்சுக்கிட்ட தம்பி. காலமும், அது ஏற்படுத்திக் கொடுக்கும் சந்தர்ப்பங்களும், உனக்கு மனோபலத்தையும், ஆத்ம சுத்தியையும் கொடுக்கும். உன் மேல் விழுந்த சேற்றை காலமே கழுவிச்



19 வலம்புரி முத்து

சுத்தப்படுத்தும். இப்போதைக்கு உனக்குப் பழி மட்டும் தான் தம்பி வந்து சேர்ந்திருக்கு. பொறாமையின் ஜ்வாலை அதிகமாகி அது உன்னை பலிவாங்கிட்டா, இந்தப் பிறவி முழுவதும் உன்னால் அந்த சேற்றைக் கழுவ முடியாமல் போயிடும். நீ உயிரோடு இருக்கோணுங்கறதுக்காகச் சொல்றேன். நீ இந்த ஊரை விட்டுப் போயிடுய்யா...'' என்றான் அழகப்பன்.

வள்ளி மெடிக்கல்ஸ், அப்பச்சி, தெய்வானை ஆச்சி, நாகப்பன், தாமரை என ஒரு தட்டாமாலையே அவன் கண்களுக்குள் சுழன்றது. தாமரை கை கொட்டிச் சிரித்தான்.

''பத்து நாளைக்குள் போலீஸ்காரர்களிடம் பேரம் பேசி, கேஸை வாபஸ் பண்ணிப் புடறேன். ஊர்க்காரவுக உன் மேல் பட்டிருக்கும் அபிப்ராயத்தை உன்னால் இலேசில் மாத்திர முடியாது. தொட்டுத் தொட்டு எல்லா ஊரிலும், நம் நகரத்தார் மத்தியில் நீ இன்னார் மகன்னு சொல்லி பிழைப்பு நடத்தலே முடியாது. மனசை திடமா வெச்சுக்கிட்டு, நீ பெரியாளா வரணும். வருவ. நீ சிதம்பரம் செட்டியார் மகன். உன்னால் முடியும். நீ எவ்வளவுக்கெவ்வளவு உழைப்பால் முன்னேறுறியோ, அவ்வளவுக்கவ்வளவு உன் அவப்பெயர் மறையும். ஒரு கதவைச் சாத்தினா, ஆண்டவன் இன்னொரு கதவைத் தொறக்காம இருக்கமாட்டான். நான் சொல்லுறது புரியுதா?'' என்றான் அழகப்பன்.

இரண்டு வாரங்களில் பைசா பெற்றுக் கொண்டு காவல் துறையினர் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ள, நாகப்பன் மேலும் மேலும் கதிரேசனைத் தூற்ற, கதிரேசன் தான் விலகிக் கொள்வதாக ஒரு கடிதம்



எழுதி விட்டு, கம்பன் எக்ஸ்ப்பிரஸ்ஸில் சென்னையை நோக்கிப் பயணித்தான்.

ஆளாடியில் நிழல் அசைய வெளியில் பார்த்த தாமரை, சட்டென்று எழுந்து பின்கட்டுக்குச் செல்ல எத்தனித்தாள். அருணாசலம் திருஞானத்தையும் உடன் அழைத்து வந்திருந்தான்.

"தாமரை!" அடுப்பங்கரைக்கு வந்த அருணாசலம், தங்கையை அழைத்தான்.

"என்ன?" என்றாள் எந்திரத்தனமாக மோர் கலந்தபடி.

"மூஞ்சியைத் தூக்கி வெச்சுக்கிட்டு மோர் கொடுக்காத தாமரை. பெரிய புள்ளி தாமரை, இந்தத் திருஞானம். கோட்டையூரில் சோமு செட்டியார் வீடுன்னா, சின்னப்பிள்ள கூட கை காட்டும். இவுக அண்ணன், அப்பச்சி, சித்தப்பு, பங்காளி எல்லாம் ஃபைனான்ஸ் கம்பெனி நடத்தறாங்க. நாட்டில் முன்னணி ஃபைனான்ஸ் கம்பெனி. அப்படிப்பட்ட பரம்பரையைச் சேர்ந்தவர் வீடு தேடி வந்திருக்காரு."

"வேணுமின்னா சதிர் ஆடட்டுமா?"

"தாமரை!" அருணாசலம் குரல் உயர்த்தினான்.

தாமரை அவனை விலக்கிக் கொண்டு, திருஞானம் அமர்ந்திருந்த இடத்துக்குச் சென்றாள். அவன் திருவிழாவில் பஞ்சு மிட்டாய் பார்த்த சிறுவனைப் போல ஒரு சிரிப்புச் சிரித்தான்.

"தமிழ்நாட்டுப் பெண்களின் குணமும், தன்மையும் வேறு யாரிடமும் கிடையாது. குறிப்பாக செட்டிநாட்டுப் பெண்களின் அடக்கமும், இறை நம்பிக்கையும்...ஹி! ஹி!"

'மோரைக் குடிச்சிப்புட்டு டம்ளரைக் கொடு' என்று தாமரை உள்ளுக்குள் பொருமினாள்.

"அடுப்படியில் வேலை இருக்கு" என்று தாமரை உள்ளே போய் விட்டாள். "உன் தங்கச்சிக்கு நல்ல அறிவும் இருக்கு அருணாசலம்" என அவன் அண்ணனிடம் பிரகடனப்படுத்திக் கொண்டிருப்பது தெரிந்தது. நல்லறிவும் என்ற உம்மைத் தொகைக்கு, என்ன அர்த்தம்? "சரி, அப்ப நான் கிளம்பிக்கிறேன் அருணாசலம்" என்றபடி அவன் உள்ளே எட்டிப் பார்த்தது தெரிந்தது.

"தாமரை! சார் கிளம்பிக்கறேன்னு சொல்றாங்க."

"சார் எல்லாம் எதுக்கு அருணாசலம்? திருஞானம்னே கூப்பிடுங்க."

தாமரை மேலும் நிலைமையை மோசமாக்க விரும்பாமல், வெளியில் வந்து நின்றாள்.

"போயிட்டு வர்ரேங்கறாங்க."

"சரி" என்றாள்.

அருணாசலம் அவளுக்கு மட்டும் புரியும்படி முறைத்தான். சரி என்று சொல்லியிருக்கக் கூடாது. 'போயிட்டு வாங்க என்று சிரித்தபடி தலையை அசைத்துச் சொல்லியிருக்க வேண்டும்' என்பது அந்த முறைப்பின் பொருள்.

அவன் கிளம்பியதும் விசாலாட்சியும், சீதையும் அர்ச்சனைக் கூடையுடன் உள்ளே நுழைந்தார்கள். அண்ணன் பிள்ளைகள் இரண்டும் பலூன்களைச் சுழற்றியபடி உள்ளே ஓடின.

"என்னா கூட்டம்! ஆத்தி! அன்னாபிஷேகம்னா முன்னமெல்லாம் கட்டளைக்காரவுக வருவாக. கூட நாலஞ்சு பேரு. சுத்தறதுக்குக்கூட பிராகாரத்தில் ஆள் இருக்காது. ஆவுடையாருக்கு வேர்த்து விறுவிறுத்து தனிமை கிலிபிடிக்க ஆட்டும். இப்பம் என்னடான்னா, பிரதோசமுன்னாலும் கூட்டம். சோமவாரமுன்னாலும் கூட்டம். சிவராத்திரின்னாலும் கூட்டம். கிறுகிறுன்னு வந்திருச்சி. ஆத்தி! அய்யா! அந்த காத்தாடி சுவிட்சப் போடுய்யா" என ஆத்தா முற்றத்து நடையில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு சாய்ந்தாள். சீதை மாற்றுச் சேலை உடுத்த அவள் அறைக்குள் நுழைந்தாள்.

"அப்பச்சி வரலியா? என்றாள் தாமரையைப் பார்த்து.

> "படத்துல ஆபாசம் தூக்கலா இருக்கிறதைக் கூட பொறுத்துக்கலாம்..."
> "பின்னே...?"
> "சென்சாருக்கு நன்றினு தயாரிப்பாளர் போஸ்டர் போட்டு ஒட்டுறது டூ மச்!"
>
> - அம்பை தேவா



"இல்லை!"

"உமையா எங்கனெ?"

"கம்ப்யூட்டர் கிளாசுக்குப் போயிருக்கா."

"லட்சுமண் டியூஷன்லந்து வந்துட்டானா?"

"இல்லை.'

"திருஞானம் வந்துட்டு..." விசாலாட்சி ஆச்சி நாக்கை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டாள்.

சட்டென்று தாமரைக்குச் சந்தேகம் எழுந்தது. அதுதானா?

"திருப்பிக் கேளு."

"அப்பச்சி திருவாசகம் கேட்கவா போயிருக்காஹ?"

"பேச்சை மாத்தாத ஆத்தா. திருஞானம் வந்துட்டுப் போயிட்டாகளான்னு கேட்க வந்த. ஏன் பொய் சொல்லுற?"

"ஆமாம் வட்டமேசை மாநாடு பாழாப் போகுது, நான் பேச்சை மாத்துறேனாம். திருஞானம் வந்துட்டுப் போயாச்சான்னு கேட்டா என்ன தப்பு சொல்லப் போற?"

தாமரை சுதாரித்துக் கொண்டாள். தன்னை வீழ்த்துவதற்குப் பெரிய வலை பின்னப்படுகிறது. இது போன்ற நேரங்களில், அப்பச்சியோ அல்லது கதிரேசனோ இல்லாமல் தனியே சமாளிக்க முடியுமா என்ற அச்சம் எழுந்தது. விதி என்பது இதுதானோ? கதிரேசன் என்னும் தூல வடிவம் மட்டுமில்லை. அவன் சூட்சும உருவத்தாலோ, அன்றி அவனது பெயர் கூட இனிமேல் ஒரு பலனையும் தரப் போவதில்லை. கதிரேசன் தனது உன்னத எண்ணங்களுக்கு ஒரு வடிவம். சிந்தனை வடிவம். அதை உடன்பாடு எனலாம்; நேசம் எனலாம்; காதல் எனலாம். இவர்களுக்குப் புரியப் போவதில்லை.

"இவன் சம்மதம்தான் வேணுமாம். சொத்துன்னா அப்படி சொத்து. பெரிய பைனான்க கம்பெனிக்காரங்க. மினிஸ்டரியிலோ, பாங்க் இண்டஸ்ட்ரியிலோ, சிமெண்டு, கம்ப்யூட்டர்னு பெரிய பெரிய துறைகளில் எல்லாம் இவங்க புள்ளிங்கதான் இருக்காங்க. பொண்ணு கொடுக்க யானை மேலயும், குதிரை மேலயும் வந்து வரிசையில் நிக்கிறாங்க. உள்ளூர் பொண்ணு மட்டுமில்லை. சீமையிலிருந்து பல தொழில் அதிபர்கள். அப்படிப்பட்ட ஒருத்தன் வீடு தேடி வந்து, உங்க தங்கையைப் பிடிச்சிருக்குன்னா என்ன அர்த்தம்?" என்றான் அருணாசலம். அவர்கள் களம் இறங்கி விட்டனர்.

"என்ன அர்த்தமா? அவனிடம் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத பாதகம் ஏதோ மறைஞ்சிருக்குன்னு அர்த்தம்" தாமரை சீறினாள்.

"சுத்தி வளைச்சுப் பேசலை தாமரை. திருஞானம் உன்னைக் கலியாணம் கட்டிக்க இஷ்டப்படுறானாம். உனக்குச் சம்மதமா? நாங்க பூரண சம்மதமா இருக்கோம்."

"நீங்கன்னா, அப்பச்சியையும் சேர்த்தா?"

"அவுகளும், நீயுந்தான் அந்தப் பட்டுக் கெடப்பான் கதிரேசன் பெயரைச் சொன்னீங்க. அவன் பொளப்புதான் நாறிக் கெடக்குதே" என்றாள் விசாலாட்சி தீர்மானமாக.

"விட்டுடு ஆத்தா. என்னை எல்லாரும் விட்டுடுங்க. எனக்கு இப்ப கலியாணம் வேணாம்."

"உனக்குங்கீழே உமையா இருக்கா. தங்கம் போல ஒரு பையன் வந்து வரதட்சணை வேணாம்; உடுத்தியிருக்கும் சிலையோட பொண்ணைக் கொடுங்கன்னு கேட்டா, இவளுக்குப் பிடிக்கலியாம். சின்னப் பொண்ணு, சின்னப் பொண்ணுன்னு மதிப்பு கொடுத்துப் பேசினது எங்க தப்பு தாமரை."

"மிரட்டறியா ஆத்தா?"

அங்கேயும் ஓர் அம்மா!



கும்பாபிஷேகம், அன்னதானம், யாகம், பூஜை என ஆன்மிகச் செம்மலாக விளங்கும் தமிழக 'அம்மா' போலவே ராஜஸ்தானிலும் ஒரு 'மா' இருக்கிறார். முதலமைச்சர் வசுந்தரா ராஜே சிந்தியா. தோல்பூர் மகாராணி!

கடவுள் பக்தி எக்கச்சக்கம். கைகளில் கலர்கலராக மந்திரக் கயிறுகள் உள்ளன. வசிய குங்குமத்தின் மீது அட்சதையை இட்டுக் கொள்ளாமல் வெளியே கிளம்புவதில்லை. எந்நேரமும் காமாட்சி அம்மன் பதித்த புனித டாலர் அணிந்திருக்கிறார்.

"பானிபட் யுத்தத்தில் படுகாயமுற்ற எங்கள் மூதாதையர் ஒருவரைக் காப்பாற்றி, குணமாக்கினாராம் ஒரு முஸ்லிம் பெரியவர். அதற்கு நன்றிக் கடனாக அவரை எங்கள் குவாலியர் தர்பாருக்கு அழைத்து வந்து குருவாகக் கொண்டாடியிருக்கிறார்கள். அவரது பெயர் சர்தார் ஸ்ரீ சாஹிப். அந்த குருவின் வழித் தோன்றல்கள் இன்றைக்கும் அரண்மனையின் ஆஸ்தான குருமார்களாக நல்வழிப் படுத்தி வருகிறார்கள். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, நாங்கள் எல்லா முஸ்லிம் பண்டிகைகளையும் கொண்டாடுகிறோம். எனக்கு மதபேதமில்லை. சர்ச்சுக்குப் போய் 'நோவினா' சொல்கிறேன். தர்காக்களுக்கு நன்கொடை அனுப்புகிறேன். கடவுள் ஒருவரே... ஏழைகளுக்கு உதவி செய்வதே சிறந்த கடவுள் பணி என நம்புகிறேன்" என்கிறார் ராஜஸ்தான் மகாராணி!

- ஆர்.எல்.

"ஆமாம். என்ன செய்வ?"

"கலியாணம் கட்ட முடியாதுன்னு நானும் முரண்டு பிடிச்சா, என்ன செய்வ?"

"ஆத்தா ஒண்ணும் பண்ண மாட்டாஹ தாமரை. நான்தான் தற்கொலை செஞ்சுக்குவேன்" என்றான் அருணாசலம்.

"இந்த பூச்சி காட்டும் வேலை என்னிடம் வேண்டாம் அண்ணே! ஆயிரம் சினிமாவில் கையாளப்பட்ட அரதப் பழசான உத்தி. நீ தற்கொலை செஞ்சுப்பேன்னா, நான் ஓடிப் போயிருவேன்."

சொல்லிவிட்டு தாமரை வாசலுக்குப் போய்விட்டாள்.

திண்ணையில் சென்று அமர்ந்தாள். திண்ணையில் தான் அப்பாவுக்கும், கதிரேசனுக்கும் இடையில் எவ்வளவு இலக்கியப் பரிமாற்றங்கள். ஓங்கிய குரலில்லை கதிரேசனுக்கு. ஆனால் உறுதி நிறைந்த குரல். அவன் தன்னை முழுமையாக வெளிப்படுத்திக் கொள்ள யாரும் அவனுக்குச் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. எனக்குள் ஒரு கனல் உண்டு. நான் தாங்கும் கதிரேசன் என்ற நல் ஆத்மாவின் மேல் எழுந்த காதல், என்றும் நம்பிக்கைச் சுடர் எழுப்பும் கனல். அதை அணையாமல் என்னால் காக்க முடியும்.

அவள் நம்பிக்கையைக் குலைக்கும் விதமாக உள்ளே சீதையின் குரல் அடிவயிற்றிலிருந்து ஒலித்தது. "அய்யய்யோ! மோசம் பண்ணிப்புட்டீங்களே! என்னை அநாதயா தவிக்க விட்டுப்புட்டீங்களே."

தாமரை பதறியபடி உள்ளே போனாள்.

(தொடரும்)

மாணவர்கள் கட்டாயம் படிக்க வேண்டிய தொடர்!

ஹலோ, இறைவா - 7

எது பிரார்த்தனை?

சுவரில் கறுப்புப்புள்ளியை எழுதி வைத்து, அதையே கூர்ந்து பார்த்து பயிற்சி செய்தால், மனக்கூர்மை அதிகரிக்கும் என்று சொன்னேன் அல்லவா? இப்போது இன்னொரு பயிற்சியை சொல்லித் தரப் போகிறேன். ரொம்ப எளிய பயிற்சிதான்.


நீங்கள் படிக்கிற அறையிலேயே இதைச் செய்யலாம். ஒரு சிறிய ஸ்டூலைப் போட்டு, அதன் மேல் ஒரு மெழுகுவத்தியை ஏற்றி வையுங்கள். மெழுகுவத்தி இல்லையெனில், அகல்விளக்குகூட ஓ.கே.தான். அதிலிருந்து சுமார் இரண்டடி தள்ளி, தரையில் சௌகரியமாக உட்கார்ந்து கொள்ளுங்கள். அந்த அறைக்குள், மின்சார விசிறியை ஓட விட வேண்டாம். அது சுற்றும்போது, விளக்கு அல்லது மெழுகுவத்தியின் சுடர் அலை பாயும்; சமயத்தில் அணைந்து போகக் கூடும்.

உட்கார்ந்தபடி, தீச்சுடரைக் கவனியுங்கள். சில நிமிடங்கள் இலேசாக அப்படியும், இப்படியுமாக அது அலை பாயக்கூடும். அப்புறம், நின்று நிதானமாக அசையாமல் எரிய ஆரம்பிக்கும். கரெக்ட்! இதுதான் உங்களுக்கு ஆரம்ப இடம். அப்படியே பார்வையை தீச் சுடரின் மேற்புற நுனி மீது பதித்து விடுங்கள்... ம்... அதையே உற்று நோக்குங்கள்...





சுவாமி போதமயானந்தா



''அவருக்கு அவநம்பிக்கை ஜாஸ்தி!''
''அதுக்காக ஸ்கூட்டர்ல நாலு ஸ்டெப்னி டயர் வச்சுருக்கறது டூ மச்!''

- அம்பை தேவா

சில விநாடிகளில், உங்களை முழுக்க, முழுக்க அந்தச் சுடர் அப்படியே வசீகரித்து விடும். நேரம் ஆக ஆக... அந்த தீச்சுடர் தவிர, மற்றவை உங்கள் கவனத்தை ஈர்க்காது.

முந்தைய பயிற்சியைப் போலவே, முதல் சில நாட்களுக்கு மூன்று நிமிடங்களில் ஆரம்பித்து, படிப்படியாக ஐந்து நிமிடங்களாக்கலாம்.

இந்த இரண்டு பயிற்சிகளையுமே, நீங்கள் ஓரிரு வாரங்களில் பதினைந்து நிமிட அளவுக்கு அதிகரித்து விட முடியும். அந்தக் கால அவகாசமே போதுமானது.

சிலருக்கு முதல் பயிற்சியின்போது, தலைவலி போன்ற பிரச்னைகள் வரக் கூடும். அவர்கள் இரண்டாவது பயிற்சியை மேற்கொள்ளலாம். பிரச்னை ஏதுமில்லை எனில், உங்களுக்கு எது சௌகரியமோ அதை நீங்கள் கடைப்பிடிக்கலாம். இரண்டில் ஏதாவது ஒன்றே போதுமானது.

சரி! இந்தப் பயிற்சியை எப்போது செய்வது? காலையிலோ, மாலையிலோ செய்யலாம். எப்போது செய்தாலும், சோர்வுடன் நீங்கள் இருக்கக் கூடாது. குளித்தவுடன் அல்லது விறுவிறுவென்று ஒரு நடை போய் விட்டு வந்து, அல்லது முகம், கை, கால் சுத்தம் செய்துகொண்டு, புத்துணர்ச்சியுடன் செய்ய வேண்டியது அவசியம்.

இந்தக் கவனக் குவிப்பு பயிற்சிகளை வாழ்நாள் முழுக்க, யோகா, தியானம் போல செய்ய வேண்டிய அவசியமில்லை. எந்த ஒரு விஷயத்திலும் உங்களால் கவனம் செலுத்த முடிகிறதா, உங்கள் கவனம் சிதறாமல் ஒருமுகப்படுகிறதா என்பது உங்களுக்கே தெரியும். அப்படி ஒரு கட்டம், இரண்டு அல்லது மூன்று மாதங்களில் உங்களுக்கு ஏற்படும். அப்போது, இந்தப் பயிற்சியை நீங்கள் தாராளமாக நிறுத்தி விடலாம்.

ஆனால் ஒரு விஷயம். கோடை விடுமுறை விட்டவுடன், ஒரு சில மாணவர்கள், புத்தகப் பையை மூட்டை கட்டி பரண்மேல் போட்டு விடுவதைப் போல, இந்தப் பயிற்சிகளைத் திடுமென நிறுத்தி விடக் கூடாது. அது ஒரு சில விளைவுகளை ஏற்படுத்திவிட வாய்ப்பு உண்டு. எனவே பதினைந்து நிமிடம் என்பதை, படிப்படியாகக் குறைத்து ஐந்து நிமிடங்களுக்குக் கொண்டு வந்து, அதன்பின் நிறுத்துவது தான் முறை.

மூன்றாவது பயிற்சிமுறை ஒன்று இருக்கிறது. அது கறும்புள்ளி, தீப ஒளி எதுவுமே இல்லாமல், மனத்திலேயே அவை இருப்பதாக உருவகப்படுத்திக் கொண்டு, அவற்றின் மீது கவனத்தைப் பதிப்பது. மாணவர்களாகிய உங்களுக்கு அந்தப் பயிற்சி இப்போதைக்குத் தேவை இல்லை.

கறுப்புப்புள்ளி அல்லது தீப ஒளி முன்பு அமர்ந்து, கான்ஸன்டிரேஷன் பயிற்சி செய்கிறபோது, பதினைந்து நிமிடமும் அதையே முறைத்துப் பார்த்தபடி உட்கார்ந்திருக்கக் கூடாது. கண் பார்வை அதன்மீது பதிந்திருக்க வேண்டும். மனமோ, பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும்.

பிரார்த்தனை என்றவுடன், ஏறத்தாழ எல்லாருமே செய்வது போன்று, இறைவனிடம், ''எனக்கு இது வேண்டும்; அது என்னிடம் இல்லையே! எனவே அதனை கொடு'' என்று கோரிக்கை வைப்பது இல்லை.

இன்னும் பலர், ''கடவுளே! எனக்கு இது

வேண்டும். அதை மட்டும் நீ கொடுத்து விட்டால் நான் தேங்காய் உடைக்கிறேன்" என்பதில் ஆரம்பித்து, பேரம் பேசுவதற்கு வானமே எல்லை. இதுவா பிரார்த்தனை?

பிரார்த்தனை என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு, மகாபாரதத்தில் ஒரு குட்டிக்கதை இருக்கிறது.

கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் போர் மூள்வது உறுதியாகிவிட்ட தருணம். துரியோதனன், அர்ஜுனன் இரண்டு பேருமே, பகவான் கிருஷ்ணரைப் பிரார்த்தித்து, ஆசி பெற வேண்டும் என்று வந்திருக்கிறார்கள்.

கிருஷ்ணர் படுத்துத் தூங்கிக் கொண்டு இருக்கிறார். முதலில் வந்த துரியோதனன், தான் ராஜகுமாரன் என்கிற பந்தாவுடன், வந்து கிருஷ்ணரின் தலைப்பக்கத்தில் இருந்த இருக்கையில் அமருகிறான்.

அடுத்து வரும் அர்ஜுனனோ, பணிவுடன் வந்து, கிருஷ்ணரின் கால்மாட்டில் பக்தி சிரத்தையுடன் நிற்கிறான்.

கண் விழித்தவுடன், கிருஷ்ணர் கண்களில் முதலில் தென்படுகிறார் கால்மாட்டில் நின்று கொண்டு இருக்கும் அர்ஜுனன்.

"என்ன விஷயம்?" என்று கேட்கிறார்.

"பாரதப் போர் மூளப் போகிறது. நாங்கள் வெற்றி பெற வேண்டும் என்பது எங்களது பிரார்த்தனை. அதற்கு அருள் புரிய வேண்டும்" என்றான் அர்ஜுனன்.

"ஓ! அப்படியா? நான் இரண்டு விதங்களில் உனக்கு உதவலாம். ஒன்று, என் கையில் உள்ள சகல விதமான படைகளையும் உனக்காக அனுப்பி வைக்கலாம். இரண்டாவது, நான் உன் கூட இருக்கலாம். ஆனால் நான் உனக்காகப் போரிட முடியாது. இந்த இரண்டில் நான் என்ன செய்ய வேண்டும் என்று நீ விரும்புகிறாய்?" பகவான் கிருஷ்ணர் கேட்டார்.

அர்ஜுனன் ஒருகணம், பகவான் கிருஷ்ணரின் முகத்தைப் பார்த்துப் புன்னகை செய்தான். அதேகணம், அர்ஜுனன், கிருஷ்ணரின் படைகளைக் கேட்டு விடக் கூடாதே என, தன் மனதுக்குள்ளே பிரார்த்தனை செய்துகொண்டான் துரியோதனன். துரியோதனனின் பிராத்தனை பலித்தது. அர்ஜுனன், "பகவானே! எனக்கு உங்கள் படைகள் வேணாம்! நீ என் பக்கத்தில் இருந்தால் போதும்" என்றான். கிருஷ்ணர் அப்படியே அருள் புரிந்தார்.

அடுத்து, துரியோதனன் கிருஷ்ணரின் படையைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான்.

பாரதப் போரில், கிருஷ்ண பகவானின் படைகளைக் கேட்ட கௌரவர்கள் வென்றார்களா? கிருஷ்ண பகவானையே பக்கத்தில் வைத்துக் கொண்ட பாண்டவர்கள் வென்றார்களா என்பது, உங்களுக்கே தெரியும்.

பிரார்த்தனை என்பது இறைவனிடம் நமக்கு வேண்டியதைச் சொல்லி, அதைக் கேட்டுப் பெறுவது இல்லை. அந்த இறைவனையே அழைத்து, நம்முடன் இருக்கச் செய்வதுதான். இறைவனே நம்முடன் இருக்கும்போது, நமக்குக் கிடைக்கிற ஆன்மிக, தார்மிக, தேக பலத்துக்கு அளவே இல்லை.

(இப்போதைக்கு விடை பெறுகிறேன்.)

படம் : யோகா

"இந்தப் படத்தோட இயக்குநர் ரொம்ப வெளிப்படையானவர் போலிருக்கு."

"எதை வெச்சு சொல்றே?"

"படத்தோட ஆரம்பத்துலயே என்னை வாழவைக்கும் ஆங்கிலப்பட டி.வி.டி. களுக்கு நன்றினு கார்டு போடறாரே...!"

- அஜித்லால்



ரகளையுடன் ரகளை!





தமது வழக்கமான பஞ்சு மிட்டாய் கலர் காஸ்ட்யூமில் 'ஜில்பான்ஸி' டிக்ஷனரியில் மூழ்கியிருந்தார் 'லொள்ளு சபா' சந்தானம். அவரை லபக்கினோம். "என்னப்பா, கேள்வி கேட்கப் போறீங்களா? கேளுங்க!" என்று புஜபலம் காட்டினார். "ம்ஹூம்... நாங்க கேள்வியே கேட்க மாட்டோம். ஆனா நீங்க பதில் சொல்லிக்கிட்டேயிருக்கணும்" என மடக்க, சின்னியோட 'கொலீக்'ன் முகம் ஜன்னி வந்தமாதிரி ஆனது. டக்கென சுதாரித்து "லோ ஃபன்னி" என ஆரம்பித்தார் ரகளையை.

"முதல்ல நான் எப்படி பீல்டுக்குள்ள வந்தேன்னு சொல்லுறேன். நான் சின்னப் புள்ளையிலேர்ந்து செம மக்கு. வாத்தியாரு திருக்குறள் சொல்லிக் குடுத்தா, அதையே உல்டா பண்ணி, எம்.ஜி.ஆர் ரஜினி மாதிரி பேசிட்டிருப்பேன். அப்படியே உருப்படாமப் போயி, மெதுவா சன் டீவில 'டாப்டென்' பண்ணிட்டிருந்த பாலாஜி சார் மூலமா, 'கடி டீ.வி' புரோக்ராம் பண்ண வாய்ப்புக் கிடைச்சது. அப்புறம் விஜய் டீ.வில 'லொள்ளு சபா' பண்ணினேன். நிறைய பிராக்டீஸ் பண்ணி சூப்பரா போயிட்டிருந்தது. திடீர்னு நிறுத்திட்டாங்க. பின்னால சகலை Vs ரகளை பண்ணக் கூப்பிட்டாங்க. சின்னி சார்கூட ஆரம்பத்துல புரொக்ராம் செய்யறது, ரொம்ப ஜில்பான்ஸியா இருக்கும். அவர் பேசறது புரியவே புரியாது. அவ்வளவு 'சுத்தமா' பேசுவாரு (சிரிக்கிறார்...) திடீர் திடீர்னு கிஸ்மா, நியான்னு பேசுவாரு. நான் எப்போதும் போல் கோழி திருடின மாதிரி முழிச்சுக்கிட்டே நிப்பேன். இப்போ நல்லா பழகி அவரோட மொழியை அப்படியே தமிழ்ல பில்பான்ஸி பண்ற அளவுக்குத் தேறிட்டேன்னா பார்த்துக்குங்களேன்.

இப்போ அடுத்த கேள்வி. லொள்ளு சபாவின் அனுபவங்கள். மீண்டும் 'லொள்ளு சபா' பண்ணிட்டிருக்கோம். ரொம்ப சக்ஸஸ்ஃபுல்லா போயிட்டிருக்கு. குறிப்பா, படையப்பா பாணியில் உடையப்பா, கில்லி மாதிரியே ஜல்லின்னு செம கில்மாவா போயிட்டிருக்கு. ஆக்சுவலா இந்தப் படங்களையோ, ரஜினி சாரையோ ஓட்டறது எங்க நோக்கம் இல்ல. அந்தக் கேரக்டரை நான் பண்ணினா எவ்ளோ காமெடியா இருக்கும்,

அப்படிங்கறதுதான் கான்செப்ட். எங்க லொள்ளு சபா டீமே செம திறமையுள்ள டீம். காரணம் டைரக்டர் ராம்பாலா. இருந்தாலும் நீங்க கேட்டதா நினைச்சி நான் சொன்ன பதில். கடைசில பேட்டிங்கறது ஜோஸ்யம் சொல்ற மாதிரி ஆயிடுச்சி.

இப்போ அடுத்த கேள்வியைச் சொல்ல மாட்டேன். பதிலை மட்டும் வாங்கிக்குங்க. என்னால குரூப்பா மட்டும்தான் பண்ண முடியும்னு கிடையாது. சோலாவாகக்கூட புரொக்ராம் செய்ய முடியும். இதுக்கு முன்னால 'மொக்க அவார்டு'ன்னு சொல்லி, ஒரு சோலோ புரொக்ராம் பண்ணினேன். ரெண்டு மாசம் தள்ளி நாங்க இப்போ வந்திருக்கோம் துள்ளி. அந்த ரெண்டு மாசமும் என்ன செஞ்சீங்கன்னு கேக்கறீங்க. அந்த ரெண்டு மாசமும் இப்போ செஞ்சிட்டிருக்குற புரொக்ராம்ஸுக்கு ஸ்கிரிப்ட் ரெடி பண்ணிட்டிருந்தோம்.



இடையில 'அண்ணாமலை' சீரியல் கமிட் ஆச்சு. அதுக்குத் தொடர்ந்து கால்ஷீட் கொடுத்திருந்தா, அந்த சீரியலை என் பையன் வந்து நடிச்சுதான் முடிக்க வேண்டியிருக்கும் போல. அந்த ரேஞ்சுக்கு போய் கிட்டேயிருக்கு. அதனால அந்த சீரியல் பண்ணலை.

சினி ஃபீல்டுக்கு வருவீங்களான்னு கேட்க நினைச்சுருப்பீங்க. இதோ வந்துக் கிட்டே இருக்கேன். இப்போ 'மன்மதன்' படத்துல சிம்புவோட ப்ரெண்டா பண்றேன். சிம்புவ கலாய்ச்சுக் கிட்டே இருப்பேன். 'ஏம்பா பண்ற ஸ்டைல ஓரமா போய் பண்ணு. எக்குத் தப்பா கண்ணை பஞ்சராக்கிடாதே'ன்னு ஓட்டிக் கிட்டே இருக்கற மாதிரியான கேரக்டர்.

ஓட்டறது மட்டும்தான் காமெடியான்னு ஒரு சூப்பர் கொஸ்டின். சினிமாவுலதான் வெரைட்டியா காமெடி பண்ணலாம். ஆனா டீவில, குறிப்பா டாக்ஷோல ஓட்டறதுதான் காமெடி. இந்த மாதிரி ஓட்டி கலாய்ச்சப்போ, அது விஜயகாந்த் சாருக்குக் கோபம் வந்துருச்சு போல. போன் பண்ணி கேட்டப்போ, ஒருத்தருக்கொருத்தர் கலாய்க்கிற மாதிரிதான் ஷோ இருக்குமே தவிர, எல்லாத்துக்கும் ஆமாம் போடற மாதிரி புரோக்ராம் இல்லன்னு புரிய வைச்சோம். பொலிட்டீஷியன்ஸ ஓட்டறது கிடையாது. காரணம் அவங்க பேசுனதையே திரும்பத் திரும்ப பேசிட்டிருப்பாங்க. அதுவே காமெடிதான். மத்தபடி வீட்டுக்கு ஆட்டோ வரும்ங்கற பயமெல்லாம் கிடையாது.

நக்கலடிக்கறது மத்தவங்களுக்குக் கோபத்தை உண்டாக்கலாம். ஆனா அவங்க மனசு புண்ணாயிடக் கூடாது. உதாரணமா, போன்ல வர்ற விஜபி சொட்டைத் தலையருன்னு வச்சுக்குங்க. அதைக் கிண்டல் பண்ணக் கூடாது. இப்போ சிவகுமார் சார் இருக்காரு. அவரு பேசறது ஓடற ஆட்டோவுல குந்திகிட்டு பேசற மாதிரி உதறிகிட்டே பேசுவாரு. அதைக் கிண்டல் பண்ணக் கூடாது. அதேமாதிரி கார்த்திக் சார் பேசிட்டே இருக்கார்னு வச்சுக்குவோம். அவரைப் போல வாயில் இருக்கிற வெத்தலையைத் துப்பிட்டு பேசுங்கன்னு சொல்லக் கூடாது. அதே மாதிரி மீண்டும் சிவகுமார் சாரையே எடுத்துக்குவோம். அவருகிட்ட போயி ஜோதிகா - சூர்யா மேட்டர் பற்றி கேட்கக் கூடாது. மத்தபடி என்ன வேணுன்னாலும் கேட்டு ஓட்டலாம், அப்படிங்கறது எங்க தொழில் தர்மம். நல்லா இருக்குல்ல எங்க பாயிண்ட்!

நம்ம ஃபைனல் கொஸ்டின். ''ஹீரோவா நடிக்கப் போறீங்களா?'' சான்ஸே இல்லை. சும்மா நானும் ஹீரோன்னு எல்லாரும் சொன்னா வேஸ்ட். எந்த ஹீரோ அப்படியிருக்கார்னு கேட்டு, அந்த பதிலையே டைட்டிலா போடற பிளான் இருக்கற மாதிரி தெரியுது. அப்படியெல்லாம் மாட்டிக்க மாட்டேன்.

- முத்து

படங்கள் : ஷிவ்

மானுட நேசத்தில் மலர்ந்த பள்ளி!



அதிகாலை வேளை. வாசல் தெளிக்க வந்த பெண்ணுக்கு அச்சமாகப் போய் விட்டது. கதவையொட்டி ஒரு பெண்ணுடல் தரையில் கிடத்தி வைக்கப்பட்டிருந்தது. நல்லவேளை! மூச்சு இருந்தது அப் பெண்ணுக்கு. 'அப்பாடா' என்றிருந்தது எல்லோர்க்கும்.

மருத்துவர் ஒருவரை வரவழைத்து, அவள் உடல் நிலை குறித்து தெரிந்து கொண்டார்கள். ஊமை, காது மட்டும், அதுவும் மிகவும் மெலிதாகக் கேட்கும். கொஞ்சம் கூட எழுந்து நிற்கவோ, நடக்கவோ இயலாதவள். பிறவியே அப்படித்தானாம். பிறக்கும்போதே முதுகெலும்பு இல்லாமல் பிறந்திருக்கிறாள். குடும்பத்தாராலோ, வேறு யாராலோ, ஓர் அதிகாலை வேளையில் அப்பள்ளியின் வாசலில் அனாதையாக விடப்பட்டிருக்கிறாள்.

தற்போது அந்த விசாலாட்சிக்கு (பள்ளி நிர்வாகம் சூட்டிய பெயர்) வயது முப்பது. கடந்த பதினோரு ஆண்டுகளாக, உடல் ஊனப்பட்ட ஆதரவற்ற உயிர்கள் பலவற்றுக்கும் அடைக்கலம் தந்து, ஓர் அன்பு மிகுந்த சரணாலயமாகத் திகழ்ந்து வருகிறது அந்தப் பள்ளி.

பத்து வயது சுதாகர் மனவளர்ச்சி குன்றிய, கண் பார்வை சற்றே குறைவான பையன். இங்கு வந்து நான்கு வருடங்கள் ஆகின்றன. பதினான்கு வயது சுதாகர், தற்போது ஐந்தாம் வகுப்புப் படித்து வருகிறான். கூப்பிட்டு ''எதிர்காலத்தில் என்னவாகப் போகிறாய்?'' எனக் கேட்டால், ''டாக்டர் ஆவதே எனது லட்சியம்'' என்று பதில் வருகிறது. ''ஏழைகளுக்கு இலவச மருத்துவச் சேவை செய்வேன்'' என்கிறான்.

பொள்ளாச்சி அருகே ஒரு கிராமத்தில் பிறந்தவள் புவனேஸ்வரி. பிறவியிலேயே வலது பக்கக் கன்னமும், உதடுகளும் மிகவும் வீங்கிய நிலையில், பயங்கரமாகப் பருத்துப் போய்க் கிடக்கிறது. இங்கு வந்து சேர்ந்து முதல் வகுப்பில் படித்து வருகிறாள். மழலை மாறாத குரலில் நம்மிடம் பேசுகிறாள்.

கோவை கண்டக்காமுத்தூர் பகுதியைச் சேர்ந்தவன் மோகன்குமார். வயது பதினேழு. காது கேளாத, வாய் பேசாத தன்மை உள்ளவன். போதாக்குறைக்கு லாரி விபத்தொன்றில் வலது காலில் முழங்காலுக்கு மேலே இழந்தவன்.

குஜராத் பூகம்பத்தின் போது கண்ணெதிரே தன் பெற்றோரை இழந்து விட்டவன் திலீப். (இந்தியில் அவன் பெயரை எழுதிக் காட்டியுள்ளான்). பூகம்பத்தில் அவனது இடது கால் பாதம் முழுவதுமாகக் கணுக்கால் வரைக்குமாக வெட்டுப்பட்டுப் போனது. கோவை ரயில்வே போலீசார் அவனை இங்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர். அவன் இங்கு வந்து இரண்டு

வருடங்கள் ஆகின்றன. பதினைந்து வயதாகும் திலீப், தற்போது தமிழில் சுமாராகப் பேசி வருகிறான்.

கோவை, குறும்பாளையத்தில் சத்தி ரோட்டில் அமைந்துள்ள 'தியுனைடெட் உடல் ஊனமுற்றோர் பள்ளி.' உடல் ஊனமுற்றோர், மனநலம் குன்றியோர் போன்று பெரும்பாலும் சமூகத்தால் நிராகரிக்கப்பட்ட, சுய குடும்பத்தினரால் வெறுத்து ஒதுக்கப் பட்டவர்களே இங்கே தஞ்சமென வந்து புகுந்துள்ளனர். 1993ல் அறுபத்தி மூன்று பிள்ளைகளுடன் துவங்கப் பட்டது. தற்போது எழுபத்தைந்து பிள்ளைகள் அனைத்து வகை சுகாதார வசதி வாய்ப்புகளுடன், முற்றிலும் இலவசமாக மூன்று வேளை உணவு, உடை, கல்வி, தங்குமிடம், மருத்துவ வசதிகள் என அனைத்தும் தந்து, பத்தாம் வகுப்புவரை படிக்க வைக்கப் படுகிறார்கள்.

பிரதி சனிக்கிழமைதோறும் பொது மருத்துவர் ஒருவர் பள்ளிக்கு வந்து பரிசோதித்து விட்டுப் போகிறார்.

கை, கால் ஊனமுற்றவர்கள் நாற்பது. மனவளர்ச்சி குன்றியவர்கள் இருபத்தியிரண்டு. வாய் பேசாத, காது கேளாதவர்கள் பதின்மூன்று. ஆக மொத்தம் எழுபத்தி ஐந்து பிள்ளைகள். வாய் பேசாத காது கேளாத பிள்ளைகளுக்கு என்று, சிறப்பு வகுப்புகள் இங்கு செயல்பட்டு வருகின்றன. பயிற்சி பெற்ற ஆசிரியைகளால் அவர்களுக்குப் பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. அவர்களது வகுப்பில் ஒவ்வொருவருக்கும் Hearing in Pad Head Phone கருவி வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. பள்ளி வகுப்பறைகள், அரங்குகள், பிள்ளைகள் தங்குமிடங்கள், சமையல் கூடம், உணவுக் கூடம் என அனைத்தும் தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு என, பள்ளி வளாகத்தின் உள்ளே சிறிய விஞ்ஞான ஆய்வுக்கூடம் ஒன்றும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

கட்டுரை, படங்கள் : அரசு

தலைப்பே ஓர் இனிய கவிதை! ஒரு கவிதையின் வெற்றி எதில் அடங்கியிருக்கிறது. அதன் எளிமை அல்லது பூடகம்? அதன் அழகியல் அல்லது உணர்ச்சி? வாழ்வனுபவம் சார்ந்த, அல்லது புனையப்பட்ட அதன் பாடுபொருள்? இந்த எல்லாத் தன்மைகளோடும் ஒரு கனமான விஷுவல் கவிதையாகவே வசீகரிக்கிறது பார்த்திபனின் குடைக்குள் மழை.

ஏமாற்றுவதும், ஏமாறுவதும் கூட காதலின் முக்கிய இயல்புகள். இதையே தமது கவிதையின் கதையாக வரித்துக் கொண்டிருக்கிறார் இயக்குனர்.



அழகான மனம் கொண்ட சராசரி இளைஞர்கள், அழகான தோற்றம் கொண்ட யுவதிகளைக் கண்டால், தங்கள் தகுதி குறித்த தாழ்வுணர்ச்சியோடு, வெட்கி விலகி விடுவதே யதார்த்தம். அதையும் மீறி அங்கே காதலின் விதைகளை அந்த யுவதிகளே ஊன்றினால் இளைஞர்களின் இதயத்தில் செடியல்ல, ஒரு காதல் காடே உருவாகும்.

ஜீவனாவுபாயத்துக்காக ஆட்டோ ஓட்டிப் பிழைக்கும் வெங்கட்டுக்குள்ளும் மனமளவென்று காதல் காடு மண்டுகிறது. ஆனால் விதை போட்ட தேவதை, தனது தங்கக் கோடாரியை திடீரென கையிலெடுக்கிறாள். வரம் தர அல்ல. வேகவேகமாக வெங்கட்டின் காதலை வெட்டி வீழ்த்த! இறுதியில் அங்கே வெட்டுப்பட்டதும், வீழ்ந்து கிடப்பதும் வெறும் காதலல்ல, மனித வாழ்க்கை என்பதைக் காட்டும் போது, நம் கண்களில் மழை.

பெண் பார்க்கும் படலத்தில், "பெண்ணைப் பிடிக்கவில்லை" என வரன் சொல்வது போலக் காட்டுவதே வாடிக்கை. "பையனைப் பிடிக்கவில்லை" என்று நேருக்கு நேர் பெண்ணே நிராகரிப்பதைக் காட்டுவதில் ஆரம்பித்து, தமிழ் சினிமாவின் பழம் கோட்பாடுகள் பலவற்றையும் காட்சியமைப்புகளில் உடைக்க முயன்றிருக்கிறார். அதிலும் தற்கொலைக்கு முயற்சிக்கும் முன்பாக, காதலியிடம் பேச, தொலைபேசியில் டயல் செய்யும் போது, டயலிங் சக்கரத்துக்குக் கீழே கேமரா கோணம் அமைத்து, சூழ்நிலையின் தீவிரத்தை உணர்த்தும் அந்த ஒரு காட்சியே ஒரு பானை சோற்றுக்கு பதம்.

தமது முதல் படைப்பான புதிய பாதையில் தொடங்கி, முன்னோடிகளின் வழியிலேயே திரைக்கதை அமைத்து வெற்றி தோல்விகளைச் சந்தித்து வந்திருக்கும் பார்த்திபன், இதில் ஓர் ஆராய்ச்சி மாணவர் போல திரைக்கதையில் பெரிய பாய்ச்சலை நிகழ்த்தியிருக்கிறார்.

குடைக்குள் மழை!



இயக்குனரைப் பாராட்டியே தீர வேண்டும்.

நாயகன் வெங்கட்டாகவும், அவரது மன பிரமையில் உயிர் பெறும் மற்றொரு நாயகனாகவும் நடிப்பில் வேறுபாடு காட்டியிருக்கும் பார்த்திபன், இரண்டாவது ஆள் அதிகம் பேசுவதைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம். நாயகியாக நடித்திருக்கும் மதுமிதா, தமது பாத்திரத்தின் குணவியல்புகளை உள்வாங்கி இயல்பு காட்டியிருக்கிறார்.

உதாரணத்துக்கு, அழகான கேச அழகோடு அறிமுகமாகும் கதை நாயகன் வெங்கட், அடுத்த காட்சியில் குறைவான தலைமுடியோடு தென்படுகிறார். ஏன் இந்த மாற்றம் என்ற மெல்லிய பதற்றம் நம்மை மெல்ல குடைந்து கொண்டிருக்கும்போதே, மொட்டையடித்த தலையில் முளைத்த குறைவான தலைமுடி அது என்பதை, பின்னால் விரியும் காட்சிகள் பொட்டில் அடித்துச் சொல்லி விடுகின்றன. காதலிக்காக அடித்த மொட்டை, தாயின் இறப்பிற்காகவும் பொருந்தி விடுவது எதிர்பாராத சோகம்.

வழக்கமாக இரட்டை வேடப் பாத்திரங்களுக்கு நிர்ணயிக்கப்படும் எல்லைக் கோட்டுக்குள்ளிருந்து, தமது இரட்டை வேடத்தை முற்றிலும் புதிய கோணத்தில் காட்டியிருப்பதற்காகவும்

நிஜமாகவே குடைக்குள் மழை பெய்ய வைத்திருக்கும் கலை இயக்கமும், கார்த்திக் ராஜாவின் வருடலான இசையும், படத்துக்கு கூடுதல் பலம் சேர்த்திருக்கின்றன. மழை நாட்களில் குடைகள் திருடு போவது சகஜம். குடைக்குள் மழை பார்த்துத் திரும்புகிற ரசிகனின் மனதும் திருடு போகும் என்பது நிஜம்.

- விஷுவல்தாசன்

- ○ பெயில்
- ○ ஜஸ்ட் பாஸ்
- ○ அவரேஜ்
- ○ அபவ் அவரேஜ்
- ● டிஸ்டிங்ஷன்

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் 1941-ம் வருஷத்தில் தமிழிசை இயக்கத்துக்குத் தலைமை வகித்து நடத்த ஆரம்பித்தார்கள். அந்த இயக்கம் சம்பந்தமாக அந்த வருஷத்திலே தான் அவர்களை நான் சந்திக்க நேர்ந்தது. பிறகு சில காலம் அடிக்கடி பார்க்கவும், பேசிப் பழகவும் பாக்கியம் கிடைத்தது. இதே நாட்களில்தான் மலாய் நாடும் பர்மாவும் ஜப்பானியரால் கைப்பற்றப்பட்டன. மலாய் - பர்மா நாடுகளில் செட்டி நாட்டு அரசருக்கு ஏராளமான கொடுக்கல் வாங்கலும், வியாபார ஸ்தலங்களும் நிலபுலன்களும் உண்டு என்பது அனைவரும் அறிந்த விஷயம். ஒரு சமயம் ராஜா ஸர் அவர்களைச் சந்தித்தபோது மலாயாவிலும் பர்மாவிலும் அவர்களுக்கு நேர்ந்திருக்கக் கூடிய பெரு நஷ்டங்களைக் குறித்து அநுதாபம் தெரிவிக்கும் முறையில் பிரஸ்தாபித்தேன். அப்போது அவர்கள் கூறிய பதில், பாசமறுத்துப் பற்றறுத்து முற்றும் துறந்த முனிவரின் மனோநிலையை வெளிப்படுத்தியது கண்டு திகைத்துப் போனேன். "ஆமாம், பர்மாவிலும் மலேயாவிலும் எங்களுக்குப் பெரு நஷ்டந்தான். ஆனாலும் அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. 'அங்கேயெல்லாம் நமக்குச் சொத்து இல்லை. எப்போதும் இருக்கவில்லை!' என்பதாக எண்ணிக் கொண்டுவிட்டேன்" என்றார்கள்.

பர்மாவிலும் மலாயிலும் அவர்களுக்கு இருந்த லட்ச லட்சமான செல்வத்தையெல்லாம், ஒரு நொடிப் பொழுதில் 'இல்லை' என்று தீர்மானித்துக் கொண்டு விட்டார்கள். இதனால் மனத்தில் கவலைக்கும் இடமில்லை என்றாயிற்று.

ஆனால் ராஜா ஸர் அவர்களுடைய மனத்தில் கவலையே இல்லாமல் போய் விட்டதா? பர்மா - மலாய் சொத்துக்களைப் பற்றித்தான் கவலையில்லையென்றாயிற்றே தவிர, வேறொரு பெருங் கவலை அவர் மனத்தில் குடி கொண்டிருந்தது.

"தமிழ் இசை இயக்கத்தை எதிர்க்கிறார்களே? ஏன் எதிர்க்கிறார்கள்?" என்ற கவலை, அச்சமயத்தில் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்குப் பெரும் வேதனையளித்தது.

தமிழ் இசை இயக்கத்துக்கு விரோதமாக அவர் அப்படிப் பேசி இருக்கிறாரே? ஏன் அப்படிப் பேசி இருக்கிறார்? தமிழ் இசை இயக்கத்தை எதிர்த்து இந்தப் பத்திரிகை இப்படி எழுதியிருக்கிறதே? ஏன் இப்படி எழுதியிருக்கிறது? இந்த எதிர்ப்பை நாம் எப்படிச் சமாளிப்பது? எப்படி இயக்கத்துக்குப் பலம் அளிப்பது என்பதாக ஒரு நாள் அல்ல, சில நாள் அல்ல, பல காலம் கவலைப்பட்டார்கள். கோடி கோடியாகப் பணம் நஷ்டமாகிக் கொண்டிருந்த காலத்தில், செட்டி நாட்டு அரசரின் மனக் கவலையெல்லாம் தமிழிசை இயக்கத்தைப் பற்றியதாகவே இருந்தது. இதிலிருந்து பணத்தைப் பற்றி அவர்கள் எத்தகைய பற்றற்ற மனோநிலையை அடைந்திருந்தார்கள் என்பது வெளியாயிற்று. தமிழிசையில் அவர்களுடைய பற்று எவ்வளவு உறுதியானது என்பதும் சந்தேகமற வெளியாயிற்று.

உயிர்

தமிழிசை இயக்கத்தைப் பற்றிச் செட்டி நாட்டு அரசரின் மனக் கவலையை, நானும் சில சமயம் அதிகமாக்கினேன் என்று சொல்ல வேண்டியதாயிருக்கிறது. தமிழிசையை எதிர்ப்பவர்களை ஒரு சமயம் நான் காரசாரமாகத் தாக்கி ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். இந்தக் கட்டுரை வெளியான சில நாளைக்கெல்லாம், ராஜா ஸர் அவர்களை நான் பார்க்க நேர்ந்தது. வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினார்களே தவிரக் கட்டுரையைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. "ஒரு வேளை படிக்கவில்லை போலிருக்கிறது!" என்று நினைத்துக் கொண்டேன். கடைசியில் புறப்படும் சமயத்தில் அவர்கள் கூறியதாவது: - "உங்களுடைய கட்டுரையைப் படித்தேன். நன்றாக எழுதியிருக்கிறது. ஆனால் ரொம்ப கடுமையாகத் தாக்கியிருக்கிறது. உங்களுக்குப் புத்தி சொல்ல வரவில்லை. என் அபிப்பிராயத்தைச்


அமரர் கல்கி

சொல்லுகிறேன். இவ்வளவு காரமாக எழுதுவதினால் காரியத்துக்கு அநுகூலம் உண்டா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்!"

இதைக் கேட்டு நான் ஒரு நிமிஷம் திகைத்துப் போனேன். பிறகு, "எதிர்ப்பவர்கள் கடுமையாகத்தானே எதிர்த்திருக்கிறார்கள்!" என்றேன்.

"எதிர்ப்பவர்கள் எப்படி வேணுமானாலும் பேசலாம்; எழுதலாம். ஆனால் நாளைக்கு அவர்கள் நம்முடைய கட்சிக்கு வருவதற்கு இடம் வைத்து நாம் எழுத வேண்டும். ரொம்ப காரமாக எழுதிவிட்டால், அவர்கள் நம்முடன் சேருவதற்கே இடமில்லாமற் போய்விடும்" என்று ராஜா ஸர் கூறியது, நேற்றுத்தான் கூறியதுபோல் இன்னும் என் காதில் ஒலித்தவண்ணம் இருக்கிறது.

ராஜாஜி அவர்கள் அடிக்கடி எனக்கு இதேவிதமான புத்திமதி கூறியதுண்டு.



• ராஜா ஸர் முத்தையா செட்டியார்

வாழ்கிறார்!

"அதிகமாகத் தாக்கி எழுதக் கூடாது" என்று ராஜாஜி அவர்கள், அஹிம்சை நெறியில் நின்று எனக்கு யோசனை சொன்னார்கள். அதேவிதமான யோசனைக் 'காரிய சாதனை'யை முன்னிட்டு ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களும் கூறினார்கள். வெவ்வேறு நோக்குடன் பார்த்து, இந்த இரு பெரியவர்களும் ஒரே முடிவுக்கு வந்திருப்பதை நினைக்க நினைக்க எனக்கு வியப்பாயிருந்தது.

நம்முடைய காலத்து இந்திய பிரமுகர்களுக்குள்ளே ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் மிக உன்னதமான ஸ்தானத்துக்கு உரியவர்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்களுடைய ஆலயத் திருப்பணிகளும், சொந்தப் பொறுப்பில் தில்லைப் பதியில் ஸ்தாபித்த அண்ணாமலை சர்வகலாசாலையும் மற்றக் கல்வித் துறையில் அவர்கள் ஆற்றிய தொண்டுகளும், கடைசியாக அவர்கள் தலைமை வகித்துச் சிறப்புடன் நடத்திய தமிழிசை இயக்கமும், தமிழ் நாட்டின் தற்கால சரித்திரத்தில் செட்டிநாட்டு அரசருக்கு அழியாத உயர்ந்த ஸ்தானத்தை அளித்திருக்கின்றன.

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் 'காலமானார்' என்று நம்புவது இன்னமும் எனக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஒருவிதத்தில் அந்தச் செய்தி உண்மையில்லைதான். ராஜா ஸர் அவர்கள் தம்முடைய அருமைப் புதல்வர்கள் மூன்று பேரிடத்தும் இன்றைக்கும் உயிர் வாழ்கிறார்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது. ராஜா ஸர் முத்தையா செட்டியார், ஸ்ரீ ராமநாதன் செட்டியார், ஸ்ரீ சிதம்பரம் செட்டியார் ஆகிய மூவரும், ராஜா ஸர் அவர்களுடைய திரண்ட செல்வத்தை மட்டுமல்லாமல், அவரிடமிருந்த அரும் பெரும் குணங்களையும் ஆற்றல்களையும் கூடப் பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர் நடத்தி வந்த திருப்பணிகளை இவர்களும் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

எனவே இந்த மூன்று புதல்வர்களின் உருவத்தில், ராஜா ஸர் அவர்கள் இன்னமும் உயிர் வாழ்ந்து வருகிறார்கள் என்று ஏன் சொல்லக் கூடாது!

(ஏப். 19, 1953 கல்கி)

கடலின் அலைகளைவிடச் சுருண்டு கிடந்த கூந்தல் கடற்காற்றில் அலை பாய, முகத்தில் விஷமப் புன்முறுவல் மின்ன, உருவிய வாளுடன் எதிரில் வந்து நின்ற பாண்டிய இளவரசியைக் கண்ட ராஜ மாதுலர் திகைத்துத்தான் போனார். வில் லவன் கூறிய செய்தி எத்தனை உண்மை என்பதும், முத்துக் களவைக் கண்டறிய இளவரசி முன்னதாகவே வந்து விட்டிருக்க வேண்டுமென்பதும் புரிந்தது அவருக்கு. அவர் விழிப்பதைக் கவனித்த இளவரசி யின் முறுவல் விரிந்தது.

"வர வேண்டும் ராஜமாதுலரே. பல் லவச் சக்கரவர்த்தினியின் சகோதரரின் விஜயம் பிரமிக்க வைக்கிறது. அரசாங்க விருந்தினராக வர வேண்டியவர், கள்வ னாக வந்திருப்பது இன்னும் வியக்க வைக்கிறது."

ராஜமாதுலர் பதிலேதும் கூறவில்லை. அவரது வெறித்த பார்வை, இளவரசியை யும் தாண்டி, வீரர்களையும் கடந்து மணல் வெளியில் சென்று மீண்டு கொண்டிருந் தது.

குமுதவல்லி தொடர்ந்தாள். "ராஜ மாதுலரே, நீரோ உம் சகோதரியோ, பாண்டி நாட்டு முத்துக்களை விரும்புவதாகத் தெரிவித்திருந் தால், நானே பரிசாக அனுப்பியிருப்பேன்... ஆனால் உங்கள் நோக்கம் முத்துக்களைக் கவர்ந்து பாண்டியர் படை பலத்தைத் தேக் குவது. கையும் மெய்யுமாகப் பிடிபட்டிருக் கும் உம்மைச் சிறை செய்துவிட்டு, உங்கள் மகாராணிக்கு ஓலையனுப்பு கிறேன்."

ராஜமாதுலர் இப்போதும் பதிலேதும் கூறவில்லை.

"உமது வாளை ஒப்படைத்துவிட்டு, உமது வீரர்களைப் பேழைகளுடன் அப் படியே திரும்பி நடக்கச் சொல்லும்" உத்தரவிட்டாள் இளவரசி.

"இளவரசி" ராஜமாதுலரின் அழைப்பில் அதீதமான கனிவும், பணிவும் தொனித் தன.

"என்ன?"

"இப்போது சொல்வதை நீயே செய்து காட்டுகிறாயா?" என்றார் விஷமம் வழிந்த குரலில்.

"என்ன உளறுகிறீர்?"

"நான் உளறவில்லை இளவரசி, சற்று பின்னால் திரும்பிப் பார்த்தால் புரியும்" என்றார் ராஜமாதுலர்.

இப்போது திகைப்பது இளவரசியின் முறையாயிற்று. கடலில் பெரும் கல மொன்று நங்கூரம் பாய்ச்சி நிற்க, பெரும் படகுகளில் வீரர்கள் பலர் கரைக்கு வந்து கொண்டிருந்தனர். முன்னதாக வந்து, சற்றுத் தள்ளியே கரையை அடைந்திருந்த படகிலிருந்து, ஐம்பதுக்கும் குறையாத வீரர்கள் உயர்த்திப் பிடித்த வாட் களுடனும், ஈட்டிகளுடனும் அலை மோதிய கரைப் பகுதியிலே நெருங்கி

விஷ்வக்ஸேனன்

மகுட வைரம்

விட்டிருந்தனர்.

"சிறைப் பட்டிருப்பது நீதான் இள வரசி" என்ற ராஜமாதுலர் இடி இடியென்று நகைத்தார் பலமாக.

• • •

7

வைகையில் தவழ்ந்து, குளிர்ந்து, மதுரை நகரெங்கும் உலவி, அரண்மனை நந்த வனத்து மலர்களின் சுகந்தங் களையும் சுமந்து வந்த தென்றல், சாளரத்



தினருகே நின்று வானத்தை வெறித்துக் கொண்டிருந்த மன்னனின் சித்தத்தைக் குளிர வைக்க முயன்று தோற்றுக் கொண் டிருந்தது. நெறித்த புருவங்களும், புடைத் துக் கிடந்த நெற்றி நரம்புகளும் அவன் சிந்தனையின் வேகத்தைக் காட்டின. பின்புறம் சற்றுத் தள்ளி நின்றிருந்த அமைச்சரும், முகுந்தனும் மௌனமாக மன்னன் சிந்தனையில் குறுக்கிடாமலே நின்றிருந்தனர். அவர்கள் குறுக்கிட அஞ்சிய மன்னன் சிந்தனையில், மீனாட்சி ஆலயத்து மணியோசை உரிமையுடன் குறுக்கிட்டு சற்று ஆறுதலையும் அளித் தது.

மெல்லத் திரும்பிய பாண்டிய வர குணனின் குரலில் கேள்வி ஒலித்தது. "அமைச்சரே, தற்போது போர் சாத்திய மல்ல என்கிறீரா?"

அமைச்சர் நிதானமாகவே பதிலளித் தார். "ஆம் மன்னவா. நம் படைகளின் பயிற்சி முற்றுப் பெற இன்னும் ஒரு திங் களாவது ஆகும் என்று படைத்தலைவர் கூறியிருக்கிறார். போதிய பயிற்சியற்ற வீரர் களுடன் போர் தொடுப்பது அனர்த்த மாகவே முடியும். நந்திவர்மன் தற்போது காஞ்சியில் இல்லை. ராஷ்டிரகூடர் நம் இளவரசியைச் சிறையெடுத்ததை அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால்...

"அதனால்...?"

"வீட்டுக்குள்ள நுழைஞ்சும் திரு டாம வந்துட்டியா... ஏன்?"

"அந்த வீட்ல பீரோ இருந்த இடம் வாஸ்துபடி சரியா இல்ல!"

- அம்பைதேவா



"இளவரசியை மீட்க வேறு வழிகளும் இருக்கின்றன மன்னா."

அமைச்சர் வார்த்தைகளை முடிக்கு முன், அரண்மனை வாயிலில் பெரும் கோஷம் எழுந்தது. வீரன் ஒருவன் ஓடி வந்தான். "மன்னவா, நம் படைத்தலைவர் வந்து கொண்டிருக்கிறார்" என்றான் முகத்தில் உணர்ச்சிகள் தெறிக்க.

அவன் வேகத்தைக் கண்ட மன்னன் முகத்தில் முறுவல் பூத்தது. போர் தொடுக் காமல் இளவரசியை மீட்கும் சிக்கலுக்கு விடையளிக்கக் கூடியவர் வந்துவிட்டார் என்ற எண்ணம், அவன் முகத்தின் முறுவலை இன்னும் விரிய வைத்தது.

சற்று நேரத்தில் உள்ளே நுழைந்து வணங்கிய படைத் தலைவரைக் கண்டு மன்னன் முகத்தில் ஆனந்தம் தெரிந்த தென்றால், உடன் வந்து வணங்கி மௌன மாக ஏறிட்டவனின் பார்வையைக் கண்ட மன்னனுக்கு, மகளைப் பற்றிய கவலையும் மறைந்து, சந்துஷ்டி அபரிமிதமாகவே கூடியது. நீண்ட காலம் கழித்து அந்த மனி தரைக் காணும் அமைச்சரின் விழிகளிலும் அன்பு வழிந்தது.

புலிச்சின்னம் பதித்த பெரும் பதக்கம் மார்பில் ஊசலாட, பழங்கதைகள் மிதந்த விழிகளும், இதழ்களும் விரிய வந்து நின்ற விக்கிரமவரையனை நெருங்கி அணைத் துக் கொண்டான் பாண்டியன் வரகுணன்.

"இப்போதாகிலும் என் நினைவு வந்ததா விக்கிரம வரையா?" என்று ஒரு கேள்வியும் உதிர்ந்தது மன்னனிடமிருந்து.

ஓரிரு கணங்களில் சுய நிலைக்கு வந்த அந்த மகாவீரர்கள் இருவரும் சற்று விலகி, தாங்கள் பேசுவதற்கு பல நூறு கதைகளிருப்பதைப் புரிந்து முறுவலித் தனர். மன்னன் விழிகள் மீண்டும் வாயிலை நோக்கின. அங்கு யாரும் காணப் படாததால், சோழர் படைத்தலைவனை நோக்கிய விழிகளில் கேள்வியொன்றும் எழுந்தது. "விக்கிரம வரையா, உன்னுடன் வந்ததாகக் கூறப்பட்ட பராந்தகன் எங்கே? வரவில்லையா?" என்றான் மன்னன்.

சோழர் படைத்தலைவன் அளித்த பதில் மன்னனை அசர அடித்தது.

"மன்னவா, பராந்தகன் காஞ்சிக்குச் சென்றிருக்கிறான், பாண்டிய இளவரசியை மீட்டு வர."

அநிருத்தர் விளக்கினார். "மன்னவா, இளவரசியைப் பற்றிய செய்தி கிடைத்

தது௰, விக்கிரமவரையன் பராந்தகனை காஞ்சிக்கு அனுப்பத் தீர்மானித்தான். காஞ்சியில் சோழ வீரர்களும், ஒற்றர்களும் மட்டுமல்ல. நம் அனைவருக்குமே நெருங்கிய மற்றொருவரும் அங்குதானி ருக்கிறார். நான் தங்களின் முத்திரை மோதிரத்துடன் அவரைச் சென்று காண பராந்தகனிடம் கூறியனுப்பி இருக் கிறேன்.''

மன்னனின் விழிகள் அடுத்து திரும்பி அதுவரை மௌனமாக நின்றிருந்த முகுந்தனை நோக்கின. அந்தப் பார்வை யிலிருந்த உத்தரவைப் புரிந்துகொண்ட முகுந்தன் தலை வணங்கி, வெளியே விரைந்தான்.

''சரி, வாருங்கள். உள்ளே சென்று அமர்ந்து பேசலாம்'' என்று அழைத்த மன்னனுடன் உள்ளே நடந்தனர் அனைவரும்.

● ● ●



''நாகதேவதை'னு படம் எடுத்து விநியோகஸ்தர்களுக்கு போட்டுக் காமிச்சேன்... யாரும் வாங்கலை...''

''அப்புறம்?''

'''கோப்ரா'னு தலைப்பை மட்டும் மாத்தினேன். இப்ப டிஸ்டிரிபியூட் டர்ஸ் ஓடி வராங்க!

- தாம்பரம் கண்ணன்

'நகரேஷு காஞ்சி' என்று வர்ணிக் கப்பட்ட காஞ்சி மாநகரம், அந்த மாலைப் பொழுதில், நகரெங்கும் நிறைந்து கிடந்த ஆலயங்களில் எரிந்த தீபங்களாலும், மாளிகைகளில் எரிந்த விளக்குகளாலும், ஜாஜ்வல்யமாக ஜொலித்துக் கொண் டிருந்தது. காஞ்சியின் அழகையோ, கம் பீரத்தை ரசிக்கவோ, அனுபவிக்கவோ மனம் இடம் தராததால், மகாராணி ரேவா தேவியின் மாளிகைக் கூடத்தின் சாளரத் தின் வழியே வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்த ராஜமாதுலர், பெரும் வெறுப்பை முகத்தில் வழிய விட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார்.

தமது வருகை அறிவிக்கப்பட்ட பின்பும், வெகு நேரம் காக்க வைத்திருக்கும் சகோ தரியின் போக்கு, அவரது எரிச்சலை உயர்த்திக் கொண்டிருந்தது. அவரது உஷ்ணத்தைத் தணிக்க இறுதியாக வந்து சேர்ந்தாள் ஒரு பணிப்பெண். வெகு ஒய்யார நடை நடந்து வந்தவள், அவரை இடிக்காத குறையாக நின்று, ''மகா ராணியார் இப்போதுதான் அழைத்தார். என்னுடன் வாருங்கள்'' என்று திரும்பி, மீண்டும் அதே ஒய்யார நடையுடன் உள்ளே சென்றாள்.

அடுத்தடுத்து விரிந்த அலங்கார வாயில்களும், அறைகளும், அழகிய சிற்பங்களும் அவர் சித்தத்தைக் குளிர வைக்கத் தொடங்கின. படையெடுப்பு களால் அடிமைப்படுத்தப்பட்டவர்களும், பரிசுகளாக வந்து சேர்ந்த அயல்தேசத்து மங்கையரும், சிறையெடுக்கப்பட்டவர் களுமாக, அந்தப் பகுதி முழுவதும் அழகிய பெண்கள் நிறைந்து கிடந்தனர். அதைவிட, காவலுக்கு நின்ற யவன மங்கையரின் செக்கச் செவேலென்ற நிறமும், உயரமும், பருத்த ஆகிருதியும் அவரை பிரமிக்க வைத்தன. வாட்களையும், ஈட்டிகளையும் ஏந்தி நின்ற அந்த யவன மங்கையர் ஓரளவு அச்சத்தையும் ஏற்படுத்தினர்.

இறுதியாக பெரும் கூடமொன்றை அடைந்தவரின் பிரமிப்பு உச்சத்தை அடைந்தது. அறையின் சுவர்களிலிருந்த சித்திரங்களும், சர விளக்குகளும், தூண் களில் செதுக்கப்பட்ட சிற்பங்களும், பெரும் பாவை விளக்குகளும், சிலை களும், அந்தக் கூட்டத்தை அசல் தேவலோகமாகவே அடித்திருந்தது.

மஞ்சமொன்றில் சரிந்து அமர்ந்து, அவர் வருகையை நோக்கிய மகாராணி ரேவாதேவியும்கூட, ஓர் அழகிய சிற்ப மாகவே தெரிந்தாள். நீண்டு அடர்ந்து கிடந்த கூந்தலில் ஆங்காங்கே முற்றத் தொடங்கிய இளமையின் சாயல் புலப் பட்டாலும், சிவந்த முகத்தில் செவிகளை



அன்புடன் தந்தாங்க!

ஒலிம்பிக்கின் வெள்ளி நாயகன் ராஜ்யவர்தன் ரத்தோருக்கு என்ன சன்மானம் கிடைக்கும் தெரியுமா?

விளையாட்டுத் துறையின் சார்பாக 15 லட்ச ரூபாய், ராஜஸ்தான் அரசின் சார்பாக 11 லட்ச ரூபாய், 9 லட்ச ரூபாய் மதிப்புள்ள ஒரு ஃப்ளாட் ஜெய்பூரில்!

- மஞ்சு தேவன்

நோக்கி நீண்டு, சரேலென இறங்கிய புருவங்களின் கீழ் ஒளி வீசிய விழிகள், அசாத்தியக் கூர்மையுடன் பளபளத்துக் கிடந்தன. மடிந்து விரிந்து பளபளத்த இதழ்களில் ஊசலாடிய முறுவல், எந்த மன்னதி மன்னனையும் மயக்க வல்லது என்பதை அறிவித்தது. அவள் கழுத்திலிருந்து இறங்கிய முத்துக்களும், ஆரங்களும், ஓர் அரசை விலைக்கு வாங்கப் போதுமானவையாக இருந்தன. அத்தனை அழகையும் மீறி, அவள் தோற்றத்தில் ராஷ்டிர கூடர்களின் மூர்க்கத்தனமும் புலப்பட்டது.

கையசைப்பினால் ராஜமாதுலரை அமரப் பணித்தவள், பின்னால் மெய்க் காவலாக நின்ற யவன மங்கையரை ஒரு பார்வையால் விலகியிருக்கப் பணித்தாள். எதிரிலிருப்பவரை முதலில் சங்கடத்துக் குள்ளாக்கி, பலவீனப்படுத்திப் பணிய வைப்பது, அவளுக்குக் கைவந்த தந்திரக் கலையென்பது, அவளது முதல் கேள்வியிலேயே புரிந்தது.

''சகோதாருக்கு பெண்களின் மீதுள்ள மோகம் இன்னும் தீரவில்லை போலிருக்கிறது. பெண்களைச் சிறையெடுப்பதும் நிற்கவில்லையென்று தெரிகிறது.''

ராஜமாதுலரின் முகம் இருண்டது. 'பாண்டிய இளவரசியைச் சிறையெடுத்தது பற்றி மூச்சு விடலாகாது' என்று வந்து சேருமுன்பே தம் வீரர்களை எச்சரித்திருந்தார். ஒரே இரவில் அதைப் பற்றி மகாராணி அறிந்திருக்க வாய்ப்பில்லை என்ற நம்பிக்கை, அவருக்கு இன்னும் மீதமிருந்தது.

ரேவாதேவியின் விழிகளில் அலட்சியம் உதயமாகி இதழ்களிலும் நெளிந்தது.

''ராஜமாதுலா, சாதாரணக் குடிகளை சிறையெடுப்பதற்கும், ஒரு நாட்டின் இளவரசியை சிறையெடுப்பதற்கும் பெரும் வேறுபாடுகள் இருக்கின்றன. அதிலும் எதிரி நாட்டின் இளவரசியை சிறையெடுப்பதால் ஏற்படும் விளைவுகளை சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்'' என்றவளின் குரல் உஷ்ணம் ஏதுமின்றி சாதாரணமாகவே ஒலித்தாலும், ஆழத்தில் புதைந்து கிடந்த அபாயம் நன்றாகப் புரிந்தது ராஜமாதுலருக்கு.

தம் சாயம் சுத்தமாக வெளுத்துவிட்டதும் புரிந்தது அவருக்கு.

''சோழரைப் போல படைபலமற்ற, மன்னனற்ற நாடென்று எண்ணினாயா பாண்டியரை? வரகுணன் போர் தொடுக்கவே வேண்டாம். இளவரசியை நீ சிறையெடுத்ததைத் தெரிவித்தாலே போதும். பல்லவ மன்னரின் நீதியை அறிவாயல்லவா?'' - மகாராணியின் கேள்வி, அவர் முகத்தை வெளுக்க வைத்தது. நந்திவர்மனின் நீதி, மகாராணியாயிருந்தாலும் விட்டு வைக்காதென்பதை அறிந்திருந்தார் அவர்.

மென்று விழுங்கியவர், ''நான் என்ன செய்வது சகோதரி? அவள் என்னைச் சிறை செய்ய வந்தாள். நான் அவளைச் சிறையெடுத்தேன். இனி என்ன செய்ய வேண்டுமென்பதை நீயே தீர்மானித்துக் கொள். அவளைக் கொண்டு வந்து உன்னிடமே ஒப்படைத்து விடுகிறேன்'' என்றார் கெஞ்சலாக.

மகாராணியின் முகத்தில் விஷமம் வழிந்தது.

''நீ கொண்டு வந்து ஒப்படைக்க அவசியமில்லை ராஜமாதுலா.''

''அவசியமில்லையா? ஏன்?'' ராஜமாதுலர் விழித்தார்.

வெகு நிதானமாக வந்தது மகாராணியின் பதில். ''ஆம் ராஜமாதுலா, அவசியமில்லை. ஏனெனில், நேற்றிரவே அவள் இங்கே கொண்டு வரப் பட்டு விட்டாள். நீ தனியாக ஒதுக்கி வைத்திருந்த முத்துப் பேழைகளும் வந்துவிட்டன.''

(தொடரும்)

முரசொலியின் தப்புத்தாளம்!

ஆசிரியர் பக்கம்

செப்டம்பர் 9, 1999 நாடாளுமன்றத் தேர்தலுக்கான இறுதிப் பிரசார நாள். இரு வேறு அணிகளுக்குக் காரசாரமாகப் பிரசாரம் செய்துவிட்டு காமராஜர் அரங்கத்துக்கு வந்தனர் கலைஞரும் மூப்பனாரும். அமரர் கல்கி நூற்றாண்டு விழாவின் முத்தாய்ப்பாக, அஞ்சல் தலை வெளியிடும் நிகழ்ச்சி... அரசியல் மாறுபாடுகளை ஓரங்கட்டிவிட்டு, இலக்கிய ஆர்வத்தில் இணைந்தனர் தலைவர்கள். தமிழ் உரைநடையில் புரட்சி செய்து, பத்திரிகைத் துறையில் முன்னோடியாக விளங்கி, தேச விடுதலைக்காக மும்முறை சிறை சென்ற கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அஞ்சல் தலையை மூப்பனார் வெளியிட, கருணாநிதி பெற்றுக் கொண்டார். இருவரும் உரையாற்றினர்.

இத்தனைக்கும், மூன்றாவது அணியாகப் போட்டியிட்டு வாக்குகளைப் பிரிக்கும் சூழலை ஏற்படுத்தியதற்காக அன்றைய கால கட்டத்தில் மூப்பனாரைக் கடுமையாக விமர்சித்து வந்தது கல்கி இதழ். 1998ல் அமரர் கல்கி நூற்றாண்டு விழா குழு அமைக்கப்பட்டபோது அதன் தலைவராக மனமுவந்து பொறுப்பேற்ற மூப்பனார், அந்த விமர்சனங்களைப் புன்னகையோடு ஏற்று குழுக் கூட்டங்களுக்கு வருவார். "என்ன ராஜேந்திரன்! இந்த வாரம் என்னைப் பத்தி என்ன கார்ட்டூன் போட்டிருக்கே?" என்று கேட்பார். அதே மனோநிலையுடன் கலைஞரோடு அவர் மேடை ஏற, இரு தலைவர்களும் கல்கி நினைவுகளில் தோய்ந்தெழுந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்துத் தந்தார்கள்.

'கல்கி ராஜேந்திரன் அவ் விழா மேடையில் இடம் பெற்றதால், அது ஒரு குடும்ப விழாவாக நடைபெற்றது' என சமீபத்தில் முரசொலியில் புகைப்படச் சான்றோடு வாதிட முயன்றிருக்கிறார் கருணாநிதி. ஜாதி உணர்வுகளுக்குத் தூண்டில் போடும் அவருடைய சொல்லாற்றலுக்கு உள்ள வலிமை, அவர் வாதங்களுக்கு இல்லை என்பது அவருக்கே தெரியும். (மாறன் அஞ்சல்தலை வெளியீடு, குடும்ப, கூட்டணி நிகழ்ச்சியாகத் தோற்றமளித்தது என்ற 'தராசு பதிலு'க்குப் பதிலே முரசொலி விமர்சனம்)

கல்கி ராஜேந்திரன் நூற்றாண்டு விழா குழுவின் உறுப்பினர்களுள் ஒருவர். அஞ்சல் தலை வெளியீடு அக் குழுவின் முயற்சியால் நடந்தது. விழா கல்கி அலுவலகத்தில் நடத்தப்படவில்லை; பொது நிகழ்ச்சியாக காமராஜர் அரங்கத்தில் நடைபெற்றது. நூற்றாண்டையொட்டி, கல்கி கிருஷ்ணமூர்த்தி காலமாகி நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகே அஞ்சல் தலை வெளியாயிற்று. அப்போது 'குடும்ப விழா' என்று யாரும் அதை விமர்சிக்கவில்லை. 'ஊர் கூடி இழுத்த ஒப்பற்ற தமிழ்த்தேர்' என்றே வியந்தார்கள்.

இந்த விளக்கங்களால் கலைஞர் திருப்தியடையாது போனால் பரவாயில்லை. மத்திய அமைச்சர் முரசொலி மாறன் கட்சிக்கு அப்பாற்பட்டவர். அனைத்துக் கட்சி பிரதிநிதிகளும் அவர் அஞ்சல் தலை வெளியீட்டு விழா மேடையில் இடம் பெற்றிருக்க வேண்டும். பா.ஜ.க தலைமையிலான கூட்டணி ஆட்சியில்தானே மாறன் பொறுப்பு வகித்தார்...? அந்தக் கட்சியைச் சேர்ந்த ஒருவர்கூட அன்று மேடையில் இல்லையே!

அரசியலில் சகிப்புத்தன்மை முக்கியம். பொதுவாழ்வில், அதையும் கடந்த சமநோக்கு அத்தியாவசியம்.



• மாறன் அஞ்சல்தலை வெளியீட்டு விழாவில்...

"தமிழ் நவீன கலை இலக்கிய முயற்சிகளில் திருவண்ணாமலையில் நடந்த அளவிற்கு பல்வேறு வகையான நிகழ்வுகள் வேறெங்கும் நிகழவில்லை" என்று, எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் கூறினார். கூச்சத்தோடு அந்த வார்த்தைகளை அசைபோட்டால், அது உண்மையின் பதிவாகவே இருக்கிறது. தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகளாக இதை நிகழ்த்த நாங்கள் பட்ட அவஸ்தைகள், சந்தித்த அவமானங்கள், பட்ட ரணங்கள், மகிழ்ந்த கணங்கள் என்று கலவைகளால் நிரம்பியிருக்கிறது எங்கள் கடந்த காலம்.

தூக்கம் வராத சில இரவுகளில் நெருப்புக் கங்கு புகைந்த உதடுகளோடு நாங்கள் நடத்திய விவாதத்தின் முற்றிய வடிவம்தான் 'கலை இலக்கிய இரவு'. விடிய விடிய தெருக்கூத்து பார்த்து, எரியும் கண்களோடு விடிந்த காலைகளில் உறங்கப் போகும் நம் மரபை, நகரத்தில் மீட்க முடியுமா என்ற பெரும் கனவு அது. கேளிக்கைகள் இன்றி, ரொம்பவும் கனமான விஷயங்களை பல்லாயிரக்கணக்கான மக்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்க, நாங்கள் எடுத்த முதல் முயற்சியே வெற்றியின் முதல் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டது.

ஒவ்வொரு டிசம்பர் 31ம் தேதி மாலையும் பிரம்மாண்டமும், அழகும் நிறைந்த அந்த திறந்தவெளி மேடையில் எங்கள் கலைஞர்கள் சங்கமித்தார்கள். அதுவரை சாவுக்கு மட்டும் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட 'பாப்பம்பாடி ஜமா' முதல் முறையாக மேடையில் திசைகள் அதிர முழங்கியது. அருகிப்போனதாக மறந்து போன பல மண்ணின் கலைஞர்கள், தூசு படிந்து போயிருந்த தங்கள் பாரம்பரிய உடைகளோடு, எங்கள் மேடைகளில் கைகோத்தார்கள். திருவண்ணாமலை மக்களுக்கு அதுவரை காணக்கிடைக்காத ஒரு வடிவத்தில் நமது பாரம்பரிய, நவீன கலைவடிவங்களும், தமிழின் முக்கிய எழுத்தாளர்களையும் எளிமையாகக் கைகுலுக்க வைத்தோம்.

நகரின் ஒவ்வொரு மூலையிலும் நாங்கள் வைத்த பிரம்மாண்டமான பேனர்கள், ஒட்டு மொத்த மக்களின் கவனத்தை எங்கள் மீது குவித்தன. நிகழ்ச்சிக்கு முன் கவிதைகள், ஓவியங்கள், புகைப்படங்கள் என்று நாங்கள் உருவாக்கின வண்ணமயமான தட்டி போர்டுகள், நகரெங்கும் பலரைச் சிலிர்க்க வைத்தன. புதிய காதலர்கள் தங்களுக்கான கவிதைகளை இந்த நிகழ்ச்சிகளில்தான் தேடினார்கள். தமிழகத்தின் மிக முக்கிய எழுத்தாளர்களை, கலைஞர்களை, ஓவியர்களை, கல்வியாளர்களை எங்கள் நிகழ்ச்சிகளில் சந்தித்து, மிகச் சுதந்திரமாக உரையாடுகிற வாய்ப்பை எங்கள் மக்களுக்கு நாங்கள் ஏற்படுத்தித் தந்தோம். பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள், எந்தக் கேளிக்கையும் இன்றி, ஒரு சீரியஸான விஷயத்திற்கு ஓர் இரவெல்லாம் விழித்திருப்பது, சாதாரண விஷயமில்லை.

தொடர்ந்து இருபது ஆண்டுகள் இது நிகழ்ந்த போது நிறையக் கேள்விகள் எங்களுக்குள் எழுந்தன. குறிப்பிட்ட

இளவந்தின்

தேதியில் எப்படியும் நிகழ்த்திவிட இது என்ன சடங்கா? திருவிழாவா? நடத்தாவிட்டால் தெய்வக் குற்றமாகிவிடுமா? என்றெல்லாம் உதித்தெழுந்த எங்கள் உரையாடல்கள், இதன் தொடர் வடிவத்தை நிச்சயித்தபோது நிறைந்தது.

இனி, ஒரு பரந்த மைதானத்தில், பவுர்ணமிக்கு முந்தைய, அல்லது பிந்தைய ஏதாவது இரவில் - எழுத்தாளர்கள், கலைஞர்கள், சிந்தனாவாதிகள் என்று யாராவது ஒருவரை அழைப்பது. அவரோடு சேர்ந்து, வந்திருக்கின்ற பார்வையாளர்களும் அந்தத் தரையில் உட்கார்ந்து நம் வீட்டுத் திண்ணையில் பேசிக் கொள்வது மாதிரி இயல்பாக, ஆத்மார்த்தமாக பேசிக் கொள்வது. இதை





ஒவ்வொரு மாதமும் நிகழ்த்துவது. இந்த எளிமையான சந்திப்பை 'முற்றம்' என அடையாளப்படுத்தலாம்.

இரண்டாவது முற்றத்திற்கு ஜெயகாந்தன் வந்திருந்தார். தம் உரையின் ஆரம்பத்திலேயே ''முற்றம் மைதானமாகி இருக்கிறது'' என்று ஆரம்பித்தார். தமிழ் படைப்புலகைத் தாண்டி பால்சக்காரியா, பாலசந்திரன் சுள்ளிக்காடு, சச்சிதானந்தன் என்று இந்திய அளவில் முக்கியக் கலைஞர்களை முற்றம் தனக்குள் அமர்த்திப் பார்த்து அழகு கொண்டது. இதுவரை முப்பதுக்கும் மேற்பட்ட 'முற்றம்' நிகழ்வுகளில், பல்வேறு கலைஞர்கள் தங்கள் ஆளுமைகளோடு வெளிப்பட்டு இருக்கிறார்கள்.

நிதானமாக யோசிக்கையில், இந்த

கரையோரம்...

பவா. செல்லதுரை

இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்த இயக்கத்தில் என்ன நிகழ்ந்திருக்கிறது? எதை இழந்திருக்கிறோம்? எந்த எதிர்பார்ப்பு ஏமாற்றி இருக்கிறது? என்று அடுக்கடுக்கான கேள்விகளால் மனம் நிறைகிறது.

தாங்கள் எழுதின கவிதைகளோடும், சிறுகதைகளோடும் சில சமயம் நாவலோடும், இதுவரை குறைந்தது இருநூறு ஆரம்பக் கால படைப்பாளிகள் என்னைச் சந்தித்து உள்ளார்கள். தாங்கள் எழுதியதை நான் படித்து விட வேண்டுமென்றும், அதைப் பற்றிய அபிப்பிராயம் வேண்டுமென்றும், இப் புத்தகத்திற்கு ஒரு முன்னுரை வேண்டியும், இப் புத்தக வெளியீட்டு விழாவில் நான் உரையாற்றக் கேட்டும்...

இப்புதிய படைப்பாளிகளோடு தோழமையோடு உரையாடியதில், அவர்கள் வாசிக்க வேண்டிய புத்தகங்களை, திரும்பத் திரும்பப் பட்டியலிட்டு இருக்கிறேன். அதை அச்சு வடிவத்திலேயும் எங்கள் நிகழ்ச்சிகளில் கொடுத்திருக்கிறோம். 'பாரதியிலிருந்து குட்டி ரேவதி வரை' சிறந்த கவிதைகள், 'புதுமைப்பித்தனிலிருந்து ஜே.பி. சாணக்யா வரை' சிறந்த கதைகளின் பட்டியல், இவர்களால் வாசிக்கப்படாமலேயே நிராகரிக்கப்பட்ட வடிவத்தில் எங்களிடமே உள்ளன. புதிய படைப்பாளிகளுக்கு தம் முந்தைய படைப்பாளிகளின் ஆழத்தை எட்டுவதற்கு நேரமில்லை. தமிழின் ஆளுமைகளை வாசிக்க வாசிக்க, தாங்கள் கடக்க வேண்டிய தூரம் குறித்த துல்லியத்தை இவர்கள் தெரிந்து கொள்ளக் கூடும். ஆனால் என் இந்த எதிர்பார்ப்பில் எப்போதும் ஏமாற்றமே படிந்து விடுகிறது.

தொடர்ந்து நிகழ்ந்த இந்த கலாசார முயற்சிகளால் இங்கிருந்து சில பேர் படைப்பாளிகளாக, சில பேர் ஆழ்ந்த வாசிப்பிற்குள்ளானவர்களாக, இன்னும் சில பேர் நல்ல எழுத்தாளர்களின் பெயர்களை, புத்தகங்களின் தலைப்புகளை மட்டுமே அறிந்தவர்களாகவும், எந்தச் சலனமுமின்றி கூட்டம் கேட்க வந்து விட்டுப் போனவர்களாகவும்தான் எங்கள் ஊர் இயங்குகிறது - கனவாற்றின் கரையோரம் ஒதுங்கி, தலை சீவி அழகு கொள்ளும் வாழ்வை நோக்கி.



• சாதனைப் பட்டியல்!

'எச்' முத்திரை ரத்து ஒரு சாதனையா?

அளித்த ஆதரவை (நாற்பது இடங்களிலும் செய்தாற்போல்) திரும்பப் பெறுவது மக்கள் சாதனை. அரசின் சாதனை உயர, மக்கள் சாதனையும் உயரும்!

● பனிமலர், மதுரை

? தலைவர் கருணாநிதி நினைக்கும் வரைதான் ஜெயலலிதா முதல்வராக இருக்க முடியும் என்கிறாரே துரைமுருகன்?

! ஆற்காடு வீராசாமி பேசினதை அவர் கேட்கவில்லை போலும்! அறிஞர் அண்ணா குறிப்பிட்ட 'கட்டுப்பாடு', வெற்றிக்குப் பின் உருவாக வேண்டிய, அடக்கமும் இணைந்த விஷயம்.

● சி. சசிகலா, விருதுநகர்

? விலையேற்றம், பணவீக்கம் போன்றவற்றில் சிக்கித் தவிக்கும் இந்தியப் பொருளாதார நிலை, கேப்டன் மன்மோகன் சிங்கால் முன்னேற்றம் காண இயலுமா?

! இயலும். அவர் கூட்டணி நிர்பந்தங்களிலிருந்து விடுபட்டால் அது துரிதமாக நடக்கும். எதிர்கட்சியினர் ஒத்துழைத்தால் மேலும் சீக்கிரம்! ஆனால், அவர் சூழ்நிலையின் கைதியாக இருப்பதால் ஆமை வேக முன்னேற்றம் தான் எதிர்பார்க்க முடியும்.

● டி. சுப்பிரமணியன், மேலையூர்

? 'எச்' கார்டு முத்திரை ரத்து செய்யப்பட்டதை ஜெயலலிதா அரசின் சாதனைப் பட்டியலில் இடம் பெறச் செய்துள்ளார்களே?

! அடித்துப் பிடுங்கி விட்டுத் திரும்பக் கொடுப்பது அரசின் சாதனை!



• 'புரட்சி' தடை!

● ஆர். மாதவ ராமன், கிருஷ்ணகிரி

? காவிரி நீர் பங்கீடு விஷயத்தில் உறுதியான முடிவு எடுக்கப்படும் என்று மத்திய அமைச்சர் அறிவித்துள்ளாரே...?

! உறுதியான முடிவுகளைப் பலமுறை எடுத்தாகிவிட்டது. அதைச் செயல்படுத்தப் போவது யாரென்பதுதான் முடிவாகவில்லை.

● எஸ்.அசாதி, பெருமாள் தேவன்பட்டி

? சிறந்த பேச்சாளரும் தலைவருமான வாஜ்பாயை ஓரங்கட்டிவிட்டு, நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக அத்வானியைத் தேர்ந்தெடுத்ததால்தானே தொடர் நாடாளுமன்ற முடக்கம்?

நீங்கள் கேட்டவை - தராசு

! அத்வானி ஒன்றும் மோசமான பேச்சாளர் அல்ல. நாடாளுமன்றத்துக்கு அவர் புதிதும் அல்ல. அணுகுமுறையில்தான் கோளாறு. எந்தப் பிரச்னையானாலும் நாடாளுமன்றத்தில் அவைத் தலைவர் ஒப்புதல் பெற்று, முறைப்படி விவாதிக்க முடியும். வாதப் பிரதிவாதங்கள் மக்களை அடையும்போது, அவர்கள் உண்மைகளைத் தேர்ந்தறிவார்கள். ஆனால் வாதங்களைவிட, அவையை முடக்குவதுதான் முக்கியம் என்று எதிர் அணி தீர்மானித்துவிட்டால், யார் தலைவராக இருந்துதான் என்ன பயன்?



• சோதனைத் தடைகள்!



• ஸ்த்ரீ சக்தி!



• 'முடக்கு' வாதம்!

• **பி. ஜெயபிரகாஷ், சர்க்கார்பதி**

? சம்பளம் வாங்குவோரெல்லாம் அதைக் கையில் வாங்கியதும் என்ன செய்வார்கள் சார்...?

! மனத்துக்குள் வீட்டையும் கடனையும், கைகளால் நோட்டையும் எண்ணிப் பார்ப்பார்கள்.

• **அ. கஸ்ஸாலி ரஹ்மான், திருச்சி**

? உலகிலேயே சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியலில் சோனியா காந்தி மூன்றாவது இடத்தைப் பெற்றிருப்பது பற்றி...?

! சக்தி பெற்றிருப்பதில் பெருமை இல்லை. அந்தச் சக்தி எந்த விதமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதில்தான் பெருமை. இதற்கு இன்றுவரை பதில் இல்லையே.

• **சாத்தூர் சபாபதி, திருச்சி - 18**

? நம் நாட்டில் சமீபத்தில் தங்களை அதிசயிக்க வைத்த அரசியல் நாகரிகம்; முகம் சுளிக்க வைத்த அநாகரிகம்...?

! அ) ம.மோ.சிங் தமது நூறு நாள் ஆட்சியில் கணிசமாக எதுவும் சாதிக்கவில்லையே என்று வெளிப்படுத்திய ஆதங்கம்.

ஆ) வேறென்ன? மணி சங்கர் அய்யர் உருவ பொம்மையைச் செருப்பால் அடித்த கொடுமைதான்.

• **நகை தி.மகராசன்; சின்னமனூர்**

? "டில்லியிலே உட்கார்ந்திருக்கிற வெங்கட்ராமன்கள், சில மடாதிபதிகள், எல்லாத் துறைகளிலும் இருக்கிற பார்ப்பன அதிகாரிகள்தான் இன்றைய தினம் ஜெயலலிதாவைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றனர்" என்கிறாரே ஆற்காடு வீராசாமி?

! அவர்களெல்லாம் காப்பாற்றுகிறார்களோ இல்லையோ, இதுபோன்ற அபத்த அரசியலால் தி.மு.க.வே. ஜெயலலிதாவை நன்றாகக் காப்பாற்றித்தான் வருகிறது.

• **டி. ராமநாதன், சென்னை - 61**

? 'சங்கர மடங்களுக்கு பிராமணர் அல்லாதரை ஏன் நியமிப்பதில்லை?' என்று கேட்கும் நமது பகுத்தறிவுவாதிகள், மதுரை ஆதீனம் போன்ற ஆதீனங்களுக்கு ஏன் பிராமணர்களை இதுவரை அமர்த்தவில்லை என்று கேட்பார்களா...?


! எல்லா விஷயங்களையும் இப்படி குயுக்தியாக அணுகி, கேள்வி கேட்பதை என்று நிறுத்துகிறோமோ அன்றுதான் உருப்படுவோம்.

நம் நாடும் மக்களும் போற்றும் மரபுகளைக் கேள்விக்குட்படுத்துவதை நிறுத்திவிட்டு, மூட நம்பிக்கைகளையும் சீரழிவுகளையும் எதிர்த்து இயங்குவது உபயோகமாயிருக்கும்.

● கு. அருணாசலம், தென்காசி

? தமிழக சட்டசபையில் விவாதம் இன்றி மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதற்கும், நாடாளுமன்றத்தில் விவாதம் இன்றி மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டதற்கும் உள்ள ஒப்பீடு...?

! இங்கே விவாதத்துக்குப் போதிய நேரமே ஒதுக்கவில்லை என்று புறக்கணித்தது எதிர்கட்சி; அங்கே நேரமிருந்து வருந்தி அழைத்தும், விவாதத்தோடு தொடர்பில்லாத காரணங்களைச் சுட்டிக் காட்டி, அவை நடவடிக்கைக்கு இடையூறு செய்தது எதிர்கட்சி.



• அபத்த...



• ... அரசியல்!

● பா. செல்வ விநாயகம், சென்னை - 82 ❐

? தற்போது நம் நாட்டில் மக்களுக்கு எந்தத் துறையில் தொடர்ந்து போராடினாலும் சரியான நீதி கிடைக்க காலதாமதம் ஆவதால், மக்களின் மனநிலை எத்தகைய தன்மை வாய்ந்ததாக இருக்கும் - வெறுப்பா, அவநம்பிக்கையா..?

! வெறுப்பு, அதிருப்தி, அவநம்பிக்கை இவற்றுடன் இன்னொரு அபாயமும் சேர்கிறது : அல்ப விஷயத்துக்கு வழக்குத் தொடர்ந்து நமக்குப் பிடிக்காதவரை அலைக்கழிக்கலாம்; நிஜமாகவே தவறிழைத்தவர்கள் நொண்டிக் காரணம் சொல்லி வழக்கை இழுத்தடிக்கலாம் - இவை தேசியக் கொள்கை போலாகி வருவதுதான் ரொம்பப் பெரிய அபாயம்.

● அ. ஜெகதீசன், சேலம் ★

? நூறு கோடியைத் தாண்டிய இந்தியாவின் பெருமை, பதக்கப் பட்டியலில் ஐம்பதாவது இடத்துக்கும் கீழே இடம் பெற்றிருப்பது எதைக் காட்டுகிறது?

! மனித வளத்தை நாம் முறையாக, சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறி வருவதை. ஒலிம்பிக் தோல்விகளைவிட இது தான் பெரிய தோல்வி.

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1

? நம்மை நாமே குஷியாக்கிக்க என்ன சார் வழி...?

! அன்பானவர்கள் நம்மிடம் பேசிய அழகான வார்த்தைகளை நினைத்துப் பார்ப்பது.

● கே.எல். கந்தரூபி, நத்தனூர்

? எம்.ஜி.ஆர். போல் நடித்து மக்களைக் கவர ஆரம்பித்துவிட்டாரே வைகோ?

! நடக்கட்டும்; நடக்கட்டும்!

❐ ரூ. 100 முதல் பரிசு பெறுபவர் :
பா. செல்வவிநாயகம்,
10/25, கே.ஸி.கார்டன்
இரண்டாவது தெரு,
திரு.வி.க. நகர்,
சென்னை - 600 082.

★ ரூ.50 இரண்டாம் பரிசு பெறுபவர் :
அ. ஜெகதீசன்,
201/1-76-எ, கோபால் தெரு,
பொன்னம்மாபேட்டை,
சேலம் - 636 001.

ஜோக் ராப்பிச்சை!



"உங்க பையன் படிப்பு விஷயத்துல ரொம்ப மிரண்டு போயிருக்கான்..."

"என்ன டீச்சர் சொல்றீங்க?"

"பஞ்ச பூதங்கள் என்னன்னு கேட்டா... இங்கிலீஷ், தமிழ், கணக்கு, சயன்ஸ், சோஷியல்னு சொல்றான்."


- கிஷ்கு



"ஏன் அரசர் கோபமாயிருக்கார்...?"

"குருகுலத்தில் நடந்த நுழைவுத்தேர்வில் இளவரசர் பிட் அடிச்சதாகச் சொல்லி அட்மிஷன் மறுத்துட்டாங்களாம்!"

- சஷ்டிக்வேலன்



"சித்திரகுப்தா, காலம் எவ்வளவோ முன்னேற, நான் இன்னமும் கயிறும் கையுமாகவா இருப்பது? வேறு எதை யாவது வைத்துக் கொள்ள வழி சொல்லேன்..."

"ஸ்டெதாஸ்கோப்பை வைத்துக் கொள்ளுங்கள், பிரபு!"

- வீ.விஷ்ணுகுமார்



"இராப்பிச்சை இன்னிக்குக் கொஞ்சம் லேட்டா வருவான்!"

"எப்படித் தெரியும்?"

"இப்பத்தான் எஸ்.எம்.எஸ் வந்துச்சு!"

- ஞா. பாரதி

நடக்குமென்பார்

அக்னிசர்மா பக்கம்

செப் 8 முதல் 14 வரை

மேஷம் : உங்க ராசிக்கான கிரகங்கள் பண்ணுற கோளாறுனால சிறு பிரச்னைகள் வந்து உடனே ஓடிப் போயிடும். கவலைப்படாதிங்க. எல்லாக் காரியங்களும் வெற்றிகரமா முடியும். கொஞ்சம் எதிர்பாராத செலவுகள் வேற இருக்கு. சமாளிச்சுடுவீங்க. தெய்வ பலத்தை அபிவிருத்தி பண்ணிக்கறது நல்லது. உத்தியோகத்தில உயரதிகாரிகள் ஆதரவு கிட்டும். மருத்துவம், கெமிக்கல்ஸ், கலைத்துறை, பத்திரிகை தொழில்கள்ல இருக்கறவங்க மேன்மை பெறுவாங்க. குடும்பத்தில விட்டுக் கொடுத்து போறது, நடக்கப் போற சுபகாரியங்களுக்கு ஆதரவா இருக்கும். பெண்களுக்கு உற்சாகமான, மனநிறைவு தரும் வாரம்.

ரிஷபம் : வெற்றி உங்க விரல் நுனியிலதாங்க. எதிர்பாராத சந்திப்பு. சரளமான பண நடமாட்டம்னு உற்சாகம் பொங்குற வாரம். உத்தியோகத்தில பிரச்னைகள் ஓய்ந்து, சுமுகமான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சி வெற்றி பெறும். யந்திரம், கமிஷன், இண்டஸ்ட்ரீஸ் தொழில்கள் ஏற்றம் பெறும். குடும்பத்தில் குதூகலமான திருப்பம் உண்டாகும். உறவினர் வருகை, குடும்பத்தில் ஒற்றுமை என்று சந்தோஷமான நேரம். பெண்களுக்கு அனுகூலமான திருப்பம் ஏற்படும்.

மிதுனம் : எதையும் சுலபமா ஜெயிக்க, எதிரிகளைப் பணிய வைக்கிற வாரம் இது. பிரபு தனவான்கள் ஆதரவு உற்சாகப்படுத்தும். பயணங்கள் அனுகூலம் தரும். உத்தியோகத்தில் உங்க உழைப்பும் திறமையும், முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். நிறைவேறாம இருந்த கோரிக்கைகள் நிறைவேறும். எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், அரசாங்கத் துறைகள், உலோக வகை தொழில்கள்ல இருக்கறவங்களும், கலைஞர்களும், அரசியல்வாதிகளும் முன்னேறுவார்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். சுபகாரிய முயற்சி அனுகூலமாகும். பெண்கள் எண்ணம் போல எல்லாம் நடக்கும்.

கடகம் : உங்களுக்காகவே சிறுசிறு பிரச்னைகள் காத்திட்டிருக்கு. நிதானமா கையாண்டா வெற்றி மேல் வெற்றிதான். பொருளாதாரம் அளவோடு வளர்ச்சி பெறும், அகலக்கால் வைக்காதீங்க. புது முகம் சில அறிமுகம் கிடைக்கும். உத்தியோகத்தில் இதுவரை இழுபறியாயிருந்த விவகாரங்கள் ஒரு முடிவுக்கு வந்துடும். தொழில் உபகரணங்கள், ஃபர்னிச்சர், வாகனம், கலைத்துறை, டிராவல்ஸ் தொழில்கள் லாபம் தரும். குடும்பத்தில விரோதங்கள் மறைந்து ஒற்றுமை உண்டாகும். பெண்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

சிம்மம் : உங்க தெய்வ பலம் கூடறதால, சகல காரியங்களிலும் முன்னேற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் மறையும். பயணங்களில் அனுகூலம் கிடைக்கும். உத்தியோகத்தில் எல்லாம் அனுகூலமாகவே நடக்கும். பதவி உயர்வு, ஊதிய உயர்வுன்னு ஏற்றமான நேரம். கடன் தொல்லை மறையும். இண்டஸ்ட்ரீஸ், கமிஷன், காண்ட்ராக்ட்ஸ், எலக்ட்ரானிக்ஸ், துறைகள்ல லாபம் கணிசமா கிடைக்கும். குடும்பத்தில குருபலம் நிறைஞ்சிருக்கிறதால, சுபமங்கள காரியம் கை கூடி மகிழ்ச்சி தரும். பெண்களுக்கு சாதகமான

வாரம்.

கன்னி : அளவோடு நன்மை பெற்று வளமோடு இருக்கிற வாரங்க இது. தேவைக்கேற்ற பணவசதி கிடைக்கும். வெளியூர்ப் பயணம் ஏதும் போக வேண்டி வரும். உத்தியோகத்தில் அமைதியான சூழ்நிலை நிலவும். தாமதப்பட்ட கோரிக்கைகள் நிறைவேறி மகிழ்ச்சி தரும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். சட்டம், ராணுவம், காவல், யந்திரம், காண்ட்ராக்ட்ஸ் துறைகள் மேன்மை பெறும். குடும்பத்தில பொருளாதாரம் ஏற்றத் தாழ்வுமாக இருக்கும். திருமண முயற்சிகள் கை கூடும். பெண்களுக்கு உடன் பிறந்தவர்களால் சில பிரச்னைகள் ஏற்பட்டு விலகும்.





துலாம் : உங்க ராசிக்கான கிரக சஞ்சாரம் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படுத்தலாமான்னு யோசிக்குது. சிக்கனமா இருந்து சமாளிங்க. எதிர்பாராத சந்திப்பும் புதியவர்கள் அறிமுகமும் கிடைக்கும். உத்தியோகத்தில இருந்த சங்கடம் விலகி, அனுகூலமான சூழ்நிலை ஏற்படும். ரியல் எஸ்டேட், கலைத்துறை, மருத்துவம், கெமிக்கல்ஸ் தொழில்கள் முன்னேறும். குடும்பத்தில் திட்டமிட்ட சுபகாரியங்கள் இனிது நிறைவேறும். பெண்களுக்கு பண வரவு, பொருள் சேர்க்கை சந்தோஷம் தரும்.

விருச்சிகம் : எந்தப் பக்கம் திரும்பினாலும் வெற்றி உங்களுக்காகக் காத்திருக்கும். வெளிநாட்டிலிருந்து நீங்க எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து உற்சாகம் கூட்டும். உத்தியோகத்தில் புதிய திருப்பம் காத்திருக்கு. இரும்பு, ஆபரணத் தொழில், கலைத் துறை, ரியல் எஸ்டேட் துறையினருக்கு ஏற்றமான காலம். ஏற்றுமதி இறக்குமதி அதிக லாபம் காணும். குடும்பத்தில குதூகலம் நிலவும். பொருளாதார மேன்மை உண்டாகும். பெண்களுக்கு உல்லாசமான, உற்சாகமான வாரம்.

தனுசு : உங்க ராசிக்கான கிரகங்கள் உங்களுக்கு உதவியா எல்லாப் பக்கங்களிலிருந்தும் 'உதவிக் கரங்கள்' அனுப்பறதால, நல்லவர்களும், வல்லவர்களும் உங்களுக்கு உதவத் தயாரா இருப்பாங்க. மகான்கள்,

இது நல்ல வாரம்

கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	செப்.8 (ஆவணி-23)	மிருகசீரிஷம்	நவமி	திருச்செந்தூர் ரதோற்சவம்
வியாழன்	செப்.9 (ஆவணி-24)	திருவாதிரை	தசமி	விநாயகர் உற்சவாரம்பம்
வெள்ளி	செப்.10 (ஆவணி-25)	புனர்பூசம்	ஏகாதசி	ஸர்வ ஏகாதசி/ சுப முகூர்த்தம்
சனி	செப்.11 (ஆவணி-26)	பூசம்	துவாதசி	திருநள்ளாறு சனி பகவான் உற்சவம்
ஞாயிறு	செப்.12 (ஆவணி-27)	ஆயில்யம்	திரயோதசி	முருகன் தலங்களில் விழா
திங்கள்	செப்.13 (ஆவணி-28)	மகம்	சதுர்த்தசி	-
செவ்வாய்	செப்.14 (ஆவணி-29)	பூரம்	அமாவாசை	ஸர்வ அமாவாசை

சாதுக்கள் தரிசனம் கிட்டும். உத்தியோகத்தில் சிறு பிரச்னைகள் ஏற்பட்டு விலகிவிடும். கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். தோல் பொருள், ஃபர்னிச்சர், கெமிக்கல்ஸ், துறைகள் லாபம் தரும். குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். சுபமங்கள காரியங்கள் கைகூடும் பெண்களுக்கு யோகமான வாரம்.

மகரம் : பட்ட பாடெல்லாம் போதுங்க. பட்டுபட்டுன்னு கஷ்டங்கள் விலகி, திட்டமிட்டபடியே நல்லதெல்லாம் நடக்க ஆரம்பிக்கிற நேரங்க இது. தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு கூடி வெற்றி தேடித்தரும். அரசாங்க ஆதரவு கூடும். உத்தியோகத்தில எல்லாவகையிலும் அனுகூலமான திருப்பம் ஏற்படப் போகுது. இஞ்சினீயரிங், இண்டஸ்ட்ரீஸ், போக்குவரத்து உபகரணங்கள், ஆபரணம், எண்ணெய் வகை, தொழில்கள் முன்னேற்றம் பெறும். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். பெண்களுக்கு ஏற்றமான வாரம்.

கும்பம் : வார ஆரம்பத்தில் கொஞ்சம் தடங்கலுக்கு வருந்தினாலும், போகப் போக வெற்றி உங்க கைக்கு வந்து சேரும். பொருளாதாரம் டேஞ்சர் சிக்னல் காட்டுது, எச்சரிக்கையா இருங்க. சிக்கனமா சமாளிங்க. உத்தியோகத்தில் எதிர்ப்புகள் காணாமப் போயிடும். தோல், எண்ணெய், டிராவல்ஸ், பத்திரிகை துறைகள் நன்மை பெறும். குடும்பத்திலயும் பொருளாதாரம் கொஞ்சம் தடுமாறும். உஷாரா இருங்க. பெண்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

மீனம் : உங்க ராசிக்கான கிரகங்கள் உங்க மதிப்பையும் அந்தஸ்தையும் உயர்த்தத் தீர்மானம் பண்ணியிருக்கறதால, உங்க செல்வாக்கு எங்கேயோ போகப் போகுது. எதிரிகள் ஓடி ஒளிஞ்சுடுவாங்க. தாராளமான பண நடமாட்டம் இருக்கும். யந்திரம், இண்டஸ்ட்ரீஸ், எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் துறைகள்ல இருக்கறவங்க லாபம் அடைவாங்க. குடும்பத்தில குதுகலம் நிறையும். பெண்களுக்கு சிறப்பான வாரம்.

சர்ச்சை சாவர்க்கர்!



விநாயக தாமோதர சாவர்க்கர் பெயர் சர்ச்சைக்குள்ளாவது புதிய விஷயமில்லை. பாராளுமன்றத்தில் அவரது உருவப்படத்தை பா.ஜ.க கூட்டணி அரசு திறந்து வைத்தபோது, அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக் கூடாது என்று, ஜனாதிபதி கலாமுக்குக் கடிதம் எழுதியது காங்கிரஸ் கட்சி. ஆக சாவர்க்கர் காங்கிரஸ் கட்சிக்கு வேண்டப்படாதவர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

மகாராஷ்டிர மாநிலத்தில் நாசிக் அருகில் ஒரு கிராமத்தில் பிறந்தவர் சாவர்க்கர். பள்ளிக்கூட நாட்களிலிருந்தே அரசியலில் ஈடுபட்டவர். ஆயுதப் போராட்டத்தின் மூலமே, இந்தியாவுக்கு விடுதலை கிடைக்கும் என முழுமையாக நம்பிய இளைஞர்கள் ஏற்படுத்திய 'அபிநவ் பாரத்' என்ற அமைப்பின் முதுகெலும்பாக இருந்தவர்.

நாசிக் கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டார் சாவர்க்கர். மும்பை சிறப்பு நீதிமன்றம் அவருக்கு ஐம்பது வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கியது.

நாசிக், தானே, சென்னை என பல்வேறு சிறைகளிலும் தண்டனை அனுபவித்த சாவர்க்கரை கடைசியாக அந்தமானில் உள்ள செலுலர் தனிமைச் சிறையில் அடைத்தனர். சிறையில் சாவர்க்கர் ராமாயணம், மகாபாரதம், உபநிஷத்துக்கள் என ஏராளமாகப் படித்ததுடன் சிறைச் சுவரில் ஆணியால் பதிமூன்றாயிரம் கவிதை வரிகளை எழுதினார். சிறையில் கைதிகளை மதமாற்றம் செய்யும் முயற்சிக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

1924ல் சாவர்க்கர் விடுதலை ஆனார். உடனடியாக தம்மை பல்வேறு சமுதாயப் பணிகளிலும் ஈடுபடுத்திக் கொண்டார். தீண்டாமையை ஒழிக்க அரும்பாடுபட்டார்.

ஹிந்து மகாசபா என்ற அமைப்பில் தம்மை இணைத்துக் கொண்டு, பின்னர் அதன் தலைவரான சாவர்க்கர் எழுதிய 'இந்துத்வா' பற்றிய புத்தகம்தான், பின்னாளில் ஆர்.எஸ்.எஸ் இயக்கம் ஆரம்பிக்க அஸ்திவாரம் இட்டது. ஆனாலும் சாவர்க்கருக்கும், ஆர்.எஸ்.எஸ் ஸ்தாபகரான ஹெக்டேவாருக்கும் சுமுகமான உறவு இருந்ததில்லை.

இன்னொரு சுவாரசியமான விஷயம். நாதுராம் கோட்ஸே, சாவர்க்கரின் சீடர். இதனால் கோட்ஸே, காந்திஜியைக் கொன்றபோது, சாவர்க்கரும் ஒரு குற்றவாளியாய் அவ்வழக்கில் சேர்க்கப்பட்டிருந்தார். ஆனாலும் அவர் குற்றவாளி அல்ல என்று கோர்ட் தீர்ப்பு வர, சிறையிலிருந்து விடுதலை ஆனார் சாவர்க்கர். ஆனால், சாவர்க்கர், காந்திஜியின் அஹிம்சைத் தத்துவத்துக்கு எதிரான போராளி. இந்துத்வா மீது பிடிப்புக் கொண்டவர் என்பது வரலாறு.

இந்து மதம் வேறு. இந்துத்வா வேறு என்று பா.ஜ.க இன்று பேசுவது சாவர்க்கரின் கருத்துதான்.

- எஸ். சந்திரமௌலி

'அரவிந்தர் தமக்கென ஏற்படுத்தப் பட்டிருக்கும் இடத்தில் ஏகாந்தமாக இருந்து எப்போதும் ஞான யோகத்தில் ஈடுபட்டு வருகிறார். அவரை வெளியார் எவரும் பார்க்கவே முடியாது. ஆசிரம வாசிகள் கூட அவரைக் காணவியலாதென்றால் அதிகம் கூறுவானேன்! அன்னையார் ஒருவர்தான் அவர் இருக்குமிடத்துக்கு எப்போதும் போய்வர உரிமையுடையவர். அன்னையார் தான் அரவிந்தருக்கு வேண்டியவைகளைக் கவனித்து சேவை புரிந்து வருபவர். அன்னையாரைக் கூட ஆசிரமவாசிகள் எப்போதும் காண முடியாது. அன்னையார் நடத்தும் பிரார்த்தனைக் காலங்களிலும் மற்றும் சில குறிப்பிட்ட சமயங்களிலும் தான் அவர்கள் அவரைக் காண முடியும்... ஆனால் அரவிந்தர் தமது சிஷ்யர்கள் ஆத்மார்த்த விஷயமாகக் கேட்கும் கேள்விகளுக்கு கடித வாயிலாகப் பதிலளித்து வருகிறார்.

- (பகவான் அரவிந்தர்' என்ற நூலில் நாரண துரைக்கண்ணன்)

மண்ணில் தெரியும் வானம்!

அதிமனச் சக்தியை மண்ணில் இறக்குவதற்காக யோகத்தில் ஆழ்ந்து கடுமையாக உழைக்கலானார் ஸ்ரீ அரவிந்தர். நான்காண்டு தனிமைத் தவம். இதனிடையே 1928 பிப்ரவரி 16ம் தேதி அவரைச் சந்திப்பதற்காகப் புதுவைக்கு வந்தார் கவியரசர் தாகூர்.

ஏற்கெனவே பல்லாண்டுகளுக்கு முன் அரவிந்தரைச் சந்தித்து, தம்மை விடப் பதினொரு வயது இளையவராயினும் 'அரவிந்தா! ரவீந்திரனின் நமஸ்காரத்தை ஏற்றுக் கொள்!' என்று மனம் நெகிழ்ந்து பாடியவர் அவர். இப்போது மறுபடி தேடிவந்திருக்கும் அவரைப் பார்க்காமல் இருப்பது எப்படி?

அரவிந்தர் சந்திக்கச் சம்மதித்தார். குறிப்பிடத்தக்க அந்தச் சந்திப்பு, தாகூரின் மனத்தில் என்றும் நிலைத்திருக்கும் உயர்ந்த ஆன்மிக அனுபவமாக அமைந்தது.


இருவருக்கும் தான் எத்தனை ஒற்றுமைகள்! தாடியுடன் கூடிய அருள் நிறைந்த தோற்றத்தில் மட்டும் தானா ஒற்றுமை! மன இயல்புகளிலும் பொருத்தங்கள் உண்டே! தாகூர் ஸ்ரீஅரவிந்தரைப் போல் ரிஷி அல்ல என்றாலும், அவரைப் போலவே ஆன்மிக நாட்டமுடைய ஞானி. இருவருமே மாபெரும் கவிஞர்கள். கவிஞர் என்ற வகையில் அரவிந்தரை விடத் தாகூர் அதிகப் புகழ்பெற்றுப் போற்றப் பட்டார். ஆன்மிகவாதி என்ற வகையில், தாகூரை விட அரவிந்தர் அதிகப் புகழ் பெற்று வணங்கப்பட்டார்.

அரவிந்தரின் பெருமைகளை அவர் வாழ்ந்த காலத்திலேயே உணர்ந்து கொண்டாடிய மகாகவிகள் இருவர். ஒருவர் தமிழை உயர்த்திய தங்கக் கவி பாரதியார். இன்னொருவர் நோபல் பரிசு பெற்ற வங்கக் கவி தாகூர். புதுவைக்கு வந்த அரவிந்தரை

திருப்பூர் கிருஷ்ணன்

வரவேற்றுப் போற்றியது தமிழ் மகாகவியின் குணம். புது வைக்கே அவரைத் தேடி வந்தது, வங்க மகாகவியின் மனம். தாம் புதுவையில் ஸ்ரீ அரவிந்தரை தரிசித்தது பற்றிப் பின் வருமாறு எழுதினார் தாகூர்:

'ஸ்ரீ அரவிந்தரின் தெய்வீகப் பொலிவு நிறைந்த தோற்றத்தைப் பார்த்தேன். மோனம் நிறைந்த அருளாவேச சக்தியைத் தம்மில் அவர் திரட்டி



வைத்திருக்கிறார். அவருடைய உள்ளொளி அவர் திருமுகத்தில் பிரகாசிக்கிறது. பழைய ரிஷிகளின் வாக்கு அவர் மூலமாக ஒலிக்கிறது. அவர் குரலை பாரதத்தின் குரலாக அறிந்து, உலகம் செவி மடுக்கும் என்று புரிந்து கொண்டேன்.'

அரவிந்தரது தத்துவங்களால் ஈர்க்கப்பட்ட தாகூர், அரவிந்தர் ஸித்தி அடைவதற்கு சுமார் ஒன்பது ஆண்டுகள் முன்பே தம் எண்பதாம் வயதில் காலமாகிவிட்டார்.

அதிமனம் தன்னில் இறங்க

வேண்டும் என்று வானகத்தை நோக்கித் தம் மனத்தைக் குவித்துக் கொண்டிருந்தார் அரவிந்தர். தொடர்ந்து யோகத்தில் ஆழ்ந்த அவர், ஒரு கட்டத்தில் எழுதினார்:

'அதிமனச் சக்தி இறங்கத் தொடங்கி விட்டது. ஆனால் அது இன்னும் மனித உடலைத் தன்வசப்படுத்தவில்லை. அவ்விதம் நிகழ சூட்சும உலகில் இன்னும் நிறைய எதிர்ப்பு இருக்கிறது. எந்த நேரத்திலும் அதிமனம் முழுமையான சக்தியோடு இறங்கும்.'

ஸ்ரீ அரவிந்தர், அன்னை ஆகியோரின் அக வாழ்க்கை, ஒருபுறம் உழைப்பும் சாதனைகளுமாகத் தொடர்ந்தது. ஆசிரமத்தின் புற வாழ்விலும் ஏராளமான மாறுதல்கள்... காந்தம் இரும்பை ஈர்ப்பது போல, உலகெங்குமிருந்து பல சாதகர்களை அரவிந்த ஆசிரமம் ஈர்த்தது. சாதகர்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் பெருகலாயிற்று. அன்னையின் அபாரமான நிர்வாகத் திறன் காரணமாக, ஆசிரமம் பெரு வளர்ச்சி காணத் தொடங்கியது.



ஆன்மிக சாதகர்களான ஆசிரம வாசிகளுக்கு, ஸ்ரீ அரவிந்தரிடமிருந்து இரண்டு வழிகளில் உதவி கிடைத்தது. ஒன்று நேரடி தரிசனத்தின் மூலமாக. இன்னொன்று அவர்கள் எழுதிக் கேட்ட சந்தேகங்களுக்கு அரவிந்தர் எழுதிய பதில்கள் மூலமாக. ஸ்ரீ அரவிந்தர் பிறந்த நாளான ஆகஸ்ட் 15, ஸ்ரீ அன்னை பிறந்த நாளான பிப்ரவரி 21 போன்ற சில நாட்களில் மட்டும் தரிசனம் தரும் வழக்கத்தை அரவிந்தர் மேற்கொண்டிருந்தார். அந்நேரங்களில் நமஸ்கரிக்கும் சீடர்களைக் கூர்ந்து நோக்குவார். அவர்களது அக ஜீவன்மேலும், புற ஜீவன்மேலும் தம் ஆளுமையைச் செலுத்தி, அவர்களின் ஆன்மிகத் தளத்தை உயர்த்துவார். அத்தகைய தரிசனங்களின் போது ஸ்ரீ அன்னையும் உடனிருப்பார்.

அரவிந்தர் சாதகர்களின் ஐயப்பாடுகளுக்கு விளக்கம் தெரிவித்து பதில் எழுதுவதற்கு, முழு இரவும் பகலில் கணிசமான பகுதியும் ஆகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். பதில் எழுதுவதை தம் யோகத்தின் ஒரு பகுதியாகவே கருதி அவர் செயல்பட்டு வந்தார். அதிமனத்தைக் கீழே இறக்க வேண்டும் என்ற அவரது மைய நோக்கத்திற்குப் பயன்படும் கருவியாக இருந்ததாலேயே, தாம் சிரத்தையுடன் பதில் எழுதியதாக அவர் கூறியிருக்கிறார். அரவிந்தரின் பதில்கள் தொகுக்கப்பட்டு இப்போது படிக்கக் கிடைக்கின்றன என்பது ஆன்மிக அன்பர்களின் பாக்கியம்.

1926 நவம்பர் 24ம் நாள். மாலை ஆறுமணி. எல்லாச் சீடர்களும் தியான அறைக்கு வந்துவிடுமாறு அன்னை அவசரச் செய்தி அனுப்பினார். சீடர்கள் விரைந்து வந்து அமர்ந்தனர். கனிந்து இறுகிய ஓர் ஆழ்ந்த மோனம் தியான அறையில் கவிந்தது. கடல் போல் ஒரு பேரொளி மேலிருந்து கீழே இறங்குவதை வியப்போடு தரிசித்தனர் பலர். எல்லோர் தலைக்கு மேலும் ஓர் அழுத்தத்தை உணர்ந்தனர். அந்தச் சூழல் முழுவதும், ஒருவகையான ஆன்மிக மின்சக்தி ஊடுருவியது.

மிக மெல்லிய தட்டல் வராந்தாக் கதவிற்குப் பின்னால் கேட்டது. உணர்வின் பொங்கிய விம்மலுடன் எல்லோரும் கதவைப் பார்த்தனர். கதவு திறந்தது. மேல் உலகிற்கும் கீழ் உலகிற்கும் இடையே உள்ள கதவும் சேர்ந்தே திறந்ததாகச் சீடர்கள் உணர்ந்தார்கள். ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் தியான அறையில் வந்து அமர்ந்தார்கள். சுமார் முக்கால் மணி நேரம் கூட்டுத் தியானம். அதன் பின் எல்லோரும் ஸ்ரீ அன்னையையும், ஸ்ரீஅரவிந்தரையும் வணங்கினர்.

அருள்வாக்கு



இப்போது நமக்கு வேண்டியவர்கள் என்று சிலரை மட்டும் நினைத்துக் கொண்டு அன்பு செலுத்துகிறோம் அல்லவா? இந்த 'வேண்டியவர்'களை நம் ஊரார், தேசத்தார், உலகத்தார் என்று மேலே விஸ்தரித்துக் கொண்டே போனால், அன்பிலிருந்தே படிப்படியாக அருள் பிறக்கிறது. அப்புறம் இப்படி அருள் பண்ணுகிறவனைப் பொருத்தமட்டில் அது 'அருள்', 'கருணை' என்றெல்லாம் உயர்வு மனப்பான்மையை (superiority complex) காட்டுகிற விஷயமாக இல்லாமல், ஸ்வபாவமான, ஸஹஜமான அன்பாகவே ஆகிவிடுகிறது. ஆனாலும் இந்த அன்பைப் பெறுகிறவர்களோ, அது ஸாதாரணமாக நண்பர்களிடையே, பந்துக்களிடையே இருக்கிற அன்பு மாதிரி இல்லாமல், நல்ல கனிவு பெற்று தெய்விகமான சக்தி பெற்றிருப்பதாக உணர்கிறார்கள். இந்தப் பக்குவமான, திவ்யசக்தி வாய்ந்த, அன்பை 'அருள் அருள்' என்கிறார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ அரவிந்தர் தம் வலதுகையை அன்னையின் கைக்குப் பின்னால் நீட்டினார். அன்னையின் மூலமாக அவர் ஆசீர்வதிப்பதைக் குறிப்பது போல் இருந்தது அந்தச் செய்கை. அன்னையும் அரவிந்தரும் உள்ளே சென்றுவிட்டனர். என்ன அற்புதமான அனுபவம்! அன்றுதான் அதிமனச் சக்தி புவியில் இறங்கியதாக சாதகர்கள் உணர்ந்தார்கள்.

அமெரிக்க அதிபர் வில்சனின் புதல்வி குமாரி வில்சன், ஆன்மிக நாட்டம் கொண்டவர். ஸ்ரீ அரவிந்தரின் 'கீதைக் கட்டுரைகள்' நூலை வாசித்தார். அளவற்ற வியப்படைந்தார். 'என்னையே சரணடை. அஞ்சாதே!' என்ற பகவான் கிருஷ்ணரின் புனிதக் குரல், அவரை மயக்கிக் கொள்ளை கொண்டது. அந்தப் புத்தக வாக்கியங்களின் இடையே கண்ணனின் புல்லாங்குழல் கீதத்தை, குமாரி வில்சனின் உட்செவி கேட்டது. 'இன்றைய வணிக மயமான வாழ்விலும் இப்படி ஒரு நூலை எழுதும் மகான் இருக்கிறாரே' என அவர் ஆச்சரியம் கொண்டார்.

ஸ்ரீ அரவிந்தரை தரிசிக்கும் வேட்கையுடன் புதுவைக்குப் புறப்பட்டு வந்தார். ஆனால்... அவர் வந்த அன்று நிகழ்வதாக இருந்த ஸ்ரீ அரவிந்த தரிசனம், திடீரென நிறுத்தப்பட்டது. கடல் கடந்து வந்த அவருக்குக் கடலளவு ஏமாற்றம்... ஆனாலும் தரிசனம் நிகழாத தன் காரணமறிந்து, தன் மனத்திலேயே ஸ்ரீ அரவிந்தரை தரிசித்துப் புனித உணர்வுகளுடன் விடைபெற்றார் அந்தப் பெண்மணி. தரிசிக்க இயலாததைச் சரியான கண்ணோட்டத்தில் புரிந்து கொண்டார் அவர், என அரவிந்தரும் அன்னையும் பிறகு அவரைப் பாராட்டி எழுதினார்கள்.

அதுசரி. முன்னரே பக்தர்களுக்காகத் தீர்மானிக்கப்பட்ட தரிசனம் நிகழ இயலாத வகையில் அப்படி என்ன நேர்ந்தது?

உலகம் போற்றிய பெருமகனை, தவச் சக்தியும் கம்பீரமும் நிறைந்த ஆன்மிகச் சிங்கத்தை, ஒரு புலி, அதுவும் உயிரில்லாத புலி வீழ்த்த முடியுமா? வீழ்த்தியதே! ஸ்ரீ அரவிந்த அன்பர்களைக் கடும் துயரில் ஆழ்த்திய அந்தச் சம்பவம் 1938 நவம்பர் காலை இரண்டு மணிக்கு நடந்தது...

(அடுத்து இதழில் அமுதம் நிறையும்)



கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது

அமரர் கல்கி பிறந்த நாள் விழா

09.09.2004

(வியாழக்கிழமை)

மயிலை, பாரதிய வித்யாபவன் அரங்கம்

மாலை 6:00 மணி.

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவுப் பரிசும் விருதும் பெறுவோர்:

இளம் இசைக் கலைஞர்கள்

ரஞ்சனி காயத்ரி

தலைமை :

திரு. ஏவி.எம். சரவணன்


மாலை 6:45 மணி: **இன்னிசைக் கச்சேரி**

ரஞ்சனி காயத்ரி	:	பாட்டு
எச்.என்.பாஸ்கர்	:	வயலின்
அருண் பிரகாஷ்	:	மிருதங்கம்
குருபிரசாத்	:	கடம்

அனைவரும் வருக!

கல்கி வழங்கும்
சென்னை ஸ்ரேஞ்
கல்கி ஜன்னலில் ஒரு மின்னல்!
(சென்னை பதிப்புக்கு மட்டும்)

8 பக்கங்கள்
12, செப்டெம்பர் 2004 இதழுடன் இலவச இணைப்பு



“நீங்கள் மிஸ். சவுத் இந்தியா ஆகிவிட்டதால் ஸ்கூலுக்கு வருவது பாதுகாப்பாக இருக்காது. இதனால் நீங்கள் வீட்டிலேயே இருந்து படிக்கலாம்” என்று சமீபத்தில் தென்னிந்திய அழகியான 11வது படிக்கும் ஸ்ரேயா சுதாகரைப் பார்த்து சொல்லிவிட்டது அவரது பள்ளி நிர்வாகம். இதனால் வீட்டில் ஹாயாக இருந்தவரை உங்களுக்காகச் சந்தித்தோம். தெலுங்குப் பெண்ணாக இருந்தாலும் அட்சர சுத்தமாகத் தமிழில் பேசுகிறார் ஸ்ரேயா.

“பத்திரிகைக்காரங்க அழகானவங்க!”

பட்டம் கொடுத்ததினாலேயே நீங்கள் அழகான பெண்ணாகி விட்டீர்களா?

(விழிக்கிறார்) அப்படித்தான் நினைக்கிறேன். இப்போதெல்லாம் கண்ணாடி முன்னால் நிற்கும்போது, அட ஆமா, நானும் அழகிதான் என்கிற நினைப்பு வருது. இருந்தாலும் முதல் கேள்வியே நீங்க இப்படிக் கேட்டிருக்கக் கூடாது. (ஒரு செல்லச் சிரிப்பு)

மிஸ். இந்தியா, வோர்ல்ட் அப்படியே போனா கேமரா, நீச்சல் உடையில் வரச் சொல்வார்களே?

நாம எந்த உடையில் பாதுகாப்பா இருக்கிறோமோ, அதை அணிந்தால் போதும். அப்படியும் எனக்குப் பிடிக்காவிட்டால் அந்தப் போட்டிக்குப் போக மாட்டேன். எனக்கு இப்போ 16 வயது. 18 வயதான பிறகு மிஸ் இந்தியாவாக போட்டியிடுவேன்.

அது ஏன் அழகிப்போட்டிகளில் கேட்கும் கேள்விகளுக்கு அழகான பொய் சொல்கிறீர்கள்?



இல்லைங்க. சுஷ்மிதா சென் மேடையில சொன்னபடி, ஒரு குழந்தையைத் தத்தெடுத்திருக்காங்களே. ஆனா என்னை இது மாதிரியான கேள்விகள் கேட்கவேயில்லை. தப்பிச்சேன்.

உங்களைப் போன்ற பெண்களுக்கு எந்த மாதிரியான ஹீரோ பிடிக்கும்?

‘காக்க காக்க’ பார்த்த பிறகு சூர்யாவோட ஆக்ஷனை ரசிக்க ஆரம்பிச்சிட்டேன். என் வயது பெண்கள் எல்லோருக்கும் எப்பவும் ஆக்ஷன் ஹீரோக்கள் தான் பிடிக்கும்.

உங்கள் அம்மா தலைமுறை வாழ்க்கையோடு உங்களுடையதை ஒப்பிடுங்களேன்.

அந்த காலத்துல சாயங்காலமானா பெண்களை வெளியே விடமாட்டாங்க. என் அம்மாவை சுடிதார் போடவிடலை. சேலைதான் கட்டாய உடையா இருந்திருக்கு. ஆனா இப்போ என்னைப் பாருங்க!

சினிமாவிற்கு யாரோட போவீங்க?

எல்லாம் ஃபேமிலியோட தான். எனக்கு ஏழு கஸின் ப்ரதர்ஸ் இருக்காங்க. அவங்க ஒரு படம் பார்த்துட்டுதான் தங்கச்சியை இதுக்கு கூட்டிட்டுப் போகலாமான்னு முடிவெடுப்பாங்க. அனைவரின் தடுப்பையும் மீறி “நான் பார்த்தே ஆகணும்”னு அடம்பிடிச்சி போன படம் கில்லி!

ஏழைகளால் அழகாகவிருந்தும் மாடலிங், ஃபேஷன் உலகத்திற்குள் நுழைய முடியவில்லையே?

வெள்ளைத் தோல் இல்லாததாலயும், நல்ல உணவு சாப்பிட்டு ஹெல்தியா இருக்க முடியாததாலும், அவங்களால இந்த ஃபீல்டுக்குள் மிளிர முடியலை! இதோடு அவர்களுடைய பணத் தேவையை மற்றவர்கள் தவறாகப் பயன்படுத்தவும் வாய்ப்புண்டு.


அழகியாயிட்டீங்க. அப்ளிகேஷன் நிறைய வந்திருக்குமே?

அப்ளிகேஷனா? (புரியாமல் விழித்தவருக்கு அவரது அம்மா எடுத்துரைக்கிறார்) ஆ! கிடையவே கிடையாது. என் அண்ணா என் ஸ்கூல்லயே படிக்கிறதால பொண்ணுங்களே என்கூட பேச பயப்படுவாங்க. இதுல பசங்க வேற வந்து தைரியமா லவ் லெட்டர் கொடுக்கப் போறாங்களாக்கும். நோ சான்ஸ்.

சரி, உங்கள் பார்வையில் யார் உண்மையான அழகு?

உங்களை மாதிரியான பத்திரிகைகாரர்கள் தான்! முப்பது பேர் அழகிப் போட்டியில கலந்துகிட்டாலும் ஃபைனலுக்கு முன்னாலேயே யூகிச்சு என்னை ஃபோகஸ் பண்ணி நல்ல பப்ளிசிட்டி கொடுத்தாங்க. இத்தனைக்கும் நாங்க ஒரு காபி கூட யாருக்கும் கொடுத்ததில்லை. முகமா முக்கியம்? நல்ல மனசுள்ளவங்கதான் எப்பொழுதும் அழகானவர்கள். இல்லையா?

ச.ந. கண்ணன்



'21-ஆம் நூற்றாண்டின் புதிய தொழில் வாய்ப்பு! வாழ்வில் சம்பாதித்து உயரத் துடிப்பவரா நீங்கள்? உடனே இந்த .... எண்ணுக்குத் தொடர்பு கொள்ளுங்கள். இந்த ஃபோன் கால் உங்கள் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமையும்.'

இது போன்ற வாசகங்களைக் கொண்ட 'பளிச் பளிச் ஃப்ளோரசண்ட் கலர்' விளம்பரங்கள் சென்னை மாநகரின் மூலை முடுக்கெல்லாம் ஒட்டப்பட்டுள்ளன. இது எல்லார் கண்ணிலும் படும். ஆனால் பலர் அலட்டிக் கொள்வதில்லை. சிலர் அகப்பட்டுக் கொள்கிறார்கள். யார் இந்தச் சிலர்?

சொந்த ஊருக்கு அருகில் கிடைத்த காலேஜில் தட்டுத்தடுமாறி படித்து முடித்து, வேலை தேடி நமது சிங்காரச் சென்னைக்கு வரும் பட்டதாரி இளைஞர்கள்தாம் அந்த சிலர். ஞாயிறு புதன் தினத்தந்தியைப் புரட்டிப் புரட்டி, இன்டர்வியூவுக்குச் சென்று, வெறுங்கையுடன் திரும்பி, சலித்துப் போன இளைஞர்கள்தான் இந்த விளம்பர ஆசாமிகளின் முக்கிய இலக்கு. 'எந்தத் தின்னாம் பித்தம் தெளியும்' என்று அலையும் இளைஞர்கள் இந்த வசீகர வார்த்தைகளை நம்பிச் சென்று அவர்களது வஞ்சக வலையில் விழுந்து, ஏமாந்து போகின்றனர். பணத்தை இழக்கின்றனர் - உழைப்பை இழக்கின்றனர். கல்வி, அதாவது ஒரிஜினல் சர்டிஃபிகேட்டுகளை இழக்கின்றனர். ஏன் நம்பிக்கையை இழந்து இறுதியாக வாழ்க்கையையே தொலைத்து விடுகின்றனர்.

இது போன்ற விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு கேட்டபோது, "ரிசூட்டிங்ல ஜாயின் பண்ணணுமா?" என்று எடுத்த எடுப்பிலேயே கேட்டார் அந்தப் பெண்மணி. ஆம் எனக் கூறிவிட்டு, இந்த வேலை பத்திச் சொல்லுங்களேன் என்றோம்.

"ஜாப் ரொம்ப ஈஸியா இருக்கும். பார்ட் டைம் ஜாப்தான். ரொம்ப கம்ஃபர்டபிளா இருக்கும். No marketing job. நீங்க என்ன படிச்சிருக்கீங்க?" (B.Sc., Physics)ங்க "முடிச்சு எத்தனை வருஷம் ஆச்சு?" (ரெண்டு வருஷம் ஆச்சு) பரவாயில்லீங்க! "கவலையே படாதீங்க. வாழ்க்கைல தைரியம்தான் முக்கியம். சுமார். சியர் அப்! எப்போ வரீங்க?" (உடனே வர்றேன்...) "மந்தைவெளி பெட்ரோல் பங்க் பக்கம் வந்து இதே போன் நம்பருக்கு 'கால்' பண்ணுங்க. நானே நேர்ல வந்து கூட்டிட்டுப் போறேன்! ஓகேவா?" என்று படு சாமர்த்தியமாகப் பேசினார்.

அதன்படியே நாம் அந்த இடத்துக்குச் சென்று ஃபோன் செய்ய, "வந்துட்டீங்களா? தோ.. வந்துடறேன்!" என்றவர்தாம் ஒரு மணி நேரம் ஆகியும் வரவில்லை. சுதாரித்து விட்டாரா! அல்லது மறந்து விட்டாரா! ஒன்றுமே புரியவில்லை. மீண்டும் ஃபோன் செய்தால் பதிலில்லை.



இது போன்ற 'இன்டலக்சுவல்'(?) ஆசாமிகளிடம் ஏமாந்த மதுரைக்காரர் ஒருவர் நம்மிடம் சிக்க, அவர் கொடுத்த தகவல் ரொம்ப வித்தியாசமாக இருந்தது.

"இந்த விளம்பரத்தைப் பாத்துட்டு போன் பண்ணினேன். நேர்ல வரச் சொன்னாங்க. 5000 ரூபா அட்வான்ஸ் கட்டுங்க. நாங்க ஒரு Data conversion பேக்கேஜ் தருவோம். அதுல இருக்கிற டேட்டாவ கம்ப்யூட்டர் மூலமா கரெக்ட் பண்ணி தாறணும். அதனோட அக்யூரசி பர்சன்டேஜ்படி உங்களுக்குப் பணம் செக்கா வீட்டுக்கு வரும். கரெக்ட் பண்ணின டேட்டாவை நேரடியா எங்க ஹெட் ஆஃபீஸ் E-mail Idக்கே அனுப்பிடலாம் என்று கூறி ரொம்ப அழகா பேசி, கையெழுத்தெல்லாம் வாங்கிட்டு சிடியைத் தந்தாங்க. நானும் அதை முடிச்சு ஹெட் ஆஃபீஸுக்கு அனுப்பினேன். அத்தோட சரி. இங்க இருந்த ஆளு எங்க போனாருன்னே தெரியல. ஹெட் ஆஃபீஸ்ல பேசற மொழி நமக்கும் புரியல. போகட்டும் சனியன்னு நினைச்சுக்கிட்டேன்" என்றார் விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு.

இதுகுறித்து பொதுநல ஆர்வலரும் CAG-யின் எக்ஸிக்யூட்டிவ் ஆர்டினேட்டருமான பாரத் கூறுகையில், "இந்த மாதிரி அட்வர்டைஸ்மெண்ட் செய்ய எல்லாருக்குமே உரிமையிருக்கு. ஆனால் சில விளம்பரம் தந்திருக்கிற முறையே எல்லாருக்குமே சந்தேகம் வர மாதிரியே இருக்கும். அப்படி இருந்தும் சில பேர் முறைப்படி விசாரிக்காம, போய் மாட்டிக்கறாங்க. இதுக்கு அந்த ஏஜென்ஸியையோ கம்பெனியையோ மட்டும் குறை சொல்லக் கூடாது. ஒவ்வொருத்தருக்கும் காமன்சென்ஸ்னு ஒன்னு இருக்கு. அதை யூஸ் பண்ணி நாம தான் நம்மளைப் பாத்துக்கணும். அதை விட்டுட்டு போன் பண்ணினோம் - நேர்ல வரச் சொன்னாங்க, மூளைச் சலவை பண்ணிட்டாங்க, ஏமாத்திட்டாங்கன்னுல்லாம் புலம்பறது வேண்டாம். இதுக்கு CAG என்ன சொல்லுதுன்னா, எந்த விஷயத்தையும் ஃபீல்டுல இறங்கி தெளிவா செக் பண்ணுங்க. பல பேர் கிட்ட விசாரிங்க - அப்புறம் என்ன முடிவு வேணுன்னாலும் அதை காமன்சென்ஸோட எடுங்க" என்று முடித்துக் கொண்டார்.

இவர்களது கவர்ச்சி மிகு வாசகங்களை நாம் உன்னிப்பாகக் கவனித்தால் மேலும் ஓர் உண்மை புலப்படும். அதாவது ஆங்கிலத்தில் பேச அவசியமில்லை என்பது. இன்றைய இளைஞர்கள் பலரது மிகப் பெரிய குறைபாடே இதுதான். "எங்கு அடித்தால் எப்படி வலிக்கும்" என்ற வித்தையில் கைதேர்ந்த இதுபோன்ற உட்டாலக்கடி ஆசாமிகளின் வலையில் விழாமல் இருக்க, அடுத்தவர்களின் அறிவுரை தேவையில்லை. சுயபுத்தி இருந்தால் போதும்னு நாங்க சொல்றோம். என்ன சரிதானே!

இரா. முத்துக்குமார்

இவரே ஒரு புத்தகம்!

எப்படி இன்னென்னாரென்றும் தெரியவில்லை. விம்கோ ரெக்கார்ட்ஸாம் இவரை இத்தனை நாள் விட்டு வைத்தார்கள் என்று.

மைலாப்பூர் பஸ் நிலையம் அருகேயுள்ள நடைபாதையில் 1954 முதல் இன்று வரை பழைய புத்தகக் கடை வைத்திருக்கிறார் ஆழ்வார். அணு அணுவாக மயிலாப்பூரின் வளர்ச்சியை இந்த நடைபாதை பின்னணியிலிருந்து கண்டு வந்திருக்கிறார் இவர்.



சென்ற வருடம் தமிழக அரசு அதிரடி நடவடிக்கை எடுத்து, இவரிடமுள்ள ஒன்றரை லட்சம் புத்தகங்களை கார்ப்பரேஷன் லாரியில் வாரிப் போட்டுச் சென்ற பின்பும், தில்லாக மீண்டும் அதே இடத்தில் லட்ச ரூபாய் புத்தகங்களை மலைபோல் குவித்திருக்கிறார். "இதுவரை என் மீது எந்த சிப் மினிஸ்டரும் கை வைத்ததில்லை தெரியுமா? அண்ணா துரை, ராஜாஜியெல்லாம் என்னிடம் வந்து புத்தகங்கள் வாங்கியவர்கள், ஆமா." பதிலில் ஒரு 'மிடுக்'.

ஆற்காடு நவாப், ஐகோர்ட்டின் முதல் நீதிபதி, கல்கி கிருஷ்ணமூர்த்தி, இங்கு வந்து 'பேசும் படம்' வாங்கிச் சென்ற இளவயது கமல்ஹாசன்... என்று விடிய விடிய பழங்கதை பேசச் சொன்னாலும் தயாராக இருக்கும் இவரிடமே பாராட்ட வேண்டிய பக்கங்கள் ஏராளமாய் உண்டு.

ஸ்ரீ ஷிவ் செந்தில்



• பன்னீர்செல்வம்

சாக்கடைக்குப் போகும் பல கோடி ரூபாய்!

எப்படி பல கோடி ரூபாய்களை சாக்கடையில் போடுவது என்பது குறித்து அண்ணா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மும்முரமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் அதிகாரிகளுக்கு பயிற்சி வகுப்புகள் எடுத்து முடித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு வீட்டிலிருந்தும் கழிவு நீரை வரவழைத்து, அதனை சுத்திகரித்து எஞ்சியிருக்கும் கழிவுகளை உரமாக மாற்றுவதற்கான வழிமுறைகளைப் பற்றியது இவ்வகுப்புகள்.

நாம் நினைப்பது போல் இது அவ்வளவு சுலபமான பணியல்ல என்பதே உண்மை. இல்லையென்றால் பேராசிரியர்கள் இதற்காக வகுப்பெடுப்பார்களா?

பிரத்தியேக தொழில் நுட்பமும், செயல்திறனும் தேவைப்படும் மிகப் பெரிய பணி இது என்கிறார் பேராசிரியர் பன்னீர் செல்வம். இதற்கென்றே நில அமைப்புகளைப் பற்றிய சில ஆய்வுகளும் மேற்கொள்ள வேண்டியிருக்குமாம்.

போதிய வசதிகள் இல்லாததால், முன்பெல்லாம் தகவல்கள் சேகரிக்கவும், வரை படங்கள் தயாரிக்கவும் அதிக காலம் தேவைப்பட்டது. இப்பொழுது இந்தப் பிரச்னை இல்லை என்கிறார் பன்னீர்செல்வம்.

மெனக்கெட்டு சில மென்பொருள் வகையறாக்களை இவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். விரைவில், பல கோடி ரூபாய் செலவில் சுத்திகரிப்பு வசதிகளை அரசு நிறுவப் போகிறது.

மனித ஆற்றலும் தொழில் நுட்பமும் கைகோத்து செய்யப் போகும் இந்தப் பணி சென்னையை சிங்காரமாக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

• மருதன்

ரப்ச்சர் பண்ணாத ரப்பாணி!

சென்னையின் பரபரப்பான ஏரியாக்களுள் ஒன்று ராயப்பேட்டை டாக்டர் பெசன்ட் ரோடு. அதற்குக் காரணம், டாக்டர் சையது சத்தாரின் ரப்பானி வைத்தியசாலை. "இவ்ளோ கூட்டம் வர்ற அளவுக்கு அப்படி என்ன சாதிச்சுட்டீங்க?" என்று சத்தாரைச் சீண்டினோம்.

"தம்பி! தீர்க்கவே முடியாத நோய்கள்னு WHO வெளியிட்டிருக்கிற லிஸ்ட்டில் இருக்குற சோரியாசிஸ் எனும் சருமநோய் மற்றும் ஆஸ்துமாவுக்கெல்லாம் யுனானி முறைல நான் மருத்துவம் பார்த்து சரி பண்ணியிருக்கிறேன். சைனஸ் போன்ற வியாதிகளுக்கும் யுனானியில தீர்வு இருக்கு. நான் யாரையும் ஏமாத்த விரும்பாதவன். அதற்கு உதாரணம்



நான் AIDS, CANCER போன்ற வியாதிகளுக்கு நான் மருத்துவம் பார்ப்பதில்லை என்பது. எங்க மருந்து எந்த சைடு எஃபெக்டையும் தந்து உபத்திரவம் பண்ணாது. மத்தபடி நான் சாதனை எதையும் செஞ்சுட்டதா சொல்றதுக்கு கிடையாது" என்று சாந்தமாக பதிலளித்தார் டாக்டர் சத்தார்.

(பின்ன ரொம்ப ரீசனபிள்னு சொல்றீங்க. அது என்னன்னு கடைசி வரைக்கும் சொல்லமாட்டேன்னுட்டாங்களே) முத்து





டாக்கீஸ் டாக்

இது 'குளுகுளு' சீஸன்!

'ஆட்டோகிராஃப்', 'கில்லி'க்குப் பிறகு தமிழ் சினிமாவின் ஸ்பீடு கொஞ்சம் இறங்கித்தான் உள்ளது. அடுத்த இரண்டு மாதத்தில் தீபாவளி சரவெடிகள் வெடிக்க இருப்பதால் பாதுகாப்பாக செப்டம்பர் சீஸனிலேயே ரிலீஸ் ஆக பல படங்கள் முந்திக் கொண்டிருக்கின்றன. அவற்றின் ட்ரெய்லர்கள் இதோ:

செல்லமே: நடிப்பு- விஷால், பரத், ரீமாசென், மும்தாஜ், விவேக்.

திருமணமான விஷால் - ரீமா சென் தம்பதிகளிடையே இளவயது பரத் பிரச்னை உண்டு பண்ணுகிறார். இறுதியில் புராண காலத்து சீதையாக ரீமாசென் மாறி பரத்தின் வஞ்சகத்தை அழிக்கிறார்.

எதிர்பார்ப்பு: மணிரத்னம், ஷங்கர் படங்களின் ஸ்டைலில் பக்காவாக டெக்னிக்கல் டீம் கை கோத்திருக்கிறது. ஹாரிஸின் இசையும் ரீமாசென்னின் கவர்ச்சிப் படங்களும் படத்தின் மெகா சைஸ் விசிட்டிங் கார்டு. படம் ஜெயித்தால் காந்திகிருஷ்ணா என்கிற கனவு இயக்குனர் வெளிப்பட வாய்ப்புண்டு.

ரிலீஸ்: செப்டம்பர் 10ம் தேதி

மன்மதன்: நடிப்பு - சிம்பு, ஜோதிகா, மந்திரா பேடி, யானா குப்தா

கதை: சிம்பு இரட்டை வேடத்தில் நடிப்பதை ரகசியமாக வைத்திருக்கிறார்கள். தலைப்பிற்கு ஏற்றாற் போல் பல பெண்களிடம் சகவாசம் வைத்திருக்கும் கேரக்டரில் தமிழ் சினிமா கண்டிராத ஒரு ஸ்டைலிஷான கதையை எழுதியிருக்கிறார் சிம்பு.

எதிர்பார்ப்பு: கதை, திரைக்கதை தனி ஆளாய் அத்தனையும் மெனக்கெட்டு செய்வதால் வெற்றியோ தோல்வியோ அனைத்தும் சிம்புவைதான் பாதிக்கும். உள்ளூர் நடிகைகளையெல்லாம் விட்டு மும்பை மந்திராபேடி, யானா குப்தா இருவரையும் கொத்தி வந்தது இண்டஸ்ட்ரிக்குப் பெரிய ஆச்சர்யம்!

ரிலீஸ் தேதி: செப்டம்பர் 24.

7ஜி ரெயின்போ காலனி: நடிப்பு - ரவிகிருஷ்ணா, சோனியா அகர்வால்.

கதை: இயக்குனர் செல்வராகவன் கே.கே.நகரில் வாழ்ந்த வாழ்க்கையின்... திரைவடிவம். இதிலும் ஹீரோ சற்று வித்தியாசமான மனிதர். உதாரணம்: மவுண்ட் ரோட்டில் 'சோ'என மழை. உயரமான விளம்பர பேனரில் வரையப்பட்ட ஒரு குடும்பம் நனைந்து கொண்டிருக்கிறது. ஹீரோவிற்கு இதைப் பார்த்தவுடன் படபடக்கிறது. உடனே ஓடிப்போய் பேனர் மேலேறி விளம்பரத்திற்குக் குடை பிடிக்கிறார்!

எதிர்பார்ப்பு: தனுஷ் இல்லாமல் இயக்குனர் செல்வராகவன் பண்ணும் முதல் படமிது. 'அடுத்த மணிரத்னம்' என்கிற எதிர்பார்ப்பை ஈடு செய்ய வேண்டிய கட்டாயத்திலிருக்கிறார். யுவனின் பாட்டு செம ஹிட்டு.



ரிலீஸ் தேதி: செப்டம்பர் 24.

கஜேந்திரா: நடிப்பு - விஜயகாந்த், லயா

கதை: தெலுங்கில் சூப்பர் டூப்பர் ஹிட்டான 'சிம்மாத்ரி' படத்தின் சூடான ரீமேக் இது. எதிரிகளை சூரசம்ஹாரம் செய்யும் டிபிகல் விஜயகாந்த் படம். என்ன இந்தமுறை கொஞ்சம் காரம் தூக்கலாக இருக்கும்.

எதிர்பார்ப்பு: நன்றி ராமதாஸ். படத்திற்கு இது வரைக்குமில்லாத எதிர்பார்ப்பினால், சந்தோஷத்தில் கரைந்திருக்கிறார் விஜயகாந்த். இன்னொரு 'பாட்ஷா' தருவாரா என்ற கனவில் சுரேஷ் கிருஷ்ணாவிற்கு கிடைத்திருக்கும் இன்னொரு படம்.

ரிலீஸ் தேதி: செப்டம்பர் 10.

எம். குமரன் S/o மகாலெட்சுமி: நடிப்பு - ரவி, அசின், நதியா

கதை: 'ஜெயம்' ரவி அடுத்தாக நடிக்கும் இன்னொரு தெலுங்கு ரீமேக். தாயன்பையும் காதலையும் கலந்துகட்டி அடிக்கும் படம்.

எதிர்பார்ப்பு: 'ஜெயம்' வெளிவந்து ஒருவருடமாகி விட்டது. இந்த கேப்பில் தனுஷ், சிம்பு இருவரும் எங்கோ சென்று விட, மெல்ல அடியெடுத்து வைக்கிறார் ரவி. இவரைக் காட்டிலும் அசினுக்கு மலர்ப்பாதை அமைக்கப் போகும் படம் என்கிறது யூனிட்.

ரிலீஸ் தேதி: செப்டம்பர் 18.

இது தவிர ஏய், போஸ், அரசாட்சி, ட்ரீம்ஸ் போன்ற இதர படங்களும் வரிசையில் நிற்கின்றன. ஆனால் மேலே சொல்லப்பட்ட தேதிகளில் அந்தந்தப் படங்கள் ரிலீஸானால் தமிழ் சினிமா சுபிட்சமாக இருப்பதாக உணரலாம்.

கண்



ஒரு தமிழ் சினிமாவில் நடிக்கும் அனைத்து புது நடிகையும் "சார், படத்தில் எனக்கு எத்தனை சீன்?" என்று தான் இயக்குனரைக் கேட்பார்கள். ஆனால் பூவான 'பூஜா' அந்த ரகம் இல்லை. "நான் பெங்களூரில் வசித்தாலும் தமிழ்ப் பாடல்களைக் கேட்பதும் பார்ப்பதும் என்றால் அத்தனை இஷ்டம். அதனால் நான் நடிகையான பின்பும் இதே ஆசைதான் நீடிக்கிறது. பாடல்களில் என்னை அழகாகக் காண்பித்து முக்கியத்துவம் கொடுத்தால் போதும். என் கால்ஷீட் உங்களுக்காக எப்பவும் தவம் கிடக்கும்" என்கிறார் கூலாக. சரி சரி, இதனால்தான் 'ஷாக்' வாய்ப்பு மிஸ்ஸாகிச் சென்றது என்றெல்லாம் நீங்கள் கற்பனை செய்து கொள்ளாதீர்கள்.

தமிழுக்கா?

மீண்டும் அரிவாள், கத்தி, கபடா (நாளை டிஆரிடம் மாட்டி முழிக்கப் போகும்) மும்பை அழகிகள் என தமது படைபரிவாரங்களோடு களமிறங்கி விட்டார் டிஆர். 'வீராசாமி'க்காக. "தமிழ்ப் பற்றுள்ள நான் எதற்காக அன்று மும்தாஜ், இன்று மேக்னா நாயுடு போன்ற மும்பை கதாநாயகிகளை என் படத்தில் அறிமுகப்படுத்துகிறேன் தெரியுமா? இதோ இன்று மும்தாஜ் சரளமாக தமிழ் பேசுவது போல், நாளை மேக்னாவும் தமிழ் பேசுவார். தமிழ் தெரியாதவர்கள் கூட தமிழ் பேசுவதற்கான என் சிறு முயற்சிதான் இது" என்று ஆவேசமாகப் பேசினார் வீராசாமி தொடக்க விழாவில். சார், இந்த ஒரு காரணத்திற்காக மட்டுமா மும்தாஜைக் கூட்டி வந்தீர்கள்? டிஆருக்கு எப்பவும் குறும்புதான்.



• மேக்னா நாயுடு

ஒரு ஆவேசத்தில் தனது இரண்டாவது படத்திற்கு 'சொல்ல மறந்த கதை' என்று பெயரிட்ட தங்கர்பச்சான் போல அனைவரும் மூக்கில் விரல் வைக்கும்படி ஹீரோவாக அவதாரம் எடுத்திருக்கும் விவேக், அனைத்து ஹீரோக்களும் மேனேஜ் சொல்வது போல் 'சொல்லி அடிப்பேன்' என்று தனது முதல் ஹீரோயிஸ படத்திற்குப் பெயரிட்டுள்ளார். ஊரிலுள்ள அத்தனை கதாநாயகிகளும் ஜகா வாங்கிவிட, இறுதியில் தேர்வானது 'மன்மத ராணி' சாயாசிங்.

தூரிகையில் உயிர் ஊற்றி..



ஓவியர் சில்பியின் பாசறையில் பட்டை தீட்டப்பட்ட ஓவியர் பத்மவாசனின் தூரிகைப் படைப்புகள் மியூசிக் அகாடமியில் 'GAJANANAM' என்ற பெயரில் கண்காட்சியாக மிளிர்கின்றன. கண்காட்சிக்கு குத்து விளக்கு ஏற்ற வந்த வாணி ஜெயராம், ஓவியங்களில் உருகிப் போய் உதிர்த்த வார்த்தைகள்: "ஓவியங்களின் ஒவ்வொரு புள்ளியிலும் கலை பிரகாசிக்கிறது. பத்மவாசன் தன் தூரிகையினால் உயிர்கொண்டு இவற்றைப் படைத்திருக்கிறார். அதுவும் கறுப்பு - வெள்ளை ஓவியங்களைப் பற்றி எப்படி வர்ணிக்க!! ரொம்ப அற்புதமாக இருக்கு" என வியந்தார். இந்தக் கண்காட்சி செப்டெம்பர் 10 வரை மியூசிக் அகாடமியில் நடைபெறும்.

✍ ஸ்வரா

"அஞ்சு ஜார்ஜ் தமிழ்ப் பெண்களிடம் பேசமாட்டார்!"

ஒலிம்பிக்கில் எதிர்பார்த்த அஞ்சு ஜார்ஜும் லாங் ஜம்ப்பில் கோட்டை விட்டு விட்டார். அடுத்தது யார்? இக்கேள்விக்கு விடையாக வந்து நிற்கிறார் 18 வயது ரேவதி.

படிப்பு: எம்.பி.ஏ. வைஷ்ணவாவில் பி.காம் இரண்டாவது வருடம். ஆனா அத்லெட்டா இருக்கிறதால, மழைக்கு கூட காலேஜ் பக்கம் போக மாட்டேன். இது எப்படி இருக்கு!

சாதனை: அஞ்சு ஜார்ஜின் லாங் அண்ட் ட்ரிபிள் ஜம்ப் ஜூனியர் சாதனைகளை முறியடித்தவள் நான். சமீபத்தில் கொரியாவில் நடந்த போட்டியில் இரண்டு பிரிவுகளிலும் தங்கம் வென்றவள். கலக்குறேன் இல்லே.

(அசைவ மேட்டர்: அத்லெட் சைவமா இருந்தா எப்படியாவது அவங்களை அசைவத்திற்கு மாத்திடுவாங்க. என்னாலயும் ரெண்டு வருஷம் தான் தாக்குப் பிடிக்க முடிஞ்சது.

வேதனை: தமிழ்நாடு அணி சார்பாக போட்டிக்கு ட்ரெயினிங் போறவங்களை அம்மிச்சுட்டு கூட்டிட்டுப் போறாங்க. இது லேயே ரெண்டு நாள் பிரயாணம் பண்ணா, எங்க போய் மெடல் வாங்க முடியும்? அப்புறம் தமிழ்நாடு ப்ளேயர்ஸ்னாலே வட இந்தியர்கள் நிறைய சதி பண்றாங்க.

அஞ்சு ஜார்ஜ்: இவங்களோட பேசியிருக்கியான்னு நிறையப் பேர் கேக்கறாங்க. ஆனா உண்மை என்னன்னா, இவங்க மலையாளிகளிடம் தான் எப்பவும் பேசுவாங்க. ஊக்கப்படுத்துவாங்க. எங்களை அவ்வளவா கண்டுக்க மாட்டாங்க. (தமிழக அரசு இதுவரை அஞ்சு ஜார்ஜுக்கு 50 லட்சங்கள் வரை பரிசு அளித்துள்ளது!)



ஒலிம்பிக் மெடல்: ஐ! ஆசை தோசை அப்பள வடை. முதல்ல இந்த அரசியல்வாதிகளை ஒழிங்க. அப்புறம் பாருங்க, எத்தனை தங்க மெடல்களை வாங்குறோம்.

செல்போன் ரிங்டோன்: கலக்கப் போவது யாரு? நீதான்!

📷 + ✍ கண்ணன்

தூள் க்ளிக்



இதுதாங்க உண்மையான கட்டிப்புடி வைத்தியம்!

மருந்து மாத்திரைகளால் மட்டுமே எந்தவொரு நோயாளியையும் குணப்படுத்தி விட முடியாது! அன்போடு அரவணைத்து ஆதரவளித்து, கைப்பிடித்து வெளியுலகைக் காட்டினாலே போதும். 'வெயிட் வெயிட்' என்ன 'வசூல்ராஜா' கதை சொல்கிறீர்களா?' என்கிறீர்களா? இது நிச்சயம் கதையல்ல நிஜம்தான்.

மனவளர்ச்சி குன்றியவர்களிடம் கூட சிறிது இரக்கமில்லாமல் ஆயிரம், லட்சம் என பணம் பிடுங்கும் குரூரமான டாக்டர்களுக்கு மத்தியில், என்ன பாவம் செய்தோமோ என்று ஐக்யூ குறைவான, சத்தம் கேட்காத, தூக்கம் தெரியாத, பார்வையை உணராத... என கடவுளின் 'விசேஷ' குழந்தைகளைப் பெற்றெடுத்தவர்களின் அகங்களில் நாளடைவில் நம்பிக்கையை மலரச் செய்து வருகிறது ராஜா அண்ணாமலைபுரத்திலுள்ள ஐக்யா என்கிற பள்ளி.

இதன் இயக்குனர் பார்வதி விஸ்வநாதனின் இளைய மகனுக்கு 'டவுன் சின்ட்ரோம்' என்ற மனவளர்ச்சியற்ற நோய் தாக்க, அன்று முதல் இதுபோன்ற நிலையிலுள்ள குழந்தைகளையும் தமதாக்கிக் கொண்டு, கடந்த பதினான்கு வருடங்களாக இப்பள்ளியை அரசின் எவ்வித உதவியுமின்றி தம் சொந்தக் காசிலும் கருணையுள்ள உள்ளங்களின் கொடையிலும், பல சிரமங்களினூடே நடத்தி வருகிறார்.

இங்கு 30 குழந்தைகள். அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க எட்டு டீச்சர்கள். முதலில் வண்ணங்களாலான பொம்மைகளைக் காட்டியும், விதவிதமான ஒலியெழுப்பியும் பாதிக்கப்பட்ட சிறார்களின் உணர்வுகளைத் தூண்டுகிறார்கள். பாடங்களோடு விளையாட்டும் தொழிற்பயிற்சியும், கூடவே கம்ப்யூட்டர் பயிற்சியும் நாளடைவில் கற்றுத் தரப்படுகின்றன.

"எத்தனையோ டாக்டர்களிடம் ஏமாந்து, பிறகு இங்க என் பையனை கூட்டிட்டு வந்தேங்க. இப்போ அவன் கூப்பிட்டா திரும்பறாங்க. நைட் நல்லா தூங்கறாங்க" என்று ஒரு தாய் உணர்ச்சிவசமாக நன்றி நவில்கிறார். பெருக்கெடுத்த கண்ணீருக்கு இமைத் திரை போட்டு கைகூப்பி விடை பெற்றோம்.

(தொடர்பு கொள்ள: 24938443 / 9840067975)



📷 + ✍ எழில்

குழந்தையின் கண்கள் வேண்டுமா?



புத்தகங்களுக்குள் அடங்கி விடாத உலகம் ஒன்று இருக்கிறது. அந்த உலகத்தைத் தெரிந்து கொள்வதில் நம்மை விட குழந்தைகளுக்கே அதிக ஆர்வம். கண்களை விரித்தபடி அவர்கள் கேட்கும் கேள்விகள் பல, நம்மை சலிப்படையவே செய்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும், ஒவ்வொரு உயிரும், ஒவ்வொரு பொருளும் அவர்களுக்கு ஆச்சரியம்தான். ஒவ்வொன்றையும் அவர்கள் கேள்விகளால் அணுகுகிறார்கள்.

ஜே. கிருஷ்ணமூர்த்தியின் அணுகுமுறையும் கிட்டத்தட்ட இப்படித்தான். அவர் குழந்தைகளுக்காக நிறைய சிந்தித்திருக்கிறார். அசோகர் மரம் நட்ட சரித்திரத்தையும், நியூட்டனின் புவியீர்ப்பு விதிகளையும், இன்னபிற சங்கதிகளையும் கண்களை மூடிக் கொண்டு உருப்போட்டு விடுவது தான் கல்வி என்றும், அதைக் கற்பதினால் கிடைப்பதுதான் அறிவு என்றும் அவர் ஏற்றுக் கொண்டதில்லை.

நேற்றைய கண்களோடு இன்றைய உலகைப் பார்ப்பதில் அவருக்கு உடன்பாடில்லை. வேறொருவரின் - அவர் எவ்வளவு பெரிய அறிஞராக இருந்தாலும் சரி - கருத்துகளைச் சுமந்து கொண்டு நம்முடைய வாழ்க்கையை, பிரச்னைகளை நாம் அணுகும் முறையை அவர் எதிர்க்கிறார். உயிரற்ற கோட்பாடுகளின் மூலமும் தத்துவங்களின் மூலமும் துடிப்பான நமது சூழலை புரிந்து கொள்ள முடியாது என்பது இவரது நம்பிக்கை.

கிருஷ்ணமூர்த்தி ஃபவுண்டேஷன் சார்பில் ஜே.கேயின் மூன்று புத்தகங்களை வெளியிட்டு, இன்றைய கல்வி முறையிலுள்ள சில சிக்கல்களை ஆராய்ந்தார் அனந்தமூர்த்தி. இது குறித்த ஜே.கே.யின் பங்களிப்பையும் அவர் நினைவூட்டினார்.

உலகத்தைப் பற்றி எதற்காகத் தெரிந்து கொள்ள வேண்டும்?




எழுத்தாணி

அபேகஸும் அல்ஜீப்ராவும் கம்ப்யூட்டரும் போதாதா என்று கேட்கும் பெற்றோர்கள் ஜே.கேயின் புத்தகம் ஒன்றை படித்து விடுவது சிறந்தது. அப்படி செய்தால் குழந்தைகள் கேட்கும் கேள்விகள் அவர்களைச் சலிப்படையச் செய்யாது. ஆச்சரியத்தையே வரவழைக்கும். குழந்தைகளின் கண்களை நாம் பெற முடியாதா என்ற ஏக்கமும் பிறக்கும். எல்லாவற்றையும் முதலிலிருந்து ஒருமுறை ஆராய்ந்து பார்த்து விடலாமா என்ற குறுகுறுப்பு ஏற்படும்.

குழந்தைகளோடு சேர்ந்து கொண்டு பட்டாம்பூச்சியையும் மரத்தையும் மனிதர்களையும் ஆச்சரியமாக முதன் முதலாக பார்ப்பது போல் பார்க்கத் தோன்றும்.

✍ மருதன்



யூத் கடல்!

கேர்ள் ஃப்ரெண்ட்ஸ் பிடிப்பது எப்படி என்று அண்ணா பல்கலைக்கழகத்தில் டிப்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் சில மாணவர்கள். அதுவும் வகுப்பறையில். அதுவும் மேடையில் நின்று கொண்டு. நோட்ஸ் எடுக்காத குறையாக சுற்றிலும் பலர் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தனர்.

இங்கே என்ன தான் நடக்கிறது என்று விசாரித்தால், சிரிக்கிறார் சீனியர் அமர்நாத்.

"பொதுவா, எல்லா காலேஜ்லயும் ஃபர்ஸ்ட் இயர் ஸ்டூடன்ட்ஸை எல்லாரும் ராகிங் செய்வாங்க. நாங்க வித்தியாசமா அவர்களை என்கரேஜ் பண்ணி, இது போல பெர்ஃபார்ம் செய்யச் சொல்றோம்" என்கிறார். அட, வித்தியாசமா இருக்கே!

ஃப்ரெஷ்ஷாக சிரித்துக் கொண்டிருந்தார்கள் ஃப்ரெஷ்ஷர்கள்.

"ராகிங்கைவிட இது ஜாலியா இருக்கு!" என்கிறார் வைஷ்ணவி.

"இதே மாதிரி க்ளாஸஸ் நடத்தா நாங்க கட் அடிக்கவே மாட்டோம்" என்று சத்தியம் செய்தார் அனிதா. இவரது குரல் சற்று 'கீச் கீச்'என்று இருக்கும் என்பதால், இவருக்கு "பச்சைக் கிளி பச்சையம்மா" என்று பெயர் கொடுத்து விட்டார்களாம்.

இவரும் இவரது தோழி ரேஷ்மாவும் சேர்ந்து கன்னன் படத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஜன்னி வராத குறையாக அலறியடித்துக் கொண்டு முக்கால்வாசி படத்தோடு ஓடி வந்து விட்டார்களாம்.

"நானாவது பரவாயில்லீங்க. ரேஷ்மாவுக்கு சுத்தமா தமிழே தெரியாது. பாவம் இன்னிக்கு க்ளாஸுக்குக் கூட வரல" என்று வருத்தப்பட்டார்.

லாவண்யாவிற்கு மொத்தம் 17 இ-மெயில் ஐடிகள் இருக்கின்றன. நேரம் கிடைக்கும் போதெல்லாம், வெப்சைட்டில் ஹாலிவுட் ஆக்டர்களை சைட் அடிப்பாராம். தமிழ் கூறும் நல்லுலகிலிருந்து யாரும் உங்களைக் கவரவில்லையா என்று கேட்டதற்கு "இதுவரை நஹி" என்ற பதில் வந்தது.

"ராகிங் பண்ணுவாங்கன்னு ஆசை ஆசையா வந்தேன். ஏமாத்திட்டாங்க" என்று ஃபீல் செய்து கொண்டார் ஷாலினி. அவர் வேறு ஏதோ சொல்ல வாயெடுப்பதற்குள் அவரது கையைப் பிடித்து இழுத்தார் அனிதா. "அதோ பாரு மைக்ரோவைப்ட் எக்ஸ் வராரு. வா, போயிடலாம்."

அவர் காட்டிய இடத்தில் கட்டம் போட்ட சட்டை அணிந்த புரொஃபசர் ஒருவர் புன்னகையுடன் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

📷 + ✍ கங்கா



பொலிட் பீரோ





போன வாரம் கூட்டப்பட்ட தமிழக DPA-வின் ஆலோசனைக் கூட்டம் அதன் பார்ட்னர்களுக்கு தி.மு.க.வைத்த முதல் பரிட்சையாம். இதில் கலந்து



சில வாரங்களுக்கு முன்னால தன் மீது குறி வைத்து வீசப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல் 'சில பல' காரணங்களால் பெரிய அளவில் எடுபடாமல் போய் விட்டதால் மிகுந்த மனச் சோர்வுடன் இருந்தாராம் டாக்டர் கிருஷ்ணசாமி. சமீபத்தில் மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளிகள் தொடர்பான வழக்கின் தீர்ப்பு டாக்டரை வெகுவாகக் குஷிப்படுத்த, தற்போது மௌன உற்சாகத்துடன் விட்டதைப் பிடிக்க களமிறங்குகிறாராம்.

(ஏங்க அண்ணாச்சி! 'திருப்பாச்சி'ன்னு ஒரு படம் வெளி வருதாம்ல! வந்துடுமோ?)

● க்ளிக் : விவி

கொள்ளாத கட்சிகளை (தலைவர்களை) கழட்டி விடும் திட்டத்தை நாசுக்காக யாரோ சொல்லி வைக்க, பதறியடித்துக் கொண்டு வந்து கூட்டத்தில் கலந்து கொண்டாராம் சென்ற கூட்டத்தில் பங்கேற்காத ஒரு தலைவர். அடுத்த எக்ஸாம் செப்டெம்பர் 15க்குப் பிறகு நடக்குமாம்.

(வாசனுக்கு மட்டும் எதுக்கு எக்ஸிம்ஷனாம்?)

முகமது அலி ஜின்னா, சாவர்க்கர் குறித்து மணிசங்கர் அய்யர் பேசியதாக வெளியான தகவல் பற்றி கலைஞர் தெரிவித்த கருத்துகளை பூதாகாரமாக்கிவிட பலர் காத்திருந்தனராம். திடீரென இதுகுறித்து அய்யர் கலைஞருக்குக் கடிதமெழுத, விஷயம் புஸ்வாண மாகி விட்டதாம். இங்க ஒகே. டெல்லி விட்டுடுமா?

தமது இயக்கத்துக்கு ஆதரவா முழக்கமிட ஒரு டி.வி. சேனலும் இல்லையேன்னு சதா வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாராம் வைகோ. தங்களது தலைவரின் வருத்தத்தைப் போக்க தமிழ்நாட்டின் இரண்டு முக்கிய சானல்களை கலைப்புலி தாணு மூலம் சரிக்கட்டியுள்ளதாம் சம்பந்தப்பட்ட தரப்பு. அந்த சானல்கள் முதலில் தயங்கினாலும் பின்னர் விளம்பரதாரர் நிகழ்ச்சி என்ற பெயரில் (போர்வையில்) முழக்கமிட ஒத்துக் கொண்டுள்ளனவாம்.

(இனிமே நம்ம டி.வி. ரசிகர்களுக்கு நூறு காது வேணும்போல?)

போன வாரம் ஜுராசிக் பார்க் (தமிழ்) - துபாய் ஷோ தொடர்பா நட்சத்திர சேனலும் சூரிய சேனலும் அடித்துக் கொண்ட கதைதான் இப்போ சேனல் வட்டாரத்துல செம ஹாட்டான டாபிக்கா இருக்குது என்கிறது நம்ம சேனல் பட்சி. இவங்களோட இந்த 'ஆரோக்யமான' போட்டிய மௌனமா ரசித்துக் கொண்டிருக்குதாம் 'ஜெய ஜெய ஜக்கம்மா' தரப்பு. (பிளாஷ் பேக் கண்முன்னால வந்து அலைபாயுதோ?)

✍ கலை



கோணல் பக்கங்கள் பற்றி உங்களது விமர்சனத்திற்கு எனது பதில் சாகுறிவேதிதா,

தீ கிரேட்.

ஈ-மெயில் : சுப்ரியா

'38 முத்தக் காட்சிகள்' கட்டுரையில் சில துளிகளை மட்டும் கொடுத்துவிட்டு ஏங்க வைத்துவிட்டீர்கள். அழகான கட்டுரை.


- சிவ வாஹினி, வடசென்னை

'சினேகா உங்க ஃப்ரெண்டு மாதிரி' அருமையான டைட்டில் & மேட்டர்.

- அரவிந்த், துணைமேடு

உங்கள் கருத்துக்களை chennaiscan@kalkiweekly.com-ல் மெயிலலாம்.

பூமராங்






டேஸ்ட்காம்

உலகமே விவாபாரமயமாகி விட்ட நிலையில் கோடம்பாக்கம் மீனாட்சி கல்லூரியின் அருகிலுள்ள கபாபிஷ் (KEBABISH) அசைவ உணவகத்தைக் கண்டால் ஆச்சர்யமாய்த்தான் இருக்கிறது.

நாற்பது ரூபாய்க்கு மீல்ஸ் விற்கும் பிரபல உணவகங்கள் கூட கருணையேயில்லாமல் குடிக்க கடல் தண்ணீர் வைக்கும் காலத்தில் இருபது ரூபாய் மீல்ஸிற்கு மினரல் வாட்டர்! வயிற்றுக்குக் கெடுதல் என்று இங்கு கூல்ட்ரிங்ஸ்கள் எதுவும் விற்பதில்லை!

"நான் லண்டனில் உணவு தொடர்பான படிப்பும் பயிற்சிகளும் முறையாகக் கற்றுள்ளேன். அதன் வழியாக சமூகத்திற்கு என்னாலான சிறு தொண்டு" என்கிறார் இதன் இளவயது ஓனர் காதர்.

கிலோ ரூ.180க்கு விற்கும் முழுக் கோழியை நேரடியாக தீயில் வேக வைத்து தந்தூரியாக 95 ரூபாய்க்குத் தருகிறார்கள். கொலஸ்ட்ரால் நீக்கி சமைப்பதால் அக்கம் பக்கத்து டாக்டர்களெல்லாம் அடிக்கடி இங்குதான் கைநனைக்கிறார்களாம். இதற்கு மேலும் கபாபிஷின் தரத்திற்கு வேறு சான்று வேண்டுமா என்ன?




📷 ஷிவ் ✍ எழில்

ஓர் ஆண் உயரமாகவும் அழகாகவும் அதே சமயம் நகைச்சுவையாகவும் பேசிவிட்டால் எந்தப் பெண்ணிற்குத்தான் பிடிக்காமல் போகும். நான் வலியப் போகவில்லை. மரியாதை கொடுத்து பேசினான். நட்பு சுடர் விட ஆரம்பித்தது. ஒருநாள் கோவிலுக்கு அழைத்தான். அங்கு இன்னொரு பெண்ணை புன்னகையுடன் என்னிடம் அறிமுகப்படுத்தினான். அன்று மனம் உடைந்து போய் இன்றுதான் உங்களிடம் என் பாரத்தை இறக்கி வைக்கிறேன். ஓகே. எனக்கானவன் இவன் இல்லை என நினைத்து மீண்டும் புன்னகைக்கிறேன்.

- கலா, தாம்பரம்

சித்திரம்





உச்சாணி

ஜி.டி.நாயுடு உயிரோடுதானிருக்கிறார்!

யதார்த்தமாக ராஜேந்திரன் தமது கல்வித் தகுதியைக் கூறும்பொழுது நமக்கும் சிரிப்பு வந்து விடுகிறது. ஏனோ மூன்றாவது மூன்று முறையும் பெயிலாகியிருக்கிறார். பிறகு எட்டாவது வகுப்பை விட்டுப் பிரிய முடியாமல், 3 வருடம் அதிலேயே கழித்தவர் ஒரு வழியாக தமது 26 வயதில் மீசை கருகருவென வளர்ந்த பிறகே சவகாசமாக முடித்திருக்கிறார்.

ஆனால் இவரின் வியத்தகு சாதனைகள் மற்றும் திறமையின் முன்னால் எல்லாமே வெறும் தூசுதான். இவர் தயாரித்திருக்கும் மெகா சைக்கிளின் நீளம் என்ன தெரியுமா?



கிட்டத்தட்ட 10 அடி. தோராயமாக பாருக்கும் சீட்டுக்குமிடையே மூன்றரை அடி தூரம். 70 கிலோ எடையுள்ள சைக்கிளை மூன்று வருடங்களுக்கு முன்பு புதுப்பேட்டையில் வாங்கிய பொருள்களைக் கொண்டு 2,300 ரூபாய்க்கு செய்து முடித்திருக்கிறார். இதில் தினமும் கிண்டி, ராமாவரத்திலிருந்து, வில்லிவாக்கம் நாதமுனி வரை ட்ராவல் செய்ய இவருக்கு அரை மணி நேரமே ஆகிறது. பெடலை ஒரு மிதி மிதித்தாலே போதும் தெருமுனை வந்து விடுகிறது. எதேச்சையாக வழியில் பார்த்து மிரண்டு போன இயக்குனர் சேரன், விவரம் சேகரித்து அடுத்த படத்தில் சான்ஸ் தருவதாகச் சொல்லியிருக்கிறார் சைக்கிளிடம்.


"இது என்னங்க, அடுத்ததா சைக்கிள்ல கழுதும் இறக்கை வைச்சு, செயினே இல்லாத, ஸ்பிரிங்கில் ஓடும் அலுமினியத்திலான பறக்கும் சைக்கிள் தயாரச்சிட்டிருக்கேன்" என பிரமிப்பூட்டுகிறார் இந்த 39 வயது இளம் விஞ்ஞானி.

வழக்கமாக தூக்கத்தில் இவருக்கு புகைவுகளும் புது யுக்திகளும் தோன்ற, எழுந்து அவற்றை வரைந்து விட்டுத்தான் மீண்டும் படுப்பாராம். ஆமாம், ஜி.டி.நாயுடு ஒன்றும் மரித்துப் போகவில்லை. இவர் உருவில் மறுபிறவியெடுத்து வந்திருக்கிறார் என்றே தோன்றுகிறது.

✍ சந்த

உங்க ஏரியாவில் ஃபோகஸ் பண்ண வேண்டிய பிரச்னைகள், உங்களுக்குத் தெரிந்த 'உச்சாணி' மனிதர்கள், கல்லூரியில் நடக்கும் ஸ்பெஷல் விழாக்கள், உண்மையான காதலிஸங்கள், உங்க நாக்குக்குத் தெரிந்த டேஸ்ட்காம்கள் இப்படி எதுவானாலும் தெரியப்படுத்துங்க. அதுக்கு எங்களோட இன்பாக்ஸ், போஸ்ட் பாக்ஸ், போன் ரிசீவர் மூணும் தயாராயிருக்கு. (மனசும் தாங்க!) ஒரே ஒரு கண்டிஷன். உங்க மேட்டர் சென்னை ஸ்கேன் டேஸ்ட்டுக்கே இருக்கணும்.

முகவரி: **சென்னை ஸ்கேன்,**
47 - NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097
போன்: 22345622, 23, 24
Email: Chennaiscan@kalkiweekly.com



ஹாய் சென்னை!

Registered with the Registrar of Newspaper of India under No. 104157 " Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05" Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 "
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki Issue Dated 12.9.2004

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered [illegible] (CCP) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05* Registered as a Newspaper in Srilanka

